Registered as a News Paper

ஈழநாதம்

விலை: 15.00
பக்கம் : 20

வெள்ளிநாதம் Weekly

நாதம் – 14 வெள்ளி – 39 21 – 27 – நவம்பர் – 2003



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 21 .11. 2003
மின் அஞ்சல : Ehatham@sltnet.lk

நவம்பர் தந்த மாற்றங்கள்

ஈழத்தமிழர்களின் வாழ்வில் நிமிர்விற்குரிய மாதம் நவம்பர். அந்த மாதத்தின் புனிதத்திற்குரிய மாவீரர் வாரம் ஆரம்பமாகி இருக்கிறது.

எப்போதும் போலவே அமைதியற்ற காலங்களில் வரும் அமைதியான வாரத்தையே விதிவிலக்கில்லாது, தமிழர்கள் இம்முறையும் பெற்றிருக்கிறார்கள். அது போலவே கொழும்பும் 'கனத்த நாளில் கடல் கொந்தளிப்பது போல' இந்த நவம்பரிலும் வரலாற்றில் மிகவும் சிக்கல் வாய்ந்த நெருக்கடிக்குள் மூழ்கிக்கிடக்கிறது.

1989ஆம் ஆண்டு, மாவீரர்களை நினைவு கூருவதற்கென ஒரு நாளைப் பிரகடனப்படுத்தியதிலிருந்து ஒவ்வொரு நவம்பர் மாதங்களும் போராட்ட வரலாற்றில் முக்கியத்துவமான திருப்பு முனைகளை ஏற்படுத்தியே வந்தன. அத்தகைய திருப்பு முனைகள் தந்த நிமிர்வுடனேயே வருடாவருடம் தமிழர்கள் தமது தேசிய வீரர்களை நினைவு கூர்வார்கள்.

அதிலும் குறிப்பாக ஒவ்வொரு நான்கு வருடங்களுக்குப் பின்னர்வரும் நவம்பர் மாதங்கள் போராட்டப் பாதையில் மாபெரும் திருப்பு முனைகளுடன் வந்ததை எமது வரலாற்றை நோக்கும் எவரும் கண்டுகொள்ள முடியும்.

முதலாவது மாவீரர் நாள் இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் தோற் கடிக்கப்பட்டு, அக்காலத்தை ஈழத்தமிழர்கள் வென்று கொண்டிருந்ததொரு சூழலில் வந்தது. அதன் பின்னர் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களின் பின்னர் நான்காவது வருடத்தில் எல்லா நெருக்கடிகளையும் உடைத்து நொருக்கிய 1993 பூநகரி சமரின் பின்னால் ஐந்தாவது மாவீரர் நாள் வந்தது. அது இரண்டாம் ஈழப்போரில், புலிகளின் தலைமையின் ஆற்றலையும், தமிழர்களின் விடுதலை வேட்கையின் வீச்சையும் சர்வதேசத்திற்கும் சிங்கள தேசத்திற்கும் உணர்த்தி, அதை முடிவிற்குக் கொண்டுவந்தது.

அதனை அடுத்து இரண்டு வருடங்களின் பின் 1995 மாவீரர் தினத்தைத் தமது பண்பாட்டுத் தலைநகரின் மையமான வலிகாமத்தைப் பறிகொடுத்த நிலையில் மிகுந்த துயரத்தோடு நினைவு கூர்ந்த தமிழினம், விடுதலைப்போரின் அடுத்த முன்னோக்கிப் பாய்ச்சலுக்கான மனத்திடத்தைப் பெற்றுக்கொள்ளும் தினமாக அதைக் கடைப்பிடித்தது. அதன் பிரதிபலிப்பாகத்தான், அடுத்த நான்கு வருடங்களின் பின் 1999 மாவீரர்நாளைத் தமிழர்கள் எதிர் கொண்டார்கள்.

மாபெரும் இராணுவ சாதனைகளை ஈழப்போரில் நிகழ்த்திய 'ஓயாத அலைகள் - 03' சமரை தற்காலிகமாக இடைநிறுத்தி அந்த ஆண்டின் மாவீரர் நாளைக் கடைப்பிடித்த தமிழினம், அந்த நவம்பரிலும் அதன் நீட்சியாய் அடுத் தடுத்து வந்த மாதங்களிலும் வெல்லப்பட முடியாத தமது போரிடும் சக்தியை பட்டாவர்த்தனமாக எல்லோருக்கும் நிரூபித்தது.

இப்போது, சுமார் இரண்டு வருடங்களுக்கும் மேலான அமைதிக் காலத்தை உள்ளடக்கிய நான்கு வருடங்களின் பின்னான காலகட்டத்தில் 2003 மாவீரர் நாள் வந்திருக்கின்றது. வழமையாகப் பெரும் படையெடுப்புக்களை நிகழ்த்திக் கொழும்பு அரசியலை உலுப்பி எடுத்துவிட்டுத் தமது மாவீரர் நினைவு நாளைக் கடைப்பிடிக்கும் புலிகள் இம்முறை தமது இடைக்காலத் தன்னாட்சி வரைபைச் சர்வதேசத்தின் முன் வைத்ததன் மூலம் சிங்கள அரசியலைத் திணறடித்திருக்கிறார்கள் என்று பலரும் கருதும் சூழலில் வந்திருக்கும் இம்முறை மாவீரர் நாள் எல்லோரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறது.

இன்று, எதிர்பார்ப்புகளுடன் நடந்த சமாதானப் பேச்சுக்கள் இடைநடுவில் நிற்கின்றன. நாளுக்குநாள் சிங்கள அரசியலில் குழப்பங்கள் மிகுந்தவண்ண முள்ளன. தமிழர்கள் இரத்தம் சிந்தி கண்ணீர் சிந்தி உலகிற்கு எதை உணர்த்த விளைந்தார்களோ அதையே சிங்கள தேசம் நாற்சந்தியில் நின்று உரைக்கிறது. இப்படியானதொரு வரலாற்றுச் சூழலில் தமது விடுதலைக்கான பயணத்தை எவ்வாறு தொடர்ந்து செல்வது என்ற செய்தியை தமது தலைவரிடமும், அதற்கான உறுதியைத் தமது மாவீரர்களிடமும் எதிர்பார்த்தபடி தமிழினம் காத்திருக்கிறது.

தூரனின் பார்வையில்

சந்திரிகா - ரணில் வெளிப்படும் பலவீனங்கள்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேயான சமாதானப் பேச்சுவார்த்தைகளின் எதிர்காலம் இன்னமும் நிச்சயிக்கப்பட முடியாத ஒன்றாக - சந்தேகத்துக் குரிய ஒன்றாக இருக்கையில், மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என சர்வதேச அழுத்தம் சிறிலங்காவின் ஆளும் மற்றும் அதிகார பீடங்கள் மீது பல முனைகளாலும் ஏற்பட்டுள்ள நிலையில், இப்போது சனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே இணக்கப் பாடொன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் பல்வேறுபட்ட தரப்புக் களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது ஒன்றும் இருதரப்பினரின் புரிந்துணர்வுடனும் விருப்பத்துடனும் மேற்கொள்ளப்படும் ஒன்றாக இருக்கப்போவதில்லை.

மாறாக தவிர்க்க முடியாத ஒரு சூழலில் இந்த முயற்சிகளுக்கு இணங்கிப் போகவேண்டிய, அல்லது இவற்றை அனுசரித்துப் போக வேண்டிய நிலை இருதரப்பிற்கும் ஏற்பட்டுள்ளதும் உண்மை.

குறிப்பாக சனாதிபதியின் அமைச்சுப்பறிப்பு அதிரடி நடவடிக்கையால் ஏற்பட்ட பின்விளைவுகள் அவர் எந்த வகையிலும் எதிர்பார்க்காத ஒன்றேயாகும். அமெரிக்காவில் ரணில் விஜயம் மேற்கொண்டிருந்த வேளையில் சந்திரிகா நடத்திய இந்த அரசியல் சதி, ஒரு தீர்க்கதரிசனமற்ற, அரசியல் முதிர்ச்சியற்ற ஒருவரின் நடவடிக்கையாகவே உணரப்பட்டது.

இது சந்திரிகாவின் சமாதானம் குறித்த உள்நோக்கங்களை மட்டுமல்ல அவரின் அவசரபுத்தியையும் துலக்கமாக வெளிப்படுத்தியது.

இதேவேளை சந்திரிகா மேற்கொண்ட சதி குறித்து உள்ளூர கடும் ஆத்திரமும், கொதிப்பும் ரணிலுக்கு ஏற்பட்டிருந்தாலும், அவர் அதனை தான் எந்தக்கணத்திலும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஒன்றாகக் காண்பித்து அலட்டிக்கொள்ளாமல் தான் அமெரிக்கா போன விடயத்தை முற்றாக முடித்துக்கொண்டு சாவகாசமாக, தான் மேற்கொண்டு செய்யவேண்டிய விடயங்களுக்கான உரிய ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு நிதானமாக நாடு திரும்பிய விதமும், தனது நாடு திரும்பலை தனக்குரிய மக்கள் ஆதரவு சக்தியை வெளிப்படுத்துவதன் மூலம் சந்திரிகாவுக்கு குழப்பத்தையும், பீதியையும் ஏற்படுத்தும் வகையில் பிரமாண்ட நிகழ்வாக ஆக்கிக் காட்டியதும் முக்கியமானவைகளாகும்.

ரணில் எப்போதும் போல தனக்கான, அமெரிக்கா உட்பட மேற்குலக சமூகத்தின் ஆதரவுப் பலத்தை சமாதானத்தின் பேரால் தக்கவைத்துக்கொண்டது அவரது ராஜதந்திரமாகும்.

இந்த ராஜதந்திரத்தின் அடிப்படையில் அடுத்து அவர் மேற்கொண்ட அரசியல் நகர்வுகள் சந்திரிகாவின் அதிரடிகளுக்கு ராஜீக ரீதியிலான, நியாய பூர்வமான பதிலடிகளாகவே இருந்தன.

சமாதான நகர்வுகளை முன்னெடுக்கும் பொறுப்பினை சட்ட மற்றும் அரசியல் ரீதியிலான அதிகாரங்கள் குவிமையம் கொண்டிருக்கும் தன்மையினை ஆதாரப்படுத்தி சனாதிபதியிடம் ஒப்படைப்பதாக கூறியது அதன் உச்சமாகும்.

இது சந்திரிகா எதிர்பார்க்காத ஒன்றேயாகும்.

அதுவும் சமாதானப் பேச்சுக்களை, சர்வதேச சமூகத்தினர் வலியுறுத்திவரும் சூழலில் சமாதானத்திற்கான யுத்தம் என்ற கோட்பாட்டின் நாயகியான சனாதிபதியையே பொறுப்பேற்கச் சொல்வது கடுமையான அரசியல் உத்தியாகும்.

இடைக்கால நிர்வாக அதிகார சபை குறித்த வரைபு விடுதலைப்புலிகளால் ரணில் அரசிடம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து அது, தொடர்பாக என்ன முடிவு எடுப்பதென ரணில் தினறியவேளையில் சந்திரிகாவின் அதிரடி அவருக்கு கை கொடுக்க, அவர் தனது சாணக்கியத்தனத்தை பயன்படுத்தி சனாதிபதியிடம் சமாதானச் செயற்பாடுகளை பொறுப்பளிக்க முன்வந்தமையானது பல குழப்பங்களுக்கும் சில திருப்பங்களுக்கும் வழிவகுத்துள்ளது.

இதேவேளை நோர்வே அரசும் தனது சமாதான அனுசரணையாளர் பொறுப்பிலிருந்து தற்காலிகமாக விலகுவது குறித்த அறிவித்தலை வெளியிட்டதன் மூலம் பிரச்சினை முழுவதற்கும் சந்திரிகாவே பொறுப்பு என்ற கருத்துருவாக்கம் மக்களிடையே பரவியதன் காரணமாக சனாதிபதி என்ற வகையில் அவருக்கான அழுத்தங்கள் மேலும் அதிகமாகும் சூழ்நிலையே உருவாகியது.

சந்திரிகாவின் நிலை பிள்ளையார் பிடிக்கப்போய் அது குரங்காகிவிட்ட தன்மை போலாகியது.

ரணிலுடன் ஏதோ வொருவகையில் ஒரு இணக்கப்பாட்டிற்கு வரவேண்டிய புற அழுத்தம் அவருக்கு நாகரிகமான முறையில், சமாதானத்தின் பேரால், கொடுக்கப்பட்ட போதுதான் தேசிய அரசு குறித்த அவரது அடுத்த அரசியல் சதிக்கான திட்டம் குறித்த அறிவித்தலை அவர் வெளியிட நேர்ந்தது.

இது குறித்த சந்திரிகாவின் உள்நோக்கம் ரணில் அறியாததல்ல. பாம்பின் கால் பாம்பறியாததா?

தேசிய அரசு என்ற திட்டம் ஐ.தே. முன்னணி அரசை தனது நோக்கங்களுக்குள் கொண்டுவரும் இலக்கினைக் கொண்டதே என்பதால் அதற்கு ரணில் உடன்படவில்லை.

இது சந்திரிகாவுக்கு கிடைத்த அடுத்த தோல்வி.

ரணிலின் நிபந்தனைகளுக்கு சந்திரிகாவால் வளைந்து கொடுக்க முடியாத நிலையில், சந்திரிகாவின் நோக்கங்களுக்கு ரணிலால் ஒத்துப்போகவே முடியாது என்பது அரசியல் யதார்த்தம்.

இப்போதைய நிலையில் எந்த வகையிலேனும் புலிகளுடன் பேசவேண்டிய காலக் கட்டாயம் சந்திரிகாவை மட்டுமல்ல ரணிலையும் அழுத்தங்களுக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறது.

அதிகார அரசியல் கோட்பாடும், பேரினவாத சிந்தனைகளும் வரட்டுக்கௌரவ போட்டாபோட்டியும், யார் யாருக்கு விட்டுக் கொடுப்பது, யார் யாரிடம் சரணடைவது என்ற முடிவை எட்ட முடியாமல் தடுத்துக்கொண்டிருக்கின்றன.

அரச நிர்வாகத்தை தொடர வேண்டுமானால் பேச்சுவார்த்தைகளும் தொடரப்படவேண்டும்.

புலிகள் புரிந்துணர்வு மற்றும் போர் நிறுத்த உடன்பாடு ஆகியவற்றிலான தமது உறுதிப்பாட்டினை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தியுள்ள நிலையில் மீண்டும் போரை முன்னெடுத்தல் என்பது அரச தரப்பிற்கு சாத்தியமற்ற, சாதகமற்ற முடிவாகவே இருக்கும்.


எனவே ரணில் சமாதானம் என உரத்துக் குரல் எழுப்பினால் சந்திரிகா அதை விடவும் ஓங்கிக் குரல் கொடுக்க வேண்டிய நிலை அவர்களின் சுய விருப்பு வெறுப்புகளுக்கப்பால் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் ரணில் - சந்திரிகா இருவரிடையேயான பேச்சுவார்த்தைகள் ஒட்டவும் வெட்டவும் முடியாத நிலைப்பாடுகளில் தொடர்வது இரு தரப்பினரதும் பலவீனத்தை வெளிக்காட்டுவதாகவே உள்ளது.

கடைசியாக நடைபெற்ற சந்திப்பின்போது பிரதமருக்கும் - சனாதிபதிக்கும் இடையே தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் இணக்கத்தை ஏற்படுத்த ஒரு குழு அமைக்க இணக்கம் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒவ்வொரு குழுக்கள் அமைக்கப்பட்டே உள்ளன.

எந்தக் குழுவும் எந்தப் பிரச்சினைக்கும் அதுவும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை எதற்கும் நியாயமான, உறுதியான, தீர்வைக் கண்டதாக வரலாறு இல்லை.



☞ தீங்கானது ஒன்று நெடுநாள் தொடர்ந்து விட்டால், உலகம் அதற்குப் பழகிவிடுகிறது. – ஜவாஹர்லால் நேரு

உடனடியாகப் போர் மூளும் வாய்ப்புக்கள் உண்டா?



சமாதான முயற்சிகளிலிருந்து தற்காலிகமாக விலகியிருப்பது என்ற நோர்வேயின் முடிவு பரவலாக அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. நிலமைகள் யுத்தத்தை நோக்கிச் செல்வது போன்ற ஒரு தோற்றத்தைப் பெருப்பிப்பதில் சில ஊடகங்களுக்கும் பங்கிருப்பது போலத் தோன்றுகிறது.

ஆனால், உண்மை நிலை என்னவெனில் - நோர்வே சமாதான முயற்சிகளில் தன்னுடைய பாத்திரத்தை மட்டுப்படுத்தியுள்ளது என்பதே. அவர்கள் முற்றிலுமாக சமாதானத்தைக் கைவிட்டுவிடவில்லை. ஏனெனில் புரிந்துணர்வு உடன்படிக்கை இப்பொழுதும் அமுலில் உள்ளது. அத்தோடு, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு இப்பொழுதும் களத்தில் தான் நிற்கிறது.

எனவே சமாதானம் செய்வதற்கான அடித்தளம் முற்றிலுமாகப் பொறிந்து விடவில்லை.

மாறாக, நோர்வேயின் நடவடிக்கையானது, சமாதானம் பொறிந்து விடுவதைத் தடுக்கும் நோக்கிலானது என்பதே சரி.

அது ஒரு குறியீட்டு நடவடிக்கை. அதைத் தனிய நோர்வேயின் முடிவு என்று எடுக்கத் தேவையில்லை. சமாதானத்தை மேற் பார்வை செய்யும் மேற்குநாடுகளின் விருப்பங்களை நோர்வே பிரதிபலிக்கிறது என்பதே சரி.

கொழும்பில் இப்பொழுது ஒரு அரசியல் வெற்றிடம் நிலவுவதாக நோர்வே கூறுகிறது.

இதில் ஒரு செய்தியுண்டு. அதாவது சனாதிபதி சந்திரிகா மேற்கொண்ட நடவடிக்கைகளால்தான் கொழும்பில் அப்படியொரு அரசியல் தலைமைத்துவ வெற்றிடம் உண்டாகியுள்ளது என்பது இங்கு மறைமுகமாகக் கூறப்படுகிறது. அதோடு, சந்திரிகாவாலும் அந்த வெற்றிடத்தை நிரப்ப முடியவில்லை என்பதும் மறைமுகமாக கூறப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் இப்போது காணப்படும் நிலமைகளுக்குச் சந்திரிகாவை மறைமுகமாகக் குற்றஞ் சாட்டும் தொனியும் அதிலிருக்கிறது.

எனவே நோர்வேயின் அறிவிப்பின் உள்நோக்கம் சந்திரிகாவின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதே. அதாவது சமாதானத்தின் வழியில் காணப்படும் தடைகளை அகற்றுவதே.

சந்திரிகா இந்த அழுத்தங்களுக்கு வளைந்து கொடுப்பாரா? அல்லது முரட்டுத்தனமாக அரசியல் நாகரிகத்தை மீறி முடிவுகளை எடுப்பாரா? அல்லது விழுந்தும் மீசையில் மண்பட வில்லை என்பதுபோல சில விட்டுக் கொடுப்புக்களுடன் சமரசத்துக்கு உடன்படுவாரா?

அவர் எப்படியும் முடிவுகளை எடுக்கலாம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அவர் உடனடியாக ஒரு யுத்தத்தைத் தொடங்க முடியாது. அதற்கு மூன்று பலமான காரணங்கள் உண்டு.



முதலாவது, சமாதானத்தின் தன்மை பற்றியது. இரண்டாவது, நோர்வே கூறுவது போல கொழும்பில் காணப்படும் அரசியல் வெற்றிடத்தின் பாற்பட்டது.

மூன்றாவது, புலிகள் சமாதானத்துக்கான தமது பொறுப்புக்களை அதிகம் மதித்து நடப்பது.

இம்மூன்று காரணங்களையும் சற்று விரிவாகப்பார்ப்போம்.

நிலாந்தன்

முதலாவது சமாதானத்தின் தன்மை பற்றியது. இது இப்பத்தியில் கடந்த வாரமும் கூறப்பட்டது.

அதாவது இம்முறை சமாதானம் ஒரு சர்வதேச யதார்த்தமாயிருக்கிறது. அதை முறித்துக் கொண்டு யுத்தத்தைத் தொடங்கும் போது யுத்தச் செலவுகளையும் தோல்விகளையும் தாங்கும் சக்தி அரசாங்கத்துக்கிருக்கப்போவதில்லை. சமாதானத்தை முறிப்பதென்பது வெளிநாட்டு உதவிகளையும் முறிப்பதுதான். ஏனெனில், இம்முறை நிதி தரப்பட்டது சமாதானத்துக்கே.

தவிர சமாதானத்தை முறித்தது புலிகள் அல்ல என்ற ஒரு நிலை உள்ளவரை புலிகளை சர்வதேச அளவில் தனிமைப்படுத்துவது கடினம். கடந்த 21மாதகால சமாதான முயற்சிகளின் விளைவாக புலிகளின் சர்வதேச அந்தஸ்து ஒப்பீட்டளவில் உயர்ந்து வருகிறது.

எனவே, சந்திரிகா சில பிராந்திய அரசுகளை நம்பியே சண்டை செய்ய வேண்டியிருக்கும். குறிப்பாக, ரணிலுக்கு இருப்பது போன்ற ஒரு சர்வதேச பாதுகாப்பு வலை அவருக்கிருக்காது. வேண்டுமானால் அவர் ஒரு பிராந்தியப் பாதுகாப்பு வலையைப் பின்னக்கூடும். ஆனால் அது மேற்குநாடுகளுக்கும் இப்பிராந்தியத்துக்கும் இடையிலான வர்த்தக நலன்களுடன் நேரடியாக மோதுமொன்றாக அமைவதற்கான வாய்ப்புகள் மிகக்குறைவே. இதெல்லாம் முதற்காரணம்.

இரண்டாவது காரணம், நோர்வே கூறுவதுபோல கொழும்பில் காணப்படும் அரசியல் தலைமைத்துவ வெற்றிடம்.

அதாவது அரசியல் அதிகாரம் இரண்டாகப் பிளந்திருக்கும் ஒரு நாடு யுத்தத்துக்குத் தலைமை தாங்குவது மிகவும் கடினம்.

அரசியல் அதிகாரம் இரண்டாகப் பிளந்திருந்த காரணத்தினாலேயே சமாதானம் செய்வதில் தடங்கல் உண்டாகியது.

யுத்தமோ சமாதானமோ எதைச் செய்வதென்றாலும் ஸ்திரமான ஒரு அரசியல் தலைமைத்துவம் வேண்டும்.

கொழும்பில் இப்போதுள்ள அரசியல் தலைமைத்துவ வெற்றிடம் நீடித்திருக்கும் வரை சமாதானம் மட்டுமல்ல யுத்தத்தையும் கூடச் செய்யமுடியாதுதான்.

சமாதானத்துக்கான மக்கள் ஆணையைப் பெற்றவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு நாடாளுமன்றத்தை வைத்துக்கொண்டு சண்டை செய்வது என்பது சனாதிபதிக்கு முடியாத காரியமாயிருக்கும். எனவே கொழும்பில் இப்போதுள்ள அரசியல் தலைமைத்துவ வெற்றிடம் சண்டை செய்ய உகந்தது அல்ல. சிலசமயம் சண்டையைத் தொடங்கினாலும் அது புலிகளுக்கே சாதகமாகமுடியும். இது இரண்டாவது காரணம்.

மூன்றாவது, இம்முறை சமாதானம் செய்வதில் புலிகள் காட்டிவரும் அசாதாரணப் பொறுமை.

அதாவது சமாதானம் தங்கள் தரப்பினால் முறிக்கப்படும் ஒருநிலை வரக்கூடாது என்ற ஆகக் கூடியபட்ச சிரத்தை புலிகளிடம் காணப்படுகிறது. இதற்கு முந்திய எல்லாச் சமாதான முயற்சிகளின் போதும் சமாதானத்தை முறித்தது புலிகளே என்று குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது. ஆனால் இம்முறை சமாதானம் செய்வதில் கொழும்புத் தலைமைகளுக்கு இருக்கவேண்டிய பொறுப்புணர்ச்சியைச் சுட்டிக்காட்டி மேற்கு நாடுகள் அறிக்கைவிடும் ஒரு நிலை தோன்றியிருக்கிறது.

இது ஈழப்போரில் முன்னெப் பொழுதும் நிகழ்ந்திராத ஒரு விசயம்.

எனவே, இம்முறை சமாதானம் புலிகள் தரப்பிலிருந்து முறிக்கப்படும் வாய்ப்புக்கள் மிக அருந்தலாகவே காணப்படுகின்றன.

இப்படி இந்த மூன்று காரணங்களின் அடிப்படையிலும் சிந்திக்குமிடத்து இப்போதுள்ள ஸ்திரமற்ற அரசியலானது யுத்தம் ஒன்றை நோக்கிப் போவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைந்தளவே காணப்படுகின்றன.



அரசியல் அதிகாரம் இரண்டாகப் பிளந்திருக்கும் ஒரு நிலை உள்ளவரை இரண்டு பெரிய கட்சிகளுமே சமாதானத்தைத்தான் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தப் போகின்றன. இதில் ரணிலின் பலமும் தளமும் சமாதானம் தான். எனவே தான் சந்திரிகா, ரணிலை வீழ்த்துவதென்றால் சமாதானத்தையும் முறிக்க வேண்டும் என்று நினைக்கிறார்.

ஆனால் சமாதானத்தை உடைப்பது என்பது அவரைப் பொறுத்தவரை ரணிலை வீழ்த்துவதற்கு மட்டும்தான். அதற்குமப்பால் சமாதானத்துடன் அவருக்கு எந்த விதமான ஜென்மப்பகையும் இருப்பதற்கு வாய்ப்பில்லை. தன்னை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஒரு தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் இருந்து தீப்பியவர் என்ற ஒரு காரணத்துக்காக அவர் யுத்தத்தின் பக்கமே நிற்கவேண்டும் என்றில்லை. அவருக்குத்தேவை அதிகாரம். அதை யுத்தத்தின்மூலமோ அல்லது சமாதானத்தின் மூலமோ எதன் மூலம் வேண்டுமானாலும் பெற்றால் சரி,

எனவே ரணிலை வீழ்த்தும் அதேசமயம் மேற்கு நாடுகளை அதிகம் பகைக்காத விதத்தில் சமாதானத்தையும் பாதுகாக்க முடியுமென்றால் அப்படியொரு தெரிவே இப்போதைக்கு அவருக்குள்ள மிகப் பிரகாசமான ஒரு தெரிவாயிருக்கும். அப்படியொரு தெரிவை நோக்கி சில நகர்வுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தோன்றுகிறது.

சமாதானத்துக்கான புதிய அனுசரணையாளர்கள் பற்றி இப்பொழுது கதைக்கப்படுவதையும் இப்படித்தான் பார்க்கவேண்டியிருக்கிறது.

பாதுகாப்பு அமைப்பு இப்பொழுது அவரிடமிருக்கிறது. எனவே யுத்த நிறுத்தத்தை உடைத்து விடக்கூடிய எந்த ஒரு சிறு அசம்பாவிதமும் நடந்துவிடாத படிநிலமைகளைக் கையாளவேண்டிய ஒரு மிக இக்கட்டான நிலையில் அவர் இப்போதிருக்கிறார்.

இது ஒரு சுவையான முரண்,

எந்த யுத்தநிறுத்தம் அவருடைய எதிரியின் பலமாயிருக்கிறதோ அதையே அவரும் பாதுகாக்க வேண்டிய ஒரு தர்மசங்கடமான நிலை.

அரசியலமைப்புக்கும் அரசியல் நாகரிகத்துக்குமிடையில் இருக்கக்கூடிய ஆகக்கூடிய பட்ச பக்குவமான ஒரு தெரிவை அவர் எடுக்க வேண்டியிருக்கிறது.

யுத்தத்துக்குப் போகாத அதேசமயம் ரணிலைப் பலப்படுத்தாத ஒரு சமாதானத்தைப் பற்றி அவர் சிந்திக்கவேண்டியிருக்கிறது.

கொழும்பில் இப்பொழுது அதிகம் நித்திரைகெட்ட ஒரு அரசியல்வாதி அவராகத்தான் இருக்க முடியும்.

(இப்பத்தி, 18.11.2003 இல் எழுதப்பட்டது.)

ஓகோ! அப்படியா!



தினமினவிற்கு. ஆனந்தசங்கரி.

மூன்று அமைச்சுகளைப் பறித்தமையானது சனாதிபதியின் துணிச்சலான நடவடிக்கை.

ஓகோ! அப்படியா!



பி. பி. சி. யில் அஸ்வர்.

கால்களை இறுகக்கட்டி விட்டு மரதன் ஓடச் சொல்வது போல் உள்ளது சனாதிபதியின் நடவடிக்கை.

ஓகோ! அப்படியா!



பி. பி. சி. யில் ரவுப் ஹக்கீம்.

இந்தியா போன்ற அனுசரணையாளர் மூலம் சனாதிபதி - பிரதமர் இடையே இணக்கநிலை ஏற்படுத்தலாம்.

ஓகோ! அப்படியா!



கடற்படையினருக்கு தயா சந்தகிரி.

சந்தேகத்திற்கிடமான கப்பல்கள் மீது இரகசியமான முறையில் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது கண்காணிப்புக் குழுவினரை அழைத்துச் செல்ல வேண்டாம்.

ஓகோ! அப்படியா!



பேட்டியில். லல்லு பிரசாத் யாதவ்.

சோனியாவை நாட்டின் ராணியாக ஆக்குவேன்.

ஓகோ! அப்படியா!



செய்தியாளர்களுக்கு. விமல் வீரவன்ச.

வெளிநாட்டவர் களது கைப்பொம்மையான ரணிலோ அல்லது நோர்வேயோ அல்லது பிரபாகரனோ இலங்கையின் எதிர்காலத்தை தீர்மானிக்கமுடியாது. நாட்டுமக்களே தீர்மானிக்க வேண்டும்.

ஓகோ! அப்படியா!



செய்தியாளர்களிடம். ஜெயராஜ்பொன்னாண்டோ புள்ள

சி. சு. கட்சியிலிருந்து விலகப்போவதுமில்லை. ஐ. தே. கட்சியில சேரப்போவதுமில்லை.

நறுக்கென...

சந்திரிகாவின் நாடகமும், நடிப்பும்



விடுதலைப்புலிகளுடன் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் நோக்குடன் பேச்சுவார்த்தைகளுக்கு போகத் தான் தயார் என்று சந்திரிகா கூறியுள்ளார்.

பிரபாகரன் தனது நம்பிக்கைக்குரிய நண்பரல்ல... என்றாலும் அவருடன் சமாதானம் குறித்து பேசுவதற்கு தான், தயார் என்றும் அவர் பின் விளக்கம் அளித்துள்ளமை தான் முக்கிய மானது.

பிரபாகரன் தனது நம்பிக்கைக்குரிய நண்பரல்ல என்ற அவரின் கூற்று, பிரபாகரன் எப்போதாவது தனது நம்பிக்கைக் குரிய நண்பராக இல்லாவிட்டாலும், நேர்மையான ஒரு தென்னி லங்கை அரசியல் தலைவி என்றாவது ஏற்றுக்கொண்டுள்ளாரா என்ற வினாவையும் எழுப்பவே செய்கிறது.

ஆனால் இந்த வினாவுக்கு விடை 'இல்லை' என்பதேயாகும். 1990களின் மத்தியில் சந்திரிகா ஆட்சிபீடம் ஏறி சமாதானப் பறவையாக தன்னை இனம்காட்டி பேச்சுக்களை தொடர்ந்தபோதே சந்திரிகாவின் உள்ளே மறைந்திருந்த போர்க்கழுகு ஒன்றின் இரத்தப்பசியையும் பிரபாகரன் இனம் கண்டுகொண்டதால்த்தான், சொற்ப நாட்களுக்குள்ளேயே அந்த பேச்சுவார்த்தை நகர்வுகள் மந்த நிலையை அடைந்தபோது பிரபாகரன் தமிழர் தரப்பின் நிலையை சமாதானத்திற்கு அப்பால் நின்று உறுதியாகத் தீர்மானித்துக்கொண்டார்.

அப்போதே சந்திரிகா ஒரு நம்பகமான தென்னிலங்கை அரசியல்வாதியாகவோ, சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய உறுதிமிக்க தலைவியாகவோ, பிரபாகரன் மட்டுமல்ல, தமிழ் மக்களும் கூட ஒட்டுமொத்தமாக நம்பவில்லை என்பதே உண்மை.

அதனை சந்திரிகா தனது நடவடிக்கைகள் மூலம் பின்னர் நிரூபித்துக்காட்டியது வரலாறு.


இப்போது பிரதமருடன் எக்காலத்திலும் இணைந்து செயற்படவே முடியாது என்று பகிரங்கமாகவே கூறிக்கொண்டு, தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைக்க வருமாறு சந்திரிகா அழைப்பு விடுத்திருக்கின்றமையும் இதேபோன்ற ஒன்றேயாகும்.

ரணில் நாட்டில் இல்லாதவேளை துரோகத்தனமான ஒரு அரசியல் சதி மூலம் அவரது தலைமையிலான அரசை பலவீனப்படுத்தும் வகையில் அமைச்சுப் பொறுப்புகளை அபகரித்துக்கொண்ட சந்திரிகா அதனால் தான் எதிர்பாராத நெருக்கடிகளை சந்திக்க நேர்ந்ததும் நல்லிணக்க அரசுக்கு அழைப்பு விடுத்து நாடகமாடுகிறார்....

பிரபாகரனுடன் பேசத் தயார் என்றும் நடிக்க ஆரம்பித்துள்ளார். இது தான் சந்திரிகாத்தனம்;

இன்றைய சர்வதேச சூழலில் இந்த நடிப்பும் நாடகமும் எடுபடப்போவது கிடையாது... இதுவே இன்றைய அரசியல் யதார்த்தமுமாகும்.

பௌத்த பீடங்களும் மகா சங்கமும்



'யுத்தம் சரணம் கச்சாமி'
'யுத்தமே சரணம் கச்சாமி'
'யுத்தம் மட்டுமே சரணம் கச்சாமி'

பௌத்த மகாசங்கத்தின் இன்றைய பிரார்த்தனைக் கோஷம் இதுவாகவே உள்ளது.

சனாதிபதியின் நடவடிக்கைகளால் நாட்டில் மீண்டும் யுத்த அபாயம் ஏற்பட்டுள்ளது என்று பிரதமர் மல்வத்தை மகாநாயக்க தேரரிடம் கூறியுள்ள அதேசமயம், அரசியல் நெருக்கடிக்கு தீர்வுகாண பிரதான கட்சிகள் இணைய வேண்டும் என மல்வத்தை பீடாதிபதியும் கோரிக்கை விடுத்துள் ளமையானது, அவர் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதை விரும்பவில்லையென்பதையே உணர்த்துவதாக உள்ளது.

அண்மையில் அஸ்கிரிய பீடாதிபதியும் சமாதானத்தை வலியுறுத்தி அறிக்கை யொன்றினை வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கது.

இரண்டு முக்கிய பௌத்த பீடங்களும் பௌத்த சிங்கள மக்களின் அபிலாஷைகளுக்கேற்ப சமாதானம் ஒன்றை வலியுறுத்தினாலும் கூட போர் ஒன்றை பகிரங்கமாக வரவேற்க முயலவில்லை.

ஆனால் மகாசங்கம் இதற்கு மாறாக போரை வலியுறுத்தி அறிக்கை விடுத்துள்ளது.

ஐ.தே.முன்னணி அரசின் மூன்று முக்கிய அமைச்சுகளை தனது அதிரடி நடவடிக்கையின்மூலம் தன்வசம் எடுத்துக்கொண்ட சனாதிபதியின் செயற்பாட்டை வெகுவாகப் பாராட்டிய மகாசங்கம், நாட்டில் எழுந்துள்ள அரசியல் ஆபத்தைத் தடுக்க விடுதலைப்புலிகளுடன் யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு அவசர கோரிக்கை யொன்றை விடுத்துள்ளது.

இனவெறிப் பிக்குகளை உள்ளடக்கிய தேசிய பிக்குகள் முன்னணி என்ற பௌத்த மத தீவிரவாதிகள் அமைப்பின் ஒரு அங்கமாக விளங்கும் இந்த பௌத்த மகாசங்கம் விடுத்துள்ள கோரிக்கையில் நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள போர்நிறுத்தம், புரிந்துணர்வு உடன்பாடு அனைத்தையும் முழுமையாக ரத்துச் செய்துவிட்டு, போரைத் தொடங்கி விடுதலைப்புலிகளை முற்றாக ஒழித்துவிட நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துள்ளனராம்.

பௌத்த பீடங்கள் சமாதானமே சரணம் என்கின்றது.

பௌத்த மகாசங்கமோ யுத்தமே சரணம் என்று கோஷமிடுகின்றது.

பாவம் புத்தபகவான் தியான நிலையிலிருந்து திகைத்துப் போயுள்ளார். பௌத்த சங்கத்தினருக்கு ஒரு ஆலோசனை, ஏன் நீங்களே ஒரு முன்மாதிரியாக உங்கள் மஞ்சள் அங்கியைக் களைந்தெறிந்துவிட்டு இராணுவ சீருடையணிந்து ஆயுதமேந்தி புலிகளுடன் போரிட போர் முனைக்குச் சென்று நாடு எதிர்கொள்வதாக நீங்கள் கூறும் ஆபத்திலிருந்து அதனைக் காப்பாற்றலாமே....

என்ன சத்தத்தையே காணோம் பயந்திட்டீங்களா?

பீடாதிபதிகளின் நிலைப்பாடுகள்



'சிறிலங்காவில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக் கடிக்கு தீர்வுகாண பிரதான கட்சிகள் இணையவேண்டும்.' - இது மல்வத்தை மகாநாயக்க தேரரின் அறிவுறுத்தல் அழைப் பாகும். உண்மையில் இப்போது சிறிலங்காவில் ஏற்பட்டுள்ளது வெறுமனே அரசியல் நெருக்கடியல்ல, அதிகாரப் போட்டியின் பாற்பட்ட மோதலேயாகும்.

சனாதிபதியும், பிரதமரும் பலதடவைகள் மல்வத்தை பீடாதிபதியினால் ஆசீர்வதிக்கப்பட்டு ரட்சிக்கப்பட்டவர்களேயாவர்.

வெறுமனே அரசியல் நெருக்கடி என்றால் ஒரு மாதிரித் தணிக்கலாம். இது அதிகார மோதல்..... காலம் காலமாக வளர்ந்து வரும் பதவி வெறியுடன் கூடிய மோதல்..... இதற்கு தீர்வு காணுதல் என்பது ஒரு பலப் பரீட்சையின் முடிவாகவே இருக்கும். அல்லது இரு தெரு சண்டியர்களின் மோதலை அடக்க அவர்களை விடவும் வலிய இன்னொரு சண்டியன் தலையீடு செய்து இரு தரப்புக்கும் நாலு விளாசல் விளாசி துரத்திவிடுவது போல்... இரு பிரதான தலைமைகளை யும் அச்சுறுத்தி அழுத்தம் கொடுக்கவல்ல மூன்றாவது வலிய தலைமையொன்றின் தலையீடு அவசியம்.

மல்வத்தை பீடாதிபதி சிறிலங்காவைப் பொறுத்தவரை ஒரு வலிய சக்திதான். ஆனால் இன்றைய அரசியல் நெருக்கடியை அவரின் அறிவுறுத்தலால் தீர்க்க முடியாது என்பது தெளிவு. காரணம் இந்த நெருக்கடியின் பின்னணியில் அதிகார மோதல் உள்ளதேயாகும்.

நேற்று சனாதிபதி மல்வத்தை பீடாதிபதியிடம் சென்று நிலைமையை விளக்கினால் இன்று ரணில் ஓடிப்போய் தனது நியாயத்தை விளக்கிவிடுகிறார்.

பீடாதிபதியால் எந்தப்பக்கத்துக்கும் சார்பாக - அல்லது நியாயமான பக்கத்தின் சார்பாக நிலையெடுக்க முடியாத நிலையே இன்றுள்ளது.

இரு தரப்புமே பௌத்த சிங்கள மக்களின் பிரதான அரசியல் தலைமைகளாக உள்ளனர்.

ஒருவர் மாறி மற்றொருவர் ஆட்சி பீடம் ஏறும் பலம்மிக்கவர்களாகவும் உள்ளனர்.

இருவருமே மல்வத்தை பீடாதிபதியை அடிக்கடி சந்தித்து வணங்கி ஆசீர்வாதம் பெறுபவர்கள்.


இந்த நிலையில் பீடாதிபதியின் அறிவுறுத்தல் என்பது இருதரப்பினருள் எந்த ஒரு தனித்தரப்பையும் வலியுறுத்துவதாக அமையப்போவதில்லை என்பதே அதன் பலவீனமாகும்.

மல்வத்தை பீடம், அஸ்கிரியப்பீடம், அமெரிக்க பீடம், இந்திய பீடம் என எல்லாப்பீடமும் அவரவர் வழியில் இணக்கப்பாடு குறித்தோ சமாதானம் குறித்தோ வலியுறுத்தவே செய்கின்றனர்.

ஆனால் ஆட்சி அதிகார பீடத்தில் உள்ளவர்களுக்கு அதெல்லாம் ஏறினால்தானே.....

கெடுகுடி சொற்கேளாது.....! அவ்வளவுதான்.

மீண்டும் ரத்வத்தை பராக்... பராக்...



சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றுக் கொண்டாரோ இல்லையோ, உடன் உற்சாகமானவர் வேறு எவருமில்லை.

அந்த உடத்தலவின்ன கொலைகள் புகழ், அரசியல் ஜெனரலான சனாதிபதி சந்திரிகாவின் பெருமைக்குரிய மாமனாரான, நவீன சப்புமால் குமாரரான - முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரான அநுருத்த ரத்வத்தையேதான்.

மீண்டும் தனக்கு பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவியோ அல்லது பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் பதவியோ கிடைக்கக் கூடும் என்ற எதிர்பார்ப்புடன் உலாவரத் தொடங்கியுள் ளார், என்று கூறப்படுகிறது.

அவரின் திடீர் உற்சாக உலாவுக்கு மற்றொரு காரணமும் உண்டு. அது, மீண்டும் அப்பதவி தற்காலிகமாகவேனும் கிடைத்தால் உடத்தலவின்ன கொலை வழக்கில் தன்னையும் தன் தவப்புதல்வர்களான லொகான் மற்றும் சானுக்கவையும் கைதுசெய்து பிணை விடுதலையளிக்காது சிறையில் நீண்டகாலம் கம்பி எண்ணவைத்த நபர்களைப் பழிவாங்குவதற்கான வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்ப்பதேயாகும்.

ஆனால் மாமாவின் வருகையையும், சுற்றுலாவையும் மருமகள் அதிகம் கண்டு கொள்வதாக இல்லையென்றும் கூறப்படுகிறது.

அவர் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக இருந்த காலத்தில் இராணுவ இயந்திரத்தை போரின் பேரால் தன்னிஷ்டப்படி கையாண்டதன் விளைவுகளை தற்போது ஊழல்கள் உட்பட சகல வகையிலும் எதிர்கொள்வது சந்திரிகாதான்.

ஆனாலும் அழையா விருந்தாளியாக இப்போது பாதுகாப்பு தொடர்பான முக்கிய சந்திப்புகள், கலந்துரையாடல்களில் எல்லாம் ரத்வத்தை தவறாது சமுகமளித்து விடுகிறாராம்.

படைதரப்பு அதிகாரிகள் மத்தியில் மீண்டும் தன்னை ஒரு - நியமனம் பெறாத பிரதிபாதுகாப்பு அமைச்சராகவோ, பாதுகாப்பு ஆலோசகராகவோ தன்னை கற்பிதம் செய்துகொண்டு நடமாடுவதுடன் படைநிலைகள், முகாம்களுக்கும் சென்று வருகிறாராம்.

இது பல இராணுவ அதிகாரிகளுக்கு வயிற்றில் புளிகரைக்கும் விடயமாகியுள்ளது.

ஒருவேளை தேர்தல் வரும் நிலை வந்தால் மீண்டும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளராக அதிகாரம் பண்ணலாம் என்ற எண்ணமும் அவருக்கு இருக்கிறதாம்.

ஆனால் தனது மாமா குறித்த சந்திரிகாவின் அணுகுமுறை எப்படி இருக்கப் போகிறது என்பதே இப்போதைய கேள்வி.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சை ரணிலிடம் ஒப்படைக்க சந்திரிகா முன்வந்த தாகவும் ஒருதகவல்...

அப்படியானால் ரத்வத்தைக்கு தன் எதிரிகளை பழிவாங்க வாய்ப்பேகிடையாதா? சந்திரிகாதான் தீர்மானிக்கவேண்டும்.

செங்குட்டுவன்

☞ குழந்தையை வளர்க்கும் போது, அதன் முதுமைப் பருவத்தை மனதிற் கொள். - ஜெரஸெஃப்ஜ ஃபோ

புறந்தள்ள முடியாத எச்சரிக்கை

சமாதானத்திற்கான இறுதிச் சந்தர்ப்பத்தை இலங்கையின் அரசியல் தலைமைகள் சரியாகப் பயன்படுத்தத் தவறின், பாரிய துயரங்களை பின்னர் சந்திக்க நேரிடும். இவ்வாறு உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹெரோல்ட் எச் சரிக்கை ஒன்றை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

வளர்முக நாடுகளுக்கு நிதி வழங்கும் மூலங்களில் பிரதானபங்கு வகிக்கும் உலகவங்கியின் முக்கிய அதிகாரி என்றவகையில் பிற்றர் ஹெரோல்ட்டின் கூற்று முக்கியத்துவம் பெறுகின்றது.

அதிலும் ஜப்பான் ரோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் ஜப்பான் நாட்டிற்கு அடுத்தபடியாக அதிக நிதி வழங்குவதாக வாக்களித்துள்ள ஒரு சர்வதேச நிறுவனம் என்ற வகையிலும் இது முக்கியத்துவம் பெறுகின்றது.

இத்தோடு பீற்றர் ஹெரோல்ட் இன்னுமொரு விடயத்தையும் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார். தற்போது அரசிற்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் சமாதான பேச்சுவார்த்தைகளை சமாதானத்துக்கான இறுதிச் சந்தர்ப்பமாகவே உலக நாடுகள் கருதுவதாக சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயத்தையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்த வகையில் உலகவங்கிப் பிரதிநிதி பீற்றர் ஹெரோல்ட்டின் எச்சரிக்கையை இலங்கையின் அரசியல் சக்திகளினால் புறந்தள்ளிவிட முடியாது.

இன்னுமொருவகையில் அவரின் இக்கூற்று இலங்கை அரசியல் தலைமைகளுக்கு விடுக்கப்பட்ட ஒரு எச்சரிக்கைக்கான பரிபாசை எனக் கூடக்கொள்ளலாம்.

ஏனென்றால் இலங்கையில் தற்பொழுது நிலவும் அரசியல் சர்ச்சைகளையடுத்து சர்வதேச சமூகம் இலங்கையின் இனப்பிரச்சினையின் குழறுபடிகளுக்கு மூல காரணம் யார் என்பதை புரிந்துகொண்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

அத்தோடு மூன்றாண்டுகாலமாக தொடரும் சமாதான முன்முயற்சிகளுக்கு இடர்களை தோற்றுவிக்கக் கூடிய பல்வேறு சம்பவங்கள் தோன்றிய போதும் புலிகள் சமாதானத்தின் மூலம் தீர்வை எட்டுவதற்கு தமக்குள்ள பற்றுறுதியை பல சந்தர்ப்பங்களில் தெளிவாக சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் சர்வதேச சமூகம், புலிகள் சமாதானத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையும் அவர்கள் தமது மக்களின் இன்னல்களிற்கு தற்காலிக தீர்வாக இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை மூலம் ஒரு தீர்வைகாண முயல்கிறார்கள் என்பதையும் புரிந்துகொண்டு புலிகள் சமாதானத் தீர்வுமூலம் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தீர்வை எட்டுவதற்கு தயாராகவே இருக்கின்றார்கள் என்பதைப்புரிந்து கொண்டுள்ளது.

இந்த நிலையில் இருபத்து ஐந்து வருடங்களுக்கு மேலாக உயிர் மற்றும் உடமை இழப்புகளுக்கு மத்தியில் போராடிய ஒரு விடுதலை அமைப்பாக இருந்துகொண்டும் தமது தனியரசு என்ற இலட்சியத்திற்கு மாற்றீடாக ஒரு தீர்வினை முன்வைத்திருக்கும் இந்த சந்தர்ப்பம் இறுதி சந்தர்ப்பமாகவே இருக்கமுடியும் என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொண்டுள்ளதையும் பீற்றர் ஹெரோல்ட் வெளிப்படுத்தியுள்ளார்.

இதுவரை காலமும் இலங்கையில் ஆட்சிபீடமேறிய அரசுகள் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த சிங்களவர்கள் தமிழர்களுடன் மோதவேண்டியுள்ளதாக காட்சிப்படுத்தி வந்துள்ளனர்.


ஆனால் சமாதான முயற்சியின் தீர்க்கமான ஒரு நிலை எனக் கொள்ளத்தக்க தருணம் எனக்கருதக் கூடிய புலிகள் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் வரைவு சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுதியில். சமாதான முயற்சிகளை முன்னெடுத்த அரசான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களைக் கைப்பற்றி உலகுக்கு ஒரு செய்தியை தெளிவாகவே தென்னிலங்கை அரசியல் தலைமைகள் புலப்படுத்தின.

அதாவது இலங்கையில் நிலவும் இன முரண்பாட்டிற்கும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் ஒற்றுமையின்றி மோதுவது அல்லது மோதலைத் தூண்டுவது சிங்களவர்கள் எதிர் சிங்களவர்கள் என்பதேயாகும்.

இதுவே சனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் தலைமையிலான அரசிற்கும் இடையில் நிலவிய மோதலாகும்.

இது இதுவரை இலங்கையில் நிலவிய தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான மோதல்களிலிருந்து முரண்பட்ட ஒரு காட்சி நிலையேயாகும்.

ஏனென்றால் சனாதிபதியே சமாதானத்தை தொடரவேண்டும் என



பிரதமரும், பிரதமரே சமாதானத்தை தொடரவேண்டும் என சனாதிபதியும் என சமாதான குழந்தை எவர் கைகளிலும் இல்லாது அநாதையான துயரங்கள் கடந்த வாரங்களில் அரங்கேறின.

இது முன்பு ஒரு ஒப்பந்தத்தை டட்லி ஏற்படுத்த அதனை பண்டா கிழித்தெறிந்தது போலவும்,

சிறி. இந்திரகுமார்

பின்னர் பண்டா ஏற்படுத்திய ஒப்பந்தத்தை டட்லி கிழித்தெறிந்த வரலாற்று வழிவந்த தடம் போன்றும் ரணிலை கிழித்தெறிய சந்திரிகா முயல்வது போன்றும் அமைகிறது.

ஆனால் சற்று வித்தியாசமாக தொடரும் சமாதான முயற்சியின் பயனாக இதுவரை எவ்வித ஒப்பந்தங்களும் வரைய முதலே இந்த சம்பவம் நடந்துள்ளது.

இதன் பின்னணியில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமஷ்டி முறையிலான தீர்வே பொறுத்தமானதாக இருக்குமென்று சர்வதேச நாடுகள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தி அதன் வழியாக நாடுகள் தோறும் சமஷ்டி முறைகளை ஆராய்ந்து வருகின்ற நிலையில்;

கொழும்பில் சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்த பிரான்ஸ் நாட்டில் நிலவும் அணுகுமுறை தொடக்கம். லியம்பொக்ஸ் உடன்படிக்கை வரை ஆய்வு செய்யவேண்டிய கேவலம்மிகு அரசியல் கொழும்பில் அரங்கேறியது.

இந்தநிலையில் சமாதான அனுசரணையாளர்களாக செயற்பட்ட நோர்வே தற்காலிகமாக விலகியதாக அறிவித்தபோதும் யுத்த நிறுத்தம் தொடர்வதை உறுதிசெய்யும் வகையிலும் யுத்த நிறுத்தத்தை பாதுகாக்கும் வகையிலும் புலிகள் நடந்துகொண்டதுடன், மட்டக்களப்பில் படைத்தரப்புடன் ஒரு சந்திப்பை நடத்தி புலிகள் சமாதானம் மீதுள்ள நம்பிக்கையை வலுப்படுத்தினர்.

இது புலிகள் இதுவரை செயல்படுத்திய முயற்சிகளில் நல் முயற்சி என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த நிலையானது இலங்கையில் சமாதானத்தை தோற்றுவிப்பதற்கு புலிகள் தரப்பிலிருந்து செய்ய வேண்டிய தமது எல்லா நல்லெண்ணங்களையும் வெளிப்படுத்தி நிற்க தென்னிலங்கை அரசியல் சூறாவளியை தணித்து தென்னிலங்கை அரசியல்மையம் தமிழர்கள் தீர்வுக்கு விளைவை காட்டப்போகிறார்கள் என்பதிலேயே சமாதானத்தின் ஆரோக்கியம் தங்கி நிற்கிறது.

அதுவரை தமிழ் மக்கள் யுத்த காலத்தில் தம் தலைகளில் சுமந்த துயரங்களை இந்த காலத்திலும் சுமந்தபடி காத்திருக்கவேண்டியுள்ளது.

இதனை சர்வதேச சமூகமும் இலங்கையின் தென்னிலங்கை அரசியல் மையங்களும் இலங்கையில் உண்மையானதும் நிரந்தரமானதுமான ஒரு தீர்க்கமான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான காலப்பகுதியாக பயன்படுத்திக் கொள்ளப்போகிறார்களா? அல்லது அரசியல் முரண்பாடுகளின் தீவிரத்திற்கான அவகாசமாக பயன்படுத்திக் கொள்ளப்போகின்றார்களா? என்பதெல்லாம் அடுத்துவரும் வாரங்களில் வெளிப்பட்டுவிடும்.

ஆனால் சமாதானத்திற்கு விரோதமான நிலைப்பாட்டை தென்னிலங்கை அரசியல் தலைமைகள் எடுத்தால் உலகவங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர் ஹெரோல்ட் விடுத்த எச்சரிக்கை போன்று அரசியல் துயரங்கள் அவர்களை பதம் பார்க்கத் தவறாது.

மதவடி மயிலர்



செய்தி : பொதுத் தேர்தலை நடத்துவதற்கு பொதுசன ஐக்கிய முன்னணியினர் எதிர்ப்பு....

மயிலர் :- பொது சனத்தோடை ஐக்கியமா இருந்தாத்தானே பொதுத் தேர்தலிலை வாக்குக் கிடைக்கும் பாருங்கோ. இப்ப இந்த முன்னணிகளின்ர பின்னணிகளெல்லாம் சனத்துக்கு தெரியும் பாருங்கோ..... முன்னாலை ஒன்றும் பின்னாலை ஒன்றும் பேசுகிற அணியாயெல்லே பொதுசன ஐக்கிய முன்னணி போட்டுது.... சந்திரிகாவின் தந்திரம் இனிச்சரிவரா தென்று அவவின்ரை ஆட்களுக்கே தெரிஞ்சிட்டுது.... அது தான் இந்த எதிர்ப்புக்குக் காரணம்.

செய்தி : பிரதமருடன் எந்தக் காலத்திலும் இணைந்து செயற்பட முடியாது என்கிறார் சந்திரிகா....

மயிலர் :- இணைந்து வராத ஆளோடை இணைந்து ஒரு நல்லிணக்க அரசை அமைக்க அழைப்பு விடுப்பது இந்த நிலையில் சரியோ சொல்லுங்கோ.... விவாகரத்துக்கு வழக்கு போட்டிட்டு குடும்பம் நடத்தேலுமே.... இதென்ன கதை சொல்லுங்கோ! ஓடும் புளியம்பழமுமா ஒரு ஒத்திசைவு சாத்தியமே.....?

செய்தி : நாட்டை ஆட்சி செய்த சகல அரசுகளும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண தவறின என்கிறார் சனாதிபதி.

மயிலர் :- தான் மட்டும் தான் பிழை விட்டனென்றில்லை எல்லோரும் தான்பிழை விட்டவை என்றெல்லே அம்மணி சொல்லுறா பாருங்கோ.... இது கூண்டோடை காட்டிக்கொடுக்கிற வேலையெல்லே..... அப்பன் ஆத்தை செய்ததைத்தான் தானும் செய்தன் எண்டெல்லே அர்த்தப்படுகுது பாருங்கோ....

செய்தி : புலிகளோ கூட்டமைப்பினரோ தமிழர்களின் பிரதிநிதிகள் அல்லர் என்கிறது வரதர் அணி....

மயிலர் :- ஆக.... ராஜஸ்தான் ராஜாவின் அணிதான் தமிழர்களின் பிரதிநிதிகள் என்று சொல்லப் போகினம் போல கிடக்கு.... ஊருக்கே வராத ராஜா பேருக்கு பிரதிநிதியாக இருக்க விரும்புறார் போலை..... அடிமை வாழ்க்கை ஆனாலும் அரச கனவு காணுறதிலை குறைச்சலில்லை பாருங்கோ...

செய்தி : ஆனையிறவு முகாம் அழிக்கப்பட்ட போது பேரினவாதிகள் எங்கே போயிருந்தனர்? என்கிறார் அமைச்சர் வஜிர அபேவர்த்தனா.

மயிலர் :- இது தெரியாதே அமைச்சருக்கு.... அப்ப அவையள். இந்தியா சரணம் கச்சாமி. அமெரிக்கா சரணம் கச்சாமி இஸ்ரேல் சரணம் கச்சாமி எண்டெல்லே பஜனை பாடிக்கொண்டிருந்தவை. அப்ப இந்தியாவும் கைகொடுக்காட்டி இவையெங்கே தலையெடுத்திருப்பினம் பாருங்கோ.....!

செய்தி : சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி.கூட்டணி இணக்க முயற்சி மீண்டும் தோல்வி.

மயிலர் :- பதவிப்பசை சரியாக இருந்தால் தான் இந்தக் கூட்டணி ஒட்டும் பாருங்கோ.... ஒட்டியும் ஒட்டாமலும் இருக்க வேண்டிய நிலை பொதுசன ஐக்கிய முன்னணிக்கு. கூழுக்கும் ஆசை. மீசைக்கும் ஆசை என்ற நிலை மக்கள் விடுதலை முன்னணிக்கு... பிறகு எப்பிடி இணக்கம் பாருங்கோ.....?

☞ சர்ச்சைக்குரிய பொருளாக இல்லாவிடில், அது சுவையற்றதாகவும் ஆகிவிடுகிறது. – வில்லியம் ஹேஸ்லிட்

தேநீருக்கு

முரண்பாட்டின் மொத்த வடிவங்கள்

சிறிலங்காவின் 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பு இன்று சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்குக் காரணம் என்பது அனைவராலும் உணரப்பட்டுள்ளது. அதனது 25வருட செயற்பாட்டுக் காலத்தில் அதில் 17 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. "அது ஒரு பருவ கால இதழ்" என விமர்சிக்கப்படுமளவுக்கு அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் இப்பொழுதும் அரசியலமைப்பால் பலசிக்கல்களை சிறிலங்கா எதிர்நோக்கிக்கொண்டிருப்பதை உணரமுடிகின்றது. இதில் பல திருத்தங்கள் இன்னமும் மேற்கொள்ளப்பட வேண்டுமென சிறிலங்காவின் அனைத்துக் கட்சிகளும் விருப்பம் கொண்டுள்ளன.

இந்த அரசியலமைப்பின் முக்கிய அங்கமான சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் குறித்து இன்றைய சனாதிபதி சந்திரிகா, ஜே.வி.பி. தலைவர்கள், ரணில் விக்கிரமசிங்க கூட திருப்திகொண்டவர்களாக இல்லை.

சனாதிபதி முறையை நீக்குவதற்காகவே. சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டவர் தற்போதைய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. தற்போதைய பிரதமரும், எதிர்காலத்தில் சனாதிபதியாகும் கனவுடன் இருப்பவரும்பெரும்பாலும் அதற்கான சந்தர்ப்பத்தைக்கொண்டிருப்பவருமான ரணில்விக்கிரமசிங்கநிறைவேற்று அதிகாரத்தில்திருத்தம் மேற்கொள்ளவேண்டுமென கோரியுள்ளார். ஜே.வி.பி. யோ இந்த நிறைவேற்று அதிகாரசனாதிபதியாக வரும் சந்தர்ப்பத்தை அண்மைக் காலத்தில் கொண்டிருக்கவில்லை. அதனால் அதுவும் இவ் அதிகாரத்தை விரும்பவில்லை.

ஏனைய இடதுசாரிகள் இந்த சனாதிபதி முறை சர்வாதிகார ஆட்சிக்கே இட்டுச் செல்லும் என 1978இலேயே வர்ணித்தவர்கள்.

அதேவேளை நாடாளுமன்றம் முதல் உள்ளூராட்சி அமைப்புகள் வரை மக்கள் மன்றங்களுக்கு உறுப்பினர்களைத்தெரிவுசெய்ய இந்த அரசியலமைப்பு கொண்டுள்ள தேர்தல் முறையை - அதாவது விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையை அனேகமான கட்சிகள் விரும்பவில்லை. அதிலுள்ள விருப்பத்தெரிவு முறை கட்சிக்குள்ளேயே பிளவுகளையும், மோதல்களையும் ஏற்படுத்துவதாக முக்கிய அரசியல்வாதிகள் விமர்சிக்கின்றனர். எனவே இத்தேர்தல்முறையை மாற்றி அமைக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டு அதில் சாட்சியங்கள் பெறப்படுகின்றன



இவ்வாறு சிறிலங்காவின் அரசியலமைப்பு பல்வேறுவகையிலும் திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டியது என அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

ஆனால் இந்த மாற்றங்களைச் செய்யும் ஒற்றுமை இன்னமும் தென்னிலங்கை அரசியல் வாதிகளிடையே வரவில்லை. ஆறு மாதகாலத்தில் சனாதிபதி முறையை நீக்குவதாகக்கூறி அப்பதவியை ஏற்ற சனாதிபதி 6வருட பதவிக்காலத்தை முடித்து அடுத்த ஆட்சிக்காலத்திலும் சுமார் 4வருடங்களைப் பூர்த்தி செய்திருக்கிறார். இப்பொழுது நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் பதவியை அரசியலமைப்பு மாற்றம் மூலம் ஏற்படுத்தி அதற்குப் போட்டியிடக் கனவு கண்டுவருகிறார்.

"அதிகாரம் இருந்தும் அதனைப் பயன்படுத்தாத ஒரேயொரு சனாதிபதி தானே" எனக்கூறிக் கொண்டே "அரசியலமைப்பு ரீதியாக சனாதிபதிக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி" பல குழப்பங்களுக்கு அவர் காரணமாக அமைந்திருக்கிறார்.

ரணில் விக்கிரமசிங்க அடுத்த சனாதிபதிப் பதவியை எதிர்பார்த்திருக்கும் நிலையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையைமாற்றி மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்று அரசியலமைப்பில் தான் விரும்பியவாறு மாற்றங்களை ஏற்படுத்த முடியுமா? என முயற்சிகளை எடுத்து வருகிறார்.

ஆனால் இவர்கள் அனைவரிலும் ஓர் அபூர்வமான ஒற்றுமை காணப்படுகிறது. அதாவது தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும்போது மட்டும் அது அரசியலமைப்புக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும் என்பதாகும்.

ஆனால் தமிழ்மக்களைப் பொறுத்தவரை 1972 குடியரசு அரசியலமைப்பு, 1978 அரசியலமைப்பு இரண்டையும் அன்றேமுற்றுமுழுதாக நிராகரித்தவர்கள் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பை எரித்துப் போராட்டம் நடத்தியவர்கள் அதனை அடிமை சாசனமாக அறிவித்தவர்கள் 1978 அரசியலமைப்பு உருவாக்கப்படமுன்பே 1977இல் நடைபெற்ற தேர்தலின்போது சிறிலங்கா அரசின் கீழ் வாழ முடியாது எனத்தீர்மானித்து தமது இறைமையை மீட்க முடிவு செய்தவர்கள். அதற்கான தீவிரமான போராட்டத்தில் 25வருடங்களுக்கு மேலாகப் பேரிழப்புகள் ஈகங்கள் மத்தியில் ஈடுபட்டுவருபவர்கள்.

அவ்வாறு அவர்கள் முற்றாக நிராகரித்த அரசியல் யாப்பின்கீழ் தீர்வு இருக்கவேண்டும் என அவர்களை வலியுறுத்தும் தென்னிலங்கை அரசியல் சக்திகளும், வேறு இனவாத சக்திகளும் அதே அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ள வேண்டுமெனவும் இந்த அரசியலமைப்பே சிறிலங்காவின் இன்றைய கேடுகளுக்கு காரணம் எனக்கூறுவது, இவர்கள் எத்தகைய முரண்பாடானவர்கள் எனப் புரிந்துகொள்ள உதவும்.

தமது நாட்டுக்கே தீங்கெனக் கருதும் அரசியலமைப்பை வேறொரு தேசிய இனத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இவர்கள் எவ்வாறு வலியுறுத்த முடியும்?

எனவே இவ்வாறு வலியுறுத்துவதின் நோக்கத்தை, இவர்களுக்கும் மேலாக இலங்கையின் இறைமை, ஒருமைப்பாடு பற்றி வலியுறுத்துவோரும் புரிந்துகொள்ளவேண்டும்.

அதாவது தென்னிலங்கை அரசியல் வாதிகளும் இனவாதிகளும் தமிழர்களை ஆளப்படுபவர்களாக வைத்திருப்பதற்காகவே., அரசியலமைப்புப்பற்றி வலியுத்திவருகின்றனர் என்பதைப் புரிந்துகொண்டாலே சமாதானத் தீர்வு சாத்தியமாகும்.

வேலவன்

கிராமன் மக்கள் மீது கெடுபிடிகள்

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிற்குள் வாழும் மக்களிற்கு படையினரால் மேற்கொள்ளப்படும் பல்வேறு கெடுபிடிகள் ஒருபுறம் இருக்க. படையினர் அந்த மக்களை அச்சத்திற்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாக்கும் வகையில் பல்வேறு செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

இவ்வாறு அண்மையில் மட்டக்களப்பு கிரான் மக்கள் தமக்கு இராணுவத்தினர் தொல்லை கொடுப்பதாக தெரிவித்துள்ளனர்.

இதன் பின்னணியில் நடந்த ஒரு சம்பவத்தை பார்க்கவேண்டும். கும்புறுமூலை இராணுவ முகாமைச்சேர்ந்த சிப்பாய் ஒருவர் கிரானில் மரணமடைந்ததைத் தொடர்ந்து இந்த இராணுவமுகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் தமக்கு தொல்லை தருவதாக அந்த கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு காரணம் கும்புறுமூலை முகாமைச் சேர்ந்த மூன்று சிப்பாய்கள் இந்த கிராமத்தில் நடந்த பல்வேறு கொள்ளைச்சம்பவங்களுடன் தொடர்பு பட்டிருந்ததாகவும் இவ்வாறு அண்மையில் வீடொன்றில் கொள்ளையடித்துக் கொண்டிருந்தபோது அவர்களை கிராம மக்கள் ஒன்று திரண்டு தாக்கியதில் காயமுற்று தப்பிச் சென்ற தன் பின்னர் கிரான் அருகேயுள்ள காட்டில் அந்த இராணுவத்தினரில் ஒருவர் சடலமாக கிடந்துள்ளார்.

இதனை இந்தப்பகுதி மக்கள் கும்புறுமூலை இராணுவ முகாமிற்கு அறிவித்தபோது அது தங்கள் முகாமைச் சேர்ந்த எவருடையசடலமும் அல்ல என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். அதைத் தொடர்ந்து அந்த கிராம மக்கள் சடலத்தைப் புதைத்துள்ளனர்.

ஆனால் பின்னர் பொலிசார் அச்சடலத்தை தோண்டி எடுத்து வாழைச்சேனை மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளார்கள். பின்னர் அது கும்புறுமூலை இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாயினுடைய சடலம்தான் என அடையாளம் காட்டியுள்ளனர்.



இதன் பின்னர் இந்த கிராமத்திற்கு இரவில் வரும் படையினர் கிராம மக்களுக்கு பல்வேறு விதமாக அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுவருகின்றனர் எனவும் இதனால் சுமார் நூறுவரையான குடும்பங்கள் வாழும் இந்த கிராம மக்கள் இரவு நேரங்களில் வேறு இடங்களுக்குச் சென்று தங்கிவருவதாகவும் அந்த கிரா மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கிழக்கு மாகாணத்தில் மாத்திரமல்லாது யாழ்ப்பாணத்தில் பல்வேறு கிராமங்களிற்குள் இரவு நேரங்களில் படையினர் கிராமங்களிற்குள் நுளைந்து மக்களுக்கு பல்வேறு தொல்லைகளை ஏற்படுத்தியதனால், மக்கள் உரியவர்களுக்கு தெரியப்படுத்தியும் இருந்தனர்.

இந்தவகையில் படையினரின் தேவையற்ற பிரசன்னங்களினால் மக்களின் இயல்பு வாழ்வு சீர் குலைக்கப்படுவதுடன் தமது பொழுதை இடர் மிகுந்த பொழுதாகவே கழித்து வருகின்றனர்

இந்த மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு இடையூறாக கொலை, கொள்ளை சம்பவங்களில் படையினர் ஈடுபடுவது தெளிவாகியுள்ளது.

யுத்தகாலத்தில் இந்த மக்கள் தாம் தேடிய தேட்டங்களையெல்லாம் இழந்து சமாதானகாலத்திலும் அகதிவாழ்வு வாழ்ந்து வரும் நிலையில் மக்களின் வாழ்விடங்களிறகு அண்மையாக படை முகாங்களை அமைத்துவைத்துக் கொண்டு அவர்களை பெரிதும் இம்சைப்படுத்துவது மக்களை மிகவும் சீண்டுவதாகவே அமையும்.

இத்தகைய இடர் நிலைகள் போக்கப்பட வேண்டுமானால் மக்களின் வாழ்விடங்களிற்கு அண்மையாகவுள்ள இராணுவ படைமுகாம்கள் நீக்கப்படவேண்டும்.

இவ்வாறு நீக்கப்படும் பட்சத்தில் மாத்திரமே மக்களின் இயல்பு வாழ்வும், நிம்மதிவாழ்வும் சாத்தியம்.

இது எப்போது இந்த மக்களிற்கு கைகூடும்.

நிவழினி

☞ செயலாற்றத் துணியாதவனுக்கு, தெய்வம் ஒருபோதும் துணை நிற்காது. – ஸோஃபாக்லிஸ்

தலைநகர் விடுதலை மையம்

நீலப்பனிக்கன் குளத்துத் தண்ணீர் வயல் நிலங்களைக் குளிரூட்ட, வயல் வெளிகளில் அரைக் கச்சையை வரித்துக் கட்டிய நிலையில் வேலையாட்கள் வேலையில் ஈடுபட உழைப்பு உயர்வு தரும் என்பதற்கொப்ப, அவர்கள் விதைத்த விதை நெல் தளைத்துக் குலுங்கிப் பசுமையாக இருக்கும் தோற்றமும்,

அழகிய கடல்கரைப்பகுதி அலைகளின்றி ஓய்ந்திருக்கும் காலங்களில் காலைப்பொழுது பொன்னிறமான சூரியன் ஒளிவிட்ட வானத்தின் வனப்போடு இயற்கை எழுச்சியின் காட்சியும்,

பசுக்கள், எருதுகள் எனக் கூட்டம் கூட்டமாக ஆயிரக்கணக்கில் பரந்து பட்ட புல்வெளிகளில் மேயும் சூழலானது ஊரில் கால் நடை வனத்தின் செழிப்பை எடுத்துக்காட்டும் படிமத்தையும்,

ஆதிகாலத்தில் சிவன் ஆலயம் இருந்த இயற்கையான கம்பீரத்தோற்றத்துடன் உயர்ந்திருக்கும் திரியாய் மலையும், ஆங்காங்கே மரங்கள் மிக அடர்ந்த பெரிய தோப்புக்களாக, காடுகளாக ஊரைச்சுற்றியிருக்கும் வனப்பும் திரியாய்க் கிராமத்தின் சிறப்புக்கள்.

தாமரைத் தண்டிலிருந்து பெறப்படுகின்ற நூல் இழைகளில் ஆக்கப்படுகின்ற திரியையும், அதற்கு விடும் நெய்யையும் கோணேசருக்கு வழங்கியதால் திரியாய் என்ற பெயர் வந்த இன்னொரு பக்கச்சிறப்பும் உண்டு.

இப்பூர்வீகத் தமிழரின் கிராமத்தில் படலைக்கல் அம்மாள் கோவில் திருவிழாக்காலமும், சோலைப்பிள்ளையார் கோவில் திருவிழாக்காலமும் ஊர்மக்களை ஓரிடத்தில் ஒன்றுகூடி மகிழ்ச்சியில் திளைக்க வைக்கும் நாட்களாக இருக்கும்.

வளத்தாமலை மலைப்பிரதேசத்தில் முருகன் கோயிலும் மலைக்குகையொன்றில் கல்லிலே செதுக்கப்பட்ட ஐந்து தலை நாகத்தின் சிலையும் இவ் மக்களது வழிபாட்டில் கலந்தே இருந்தது. இத்தகைய ஊர் மக்களது வாழ்க்கை பாச உணர்ச்சியின் ஆனந்த சூழ் நிலையில் பல ஆண்டுகள் கழிந்து கொண்டிருந்தன.

சொந்த மண்ணில் தம் உறவுகளுடன் காலங்காலமாக வாழ்ந்த மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட சிங்களப் பேரினவாத படையெடுப்புக்களால் ஊரின் சிறப்புக்கள் சிதைந்தன.

திரியாய் மலையின் உச்சியில் பௌத்த ஆலயம் கட்டப்பட்டு அதனைச் சூழவுள்ள பகுதிகளைப் புனிதப் பிரதேசமாகச் சிங்களம் பிரகடனம் செய்தது.

நீலப்பனிக்கன் குளத்தின் நீர்கொள்ளும் அலை கரைகளை அண்டிய காட்டுப்பகுதிகளில் கீயூலக் கடவெல, மயில்வெல, கோமரசன் கடவெல (குமரேசன் கடவை) ஆகிய சிங்களக் குடியேற்றங்களை நிறுவியது.

அதே காலப்பகுதியில் தமிழரின் உரிமைக்கான கோரிக்கைகளை தென்னிலங்கை அரசியல் வாதிகள் ஏமாற்றும் போக்கினை வெளிப்படுத்தும் கொள்கையை கொண்டிருந்தனர்.

இந்நிலையில் தான் இழந்த சுதந்திரத்தை மீளப்பெறவேண்டும் என்ற தமிழ் தேசிய அரசியலில் ஊர்மக்கள் தம்மைக் கலக்கச்செய்தார்கள். இம் மக்களுக்குள் வாழ்ந்த சமூக சேவகனான இளம் வயது செந்தில் நாதன் புரட்சிகர அரசியலில் களமிறங்கினான்.

தமிழினத்தை நிமிர்ந்து நின்று போராடும் நிலைக்கு உருவாக்கிய விடுதலைப்புலிகளின் தலைமையின் கீழ்ச் செயலாற்றிய மூத்த உறுப்பினர் சந்தோசம் மாஸ்ரருடன் இணைந்து இயக்கப் பணிகளை 83ல் செந்தில் செய்யத் தொடங்கினார்.

தன் ஊரில் நல்லதொரு அத்திவாரத்தை இட்டு நல்லதொரு இயக்கச் செயற்பாட்டை ஆற்றுவதற்குரிய முன்முயற்சி நடவடிக்கைகள் என அயராதுழைத்தார் செந்தில். இதற்கு குணலிங்கத்தினுடைய (லெப்.கேணல் பட்டேல்) உதவிகளும் செந்திலுக்கு அப்போது இருந்தது.

இவ்வேளையிற் தான்



வீதியால் இடித்தாக்கிச் செந்தில் கருகிச் சாவடைந்தார்.

செந்திலின் வழியைப் பின்பற்றி ஊர்மண்ணும், மக்களும் விடுதலைப் போராளிகளை அரவணைக்க காத்திருந்தார்கள்.

செந்திலின் ஒன்று விட்ட சகோதரியான நிர்மலாதேவியை மணம் முடித்த யோகண்ணன் தன் மூன்று ஆண் பிள்ளைகள், ஒரு பேண் பிள்ளையுடன் குடும்பமாக வாழ்ந்தார். தன் சொந்த முயற்சியால் கடின உழைப்புக்களில் ஈடுபட்டு வசதியான, மகிழ்வான அவரது வாழ்வு.

மாவட்டத் தளபதி சந்தோசம் மாஸ்ரர் அவர்களது தலைமையில் சுரேந்திரன், பதுமன், கஜேந்திரன், சஞ்சய், நாதன், றொபின், காந்தி (பாலன்), சுருளி, குண்டுக்கணேஸ், விஜித், தாமன், சசி, லோகன், தவம், சங்கிலி ஆகிய போராளிகள் தென்னமரவடி மகேந்தியின் பாதை வழிகாட்டலுடன் 84 இறுதியில் திரியாய் வந்து கொடிக்கட்டியாற்றுக் கண்ணாக் காட்டுப்பகுதியொன்றில் சில நாட்கள் தங்கியிருந்தார்கள்.

இந்நாட்களில் பாக்கியின் குடும்பத்தாரும், பாக்கியின் தாயும் அனைத்து உதவிகளையும் வழங்கினார்கள். பாக்கியின் அம்மா சமைத்த உணவைச் சுமந்தபடி யானைக்காட்டுப்பாதையால் தனியே இரவில் நடந்து, ஆற்றைக்கடந்து துணிந்து வரும் நிகழ்வானது போராளிகளை வியப்பாகப் பார்க்க வைத்தன.

போராளிகளின் பசியை நீக்கிய தாயாகவும், மறு நாள் தேவையான பொருட்களை வாங்கி அனுப்பி வைக்கும் குடும்பத் தலைவியாகவும், மாஸ்ரரின் சரும வியாதிக்கு மூலிகை அரைத்துப் பத்திய உணவு சமைத்து அனுப்பும் மருத்துவிச்சியாகவும் பாக்கியின் அம்மா அவ் நாட்களில் திகழ்ந்தார். புல்லுருவிகளுக்கும், காட்டிக்கொடுப்பவர்களுக்கும் நடுவே இப்பணியைச் செய்ய வேண்டியிருந்ததனால் படு இரகசியமாகவே அனைத்தும் இருந்தன. யோகண்ணன் அப்பணிக்குள் கலந்தவராக இல்லாதிருப்பினும் அறிந்த தகவலை தன்னிடமிருந்து கசிய விடாமல் இரகசியம் காத்தார்.

ஊர் அமைதியான, இனிய சூழலில் இருந்து வரும்போது ஒரு நாள் பயங்கரச்சோகம் கவ்விக்கொண்டது. அருணாசலம், சோதி, விவேகானந்தம் ஆகியோர் சிங்களப் படையினரால் கைது செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள். இச்செய்தி மக்களுக்குள் பரவ மக்களின் முகங்களில் மகிழ்ச்சி அடையாளமே இல்லாமற்போனது.

இவ்வாறு ஊர் இருந்து வரும்போது 85நடுப்பகுதியில் குச்சவெளி பொலிஸ் நிலையம் போராளிகளால் தாக்கியழிக்கப்பட்ட சில நாட்களின் பின் சிங்களப் படையினர் ஊருக்குள் நுழைந்து பசுமையான ஊரைப் பாலைவனமாக்கி, சுடுகாடாக்கி அழகிய தோற்றத்தை சிதைத்து, அமைதியை முற்றாகக் கெடுத்துவிட்டுச்சென்றனர்.

அனைத்தும் இழந்த மக்கள் தம் உயிரைக்காக்க காடுகளுக்குள் வாழ்ந்த குடும்பங்களுக்குள் யோகண்ணன் குடும்பத்தினரும் கலந்தே இருந்தனர். சிங்களப் படையினரின் கொடுமைகளைக்கண்ட யோகண்ணனுக்கு ஆத்திரமும், சினமும் ஏற்பட்டது. அவருக்கு நெஞ்சு கனத்தது.

புலேந்தி அம்மான், தாமள் ஊரின் அவலங்களை, சிதைவுகளை புகைப்பட சுருளுக்குள் வசந் மூலம் பதிவாக்கினார். நிர்க்கதியாக இடம் பெயர்ந்து இருந்த மக்களுக்கு தென்பூட்டினார்கள். மறுபுறம் புலியுத்திக்காட்டில் 80 போராளிகளுக்கான பயிற்சியை முன்னணிப் போராளிகளான தவராஜா, குணம் ஆகியோரின் உதவியுடன் நிறைவு செய்தார் அம்மான். அத்தோடு செந்தூரன் தலைமையில் துணைப் படை அணியொன்றையுருவாக்கி ஊர்பாதுகாப்புக்கு ஒழுங்கு செய்தார். அக்காலத்தில் யோகண்ணன் புலேந்தி அம்மானின் பணிகளுக்கும் பக்க உதவிகள் சிலவற்றை செய்து உதவினார்.

ஒருநாள் சிங்களப் படையினரால் G.S.நாராயணப்பிள்ளை, G.M. ஏகாம்பரம், உப அதிபர் மகாதேவன், சண்முகம், சிவநாயகம், துரைநாயகம், லோகநாதன், முத்துக் கிருஸ்ணன், நாகேஸ், ரெங்கநாதன், ராஜா ஆகியோர் கடத்திச்செல்லப் பட்டுப் படுகொலை செய்யப்பட்டார் கள். "ஆளை" என்பவர் காயங் களுடன் உயிர் தப்பி ஊர் வந்து சேர்ந்தார்.

இடப்பெயர்வு

இக்கொடூரச் சம்பவத்தினை அடுத்து சொந்த மண்ணில் வாழ்க்கை நடாத்த வேண்டிய மக்கள் சிதறிச் சின்னாபின்னமாகினர். பலர் தென்னில்லாமல் கண்ணீர் வடித்த கண்களுமாய் படிப்படியாக வெவ்வேறு வெளியிடங்களுக்கு இடம் பெயர்ந்தார்கள். ஒரு சில குடும்பங்கள் கத்திக்கதறிக் கண்ணீரைத் துடைத்துவிட்டு ஊரில் இருந்தார்கள். யோகண்ணன் குடும்பமும் இடம்பெயராது ஊரின் சோகச்சுமையுடன் வாழ்ந்தார்கள். அவரது மனதுக்குள் வைராக்கியம் எழுந்தது.

கல்லம்பத்தைக் காட்டுக்குள் அமைந்திருந்த முகாமில் வசந், குலம், முத்து, ரஞ்சன், அன்ரன், வாகீசன், பாபு, சேரன், சுமன், வீரமணி, தாதூர், கபிலன், சந்தர், குரு, மது, விசு, பசுபதி, சந்திரசேகர், ஆண்டி, பயில்வான், சச்சு, வாசுமாஸ்ரர், பாபுஜி, வாசு(BBC) ஆகிய போராளிகள் தளபதி சந்தோசம் மாஸ்ரரின் நேரடியான ஆளுகைக்குள் தங்கியிருந்தார்கள்.

இவ் முகாம் விநியோக முகாமாகவும், சமளங்குளச் சந்தியில் பாதுகாப்புக் கடமைக்குப் போராளிகள் சென்று திரும்பும், பாதுகாப்பு வழங்கும் முகாமாகவும் இயங்கியது. அதற்கு அப்பாலும் வன்னியிலிருந்து துயரங்களைச் சுமந்த வண்ணம் நடந்து வந்து சேரும் போராளிகள் சிலநாட்கள் ஓய்வு எடுத்துவிட்டு நகரும் இடைத்தங்கல் முகாமாகவும் விளங்கியது. இவ் முகாம் போராளிகளுக்கான பிற உதவிகளை கல்லம்பத்தை தர்மண்ணன், செல்வராஜா ஆகியோர் வழங்கினார்கள்.

கடலால் படகுகளில் ஆயுதங்கள், வெடிபொருட்கள் வந்து சேர ஆயுதபலம் அதிகரிக்கத் தொடங்கியது. தரையால் நடந்து வந்து சேரும் போராளிகளால் ஆளணிப்பலம் பலம் அடைய ஆரம்பித்தது. இவ்விரு பாதைகளாலும் வந்து சேர்ந்த பலம் திருமலை மண்ணின் போரரங்கு புதுப்பலம் பெற ஏதுவானது.

படகுகள் மூலம் உணவுப் பொருட்கள், ஆயுதளபாடங்கள் என வரத்தொடங்கிய காலங்களில் போராளிகள் ஓய்வு கொள்ளவே நேரமில்லாத நாட்களாக கழியும் நிலையேற்படுவதுண்டு.

இக்காலங்களில் ஊருக்குள் சென்று பணிகளையாற்றும் போராளிகள், வன்னியிலிருந்து நடையில் வந்து சேரும் போராளிகள் என அனைவருக்கும் சின்னண்ணன்

ஊர் அமைதியான, இனிய சூழலில் இருந்து வரும்போது ஒரு நாள் பயங்கரச்சோகம் கவ்விக்கொண்டது. அருணாசலம், சோதி, விவேகானந்தும் ஆகியோர் சிங்களப் படையினரால் கைது செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள். இச்செய்தி மக்களுக்குள் பரவ மக்களின் முகங்களில் மகிழ்ச்சி அடையாளமே இல்லாமற் போனது.

உணவு சமைத்துப் பரிமாறும் தாயாக இருந்தார். அவரின் அன்பு கலந்து சமைத்தது உணவின் சுவையில் வெளிப்படும். எப்போதும் சுவையில் மாற்றம் ஏற்பட்டதேயில்லை. ஓய்வின்றிச் சமையற் பணியில் அர்ப்பணித்த நாட்கள் கணக்கிட முடியாதவை.

அப்போது நிலவிய நெருக்கடியான சூழலில் இன்னொரு பக்கம் சிவஞானம், யோகண்ணன் மைத்துனர், யோகண்ணன் ஆகியோர் போராளிகளுக்கான நல்ல களத்தை அமைத்துக்கொடுத்து உதவினார்கள்.

இத்தகையதொரு நிலையில் சியாமசிட்டி விமானங்கள் குண்டுகளைப் பொழிய, உலங்கு வானூர்திகள் சரமாரியான வேட்டுக்கள் தீர்க்க பெரும் படையெடுப்பொன்றை சிங்களம் செய்து கல்லறவில் நிரந்தர முகாம் அமைத்தது. இதற்கு முன்னர் ஓர் இரகசிய நகர்வு ஒன்றினைச் செய்த சிங்களப்படை பதுங்கித் தாக்கியதில் போராளி முகமட் வீரச்சாவு அடைந்தார்.

கல்லறவு முகாமில் இருந்து வீதியுலா வரும் படையினர் மீது - சுரேந்திரன் தலைமையில் குலம், கமல், சரோன், பழனி, சந்தர், றொசான் ஆகிய போராளிகளால் தட்டைக்கல் இடத்தில் வைத்து தாக்குதல் தொடுக்கப்பட்டபோது ஒரு சிப்பாய் கொல்லப்பட்டு ஏனையோர் காயங்களுடன் தப்பியோடினார்கள்.தமிழீழ வரலாற்றில் முதன் முதலில் F.N.C.ரக ஆயுதம் கைப்பற்றப்பட்டது. அவ்வேளை சந்தோசம் மாஸ்ரர் அங்கு தளபதியாக இருந்தார்.

திருமலையில் இயக்கத்தின் இராணுவ மேலாண்மை பலத்துக்கு - வலுச்சேர்க்கும் விநியோக மையமாக ஊர் விளங்கியது. புதிய நவீன ஆயுதங்கள் இவ்வூர் மக்களின் கண்கள் முதன் முதலில் காணும் நிலையும் ஏற்பட்டது. யோகண்ணனும் அவ்வாயுதங்களைத் தூக்கித் தொட்டும் பார்த்து மகிழ்ந்த அப்போதைய சூழலாக இருந்தது. இக்காலப்பகுதியில் செந்திலின் மூத்த சகோதரியின் மகன் பாண்டி கடலில் வீரச்சாவு அடைந்தார்.

இது இப்படியிருக்கையில் ஒருநாள் நீலப்பனிக்கன் குளப் பகுதியிலுள்ள கொம்பு எடுத்த மடுக்காட்டுப் போராளிகள் முகாம் சிங்களப் படையால் சுற்றிவளைக்கப் பட்ட சமயம் கருணா வீரச்சாவு அடைந்தார். இன்னொரு சுற்றிவளைப்பில் யோகண்ணன் கைது செய்யப் பட்டு பூசா முகாமில் கைதியானார்.

பூசா முகாம் தடுப்பில் 18 மாதங்கள் இருந்து விடுதலையாகி ஊர் வந்து தன் குடும்பத்துடன் சேர்ந்தார். நீண்ட காலப் பிரிவின் இணைவு கணவன், மனைவி இருவரும் ஆனந்த உணர்ச்சிப் பெருக்கினால் வருத்தந்தோய்ந்த முகம் - மகிழ்ச்சியால் மலர்ந்தது. மனைவியின் அகக்கண்களில் தேங்கியிருந்த நீர் வெளியேறியது. வாய்விட்டுச்சிரிக்க, மனந்திறந்து கதைக்க, இன்ப துன்பங்கள் பகிர தன் இல்லத் தலைவன் வரவால் சோகம் நீங்கியது. பிள்ளைகளின் மகிழ்ச்சி அரவணைப்புடன் யோகண்ணன் புத்துணர்ச்சியுடன் முகம் மலர்ந்து இல்வாழ்வில் கலந்தார்.

அக்காலப் பகுதியில் இந்தியப் படையுடனான சமர் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இவ்வரலாற்று நெருக்கடியான காலகட்டத்தில் யோகண்ணன் குடும்பம் அர்ப்பணிப்பு நிறைந்த பங்களிப்புக்களைச் செய்து போராளிகளுக்குப் பின்புலப் பலமாக இருந்தார்கள்.

போராளிகளுக்காக எந்தத் துன்பங்களையும், சவால் களையும், சந்திக்கத் தயாராகவே இருந்தார்கள். யோகண்ணனுக்கு ருக்மணி அம்மா, செல்லா போன்றோர் துணையாக இருந்தார்கள்.

புலியுத்திக்காடு, கட்டுக்குள சோலைக்காடு, நாய்விழுந்த கல்லு மலை ஆகிய இடங்களில் போராளிகள் முகாம் அமைத்து தம் பணிகளைச் செய்தார்கள். ஜெயம், மதி, குலம், மாதவன், தவநாதன், றோயல், ரஞ்சன், வாசு(BBC), செல்வன், உத்தமன், ஞானி, கில்பேட், சங்கர், அசோக், நிசாம், கண்ணன் எனப் பலபோராளிகள் இவ் முகாம்களில் இருந்தனர்.

தாக்குதல் ஒழுங்குபடுத்தல், விநியோக வேலைகள்,மணலாறு போய்வரும் போராளிகள் பாதுகாப்பு, பாதை காட்டுதல் எனப் பல பணிகள். போராளிகள் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தால் தலைவலித்து மீண்டும் படுப்பதற்கே உடல் தளர்ந்திடும். ஆனாலும் எதிரே ஏகப்பட்ட வேலைகள் அவர்களை நோக்கிக் காத்துக்கிடக்கும். அவ்வாறான கடின மான சூழலில் யோகண்ணனின் உழைப்பு போராளிகளுக்குத் தென்பூட்டும்.

(13ம் பக்கம் பார்க்க....)

மேற்கு நாடுகளில் கூட சோதிடம் பரவும் பாடு

மேற்கு நாடுகளின் பிரச்சாரப் போரில் சோதிடம் முக்கிய இடம் வகிக்கின்றது. நொஸ்திரதா முஸ்சின் பெயரால் பல பொய்த் தகவல்களைத் தாங்கிய நூல்களை ஹிட்லரின் சோதிட ஆலோசகர் கார்ள் ஏர்னெஸ்ற் கிராப்ற் [KARL ERNE ST KRAFT] வெளியிட்டார். சோதிடத்தில் ஹிட் லருக்கு பெரும் நம்பிக்கை இருந்தது. எந்த நாட்டின் மீது எந்த இராணுவ அதிகாரியின் தலைமையில் எந்த நாள் நேரத்தில் தாக்குதல் நடத்த வேண்டும் என்பதை சோதிடர்கள் ஆலோசனைப்படி ஹிட்லர் தீர்மானித்தான்.

ஆசிய நாட்டுப் பொதுமக்கள் வாழ்விலும் அரசியல் தலைவர்கள் வாழ்விலும் சோதிடம் செலுத்தும் ஆதிக்கம் பற்றி விவரிக்க வேண்டிய அவசியம் இல்லை. அத்தனை தூரம் அது சர்வ வியாபியாகப் பரந்துள்ளது. விஞ்ஞானமும் அது வழங்கும் வாழ்க்கை வசதிகளும் நிரம்பிய, அமெரிக்க, பிரித் தானிய,ஜேர்மனி போன்ற முதலாம் உலக நாடுகளில் சோதிடம் செலுத்தும் ஆதிக்கம் வியப்பளிப்பதாக இருக்கின்றது.

எந்த நாடுகளில் எத்தனை முன்னணி நிலையிலுள்ள சோதிடர்கள் வசிக்கிறார்கள் என்ற கணக்கெடுப்பை ஒரு பொது நிறுவனம் சில வருடங்களுக்கு முன் எடுத்தது. அமெரிக்காவில் 5000, ஜப்பானில்3000, ரஷ்யாவில் 1000, ஜேர்மனியில்2000, பிரான்ஸில் 2000, இந்தியாவில் 30.000, சீனாவில் 25.000, என்று அந்த மதிப்பீடு தெரிவிக் கின்றது.உலக நாடுகளில் வாழும் எல்லா வகைச் சோதிடர்களையும் கூட்டிப் பார்த்தால் அது பல கோடியைத் தாண்டி நிற்கும்.

மிகவும் துணிச்சலானவர், அதிரடி நடவடிக்கைகளுக்குப் பெயர் பெற்றவர் என்று வர்ணிக்கப்பட்ட அமெரிக்க அதிபர் றொனால்ற் றேகன் தனது ஒவ்வொரு நகர்வுகளுக்கும் சோதிடர்களின் வழிகாட்டலை நம்பியிருந்தார். அவருடைய அரசியல், இராணுவ நிர்வாகத் தீர்மானங்கள் சோதிடக் கணிப்பின் அடிப்படையில் எடுக்கப்பட்டன.சோதிடர்களின் ஆலோசனை இல்லாமல் ஒன்றுமே செய்யமாட்டார் என்னுமளவிற்கு நிலமை இருந்தது. வெள்ளை மாளிகைக்கு வந்தபோன சோதிடர்கள் மீது ஒரு கண் வைத்திருக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்நாட்டு உளவமைப்பான எப்பி.ஐ. தள்ளப்பட்டது.அதிபர் றேகனுக்கு நிகரான சோதிட நம்பிக்கை திருமதி நான்ஸி றேகனுக்கும் இருப்பதாக வலியுறுத்தப்படுகிறது. இன்றும் இருவரும் உயிர் வாழ்கின்றனர்.

மார்ச்சு 31.1981இல் அதிபர் றேகன் மீது படுகொலை முயற்சி நடத்தப்பட்டது. அவருடைய இடது பக்க நுரையீரல் பிஸ்ரல் குண்டினால் துளைக்கப்பட்டது. சத்திர சிகிச்சைக்குபின் அவர் உயிர் தப்பினார். இச்சம்பவம் நடப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன் நான்சி றேகனுக்கு ஒரு எச்சரிக்கைக் கடிதம் வந்தது. வெள்ளை மாளிகையில் இருந்து 3000மைல் தொலைவிலான சான்பிறான்சிக்கோ நகரில் வாழ்ந்த திருமதி ஜோன் குயிக்லி (MRSJOAN QUIGLY) என்ற சோதிடர் இக்கடிதத்தை எழுதினார். "31மார்ச் நாளில் உங்கள் கணவரின் நட்சத்திரங்கள் ஒன்றாக வருகின்றன. இது ஆபத்தான நாள் அவர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்." கடிதம் இச்செய்தியைக் கூறியது.

கடிதம் எழுதியவருக்கும் றேகன் குடும்பத்திற்கும் இடையில் இதற்கு முன்யாதொரு தொடர்பும் இருந்ததில்லை. இதன் காரணமாக கடிதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்ப வில்லை. இதற்கு மேலாக றேகன் குடும்ப சோதிடர் கரோல் ரைற்றர் (CARROL RIGHTER)றேகனுக்கு இது மிகச் சிறந்த காலம் என்று உறுதிமொழி வழங்கினார்.கொலை முயற்சிக்குப் பின் கரோல் ரைற்றர் வெள்ளை மாளிகைக்கு வர அனுமதிக்கப்படவில்லை. திருமதி ஜோன் குயிக்லி றேகன் குடும்ப சோதிடர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த றேகன் கொர்பச்சேவ் சந்திப்பு இவர் எடுத்துக் கொடுத்த நாள் நேர அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாக இப்போது அறிய வருகின்றது.

சோதிடம் என்ற குறியீட்டின் கீழ் ஆரூடம், குறிசொல்லுதல்,பூசைக்குப் பின் அருள்வாக்கு கூறுதல், அஞ்சனம் போட்டுப் பார்த்தல் போன்ற பலதரப்பட்ட விடயங்கள் அடங்குகின்றன. "ஆரூடம் என்பது நினைத்த காரியம் சொல்லுதல்" என்று இது பற்றிய நூல்கள் கூறுகின்றன. ஆரூடம் சொல்பவர்கள் தம்மை நாடி வருபவர்கள் மனதில் உள்ள வினாவிற்கு விடை கூறுவார்கள். அத்தோடு கேட்ட கேள்விக்கும் உடனடியாக பதில் தருவார்கள். சோதிடம் வித்தியாசமானது அது குருவின் கீழ் கற்க வேண்டிய கிரக நிலைகளின் அடிப்படையில் பலன் கூறும் சாஸ்திரம். ஆரூடம் யாரிடத்திலும் கற்கமுடியாத விடயம். ஆரூடம் கூறுபவரின் சக்தியை விளக்கவோ விளங்கிக் கொள்ளவோ இயலாது.

நவீன உலகின் மிகச் சிறந்த ஆரூடம் கூறுவோர்களில் 1918ல் அமெரிக்காவின் விஸ்கொன்சின் மாநிலத்தில் பிறந்த திருமதி ஜீன் டிக்சன்(MRS. JEANE DIXON)முக்கியமானவர். இவருடைய ஆரூடங்களில் 50 வீதமானவை வியப்பூட்டும் விதத்தில் சரியாக அமைந்தன. மிகுதி தவறு என்று நிராகரிக்கப்பட்டுள்ளன. நீலக் கண்ணும் அழகான முகமும் கொண்ட ஜீன் நிலபுலன் வாங்கி விற்கும் தொழில் செய்தவர். ஆரூடம் கூறுவது மூலம் பொருள் தேடும் தேவை அவருக்கு இருக்கவில்லை.

1944ல் அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ற் இவரைச் சந்தித்தார்.அப்போது இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்தது. ரூஸ்வெல்ற் அமெரிக்கா சார்பில் அதை நடத்திக் கொண்டிருந்தார். ரூஸ்வெல்ற் ஒரே யொரு கேள்வியைக் கேட்டார்."நான் இன்னும் எவ்வளவு காலம் உயிர் வாழ்வேன்?" ஆறு மாதம் மாத்திரமே என்று ஜீன் உடன் பதில் கூறினார். அப்படியே நடந்தது. அதிபர் ஹரீரூமன் பதவியேறியதோடு உலகப் போரையும் முடிவுக்குக் கொண்டு வந்தார்.

1945ல் பிரிட்டிசாரின் சேவையில் இருந்த இந்திய இராணுவ அதிகாரி ஷேர் அலி ஒரு விருந்துபசாரத்தில் ஜீன் டிக்சனை சந்தித்தார். அவர் இதுபற்றி ஒன்றும் கேட்காமலே ஜீன் திடீர் என்று இப்படிச் சொன்னார். "இப்போது உங்களால் இதை நினைத்துப் பார்க்கவும் முடியாது. பெப்ரவரி 20,1947ல் இந்தியா இரு நாடுகளாகப் பிரியும் இன்னுமோர் சந்தர்ப்பத்தில் அவர் மகாத்மாகாந்தியின் படுகொலை நடக்கவிருக்கும் நாளைப் பற்றி பிறிதோர் நபருக்குக் கூறியுள்ளார். இரண்டாம் உலகப் போரை வெற்றிகரமாக நடத்திய பிரிட்டிஸ் பிரதமர் வின்ஸ்ரன் சேர்சிலைப் பார்த்தபோது ஜீன் "நீங்கள் அடுத்த தேர்தலில் தோல்வி அடைவீர்கள்" என்றார். அதுகும் அப்படியே நடந்தது.

ஜீன் டிக்சன் பற்றிக் கேள்விப்பட்ட இந்தியப் பிரதமர் நேரு,அமெரிக்காவில் வைத்து அவரைச் சந்தித்தார். நேரு கேட்ட கேள்வி களுள், "எனக்குப் பின் யார் பிரதமராவார்?" என்பது முக்கியமானது."ஒரு உயரம் குறைந்த மனிதன் அவருடைய குடும்பப் பெயர் 'எஸ்' என்ற ஆங்கில எழுத்தில் தொடங்கும்" என்று ஜீன் பதிலளித்தார்.நேருவுக்குப் பின் லால்பகதூர் சாஸ்திரி இந்தியாவின் பிரதமரா னார்.

1956ல் ஜீன் டிக்சன் பகிரங்கப் படுத்திய ஆரூடம் பிற்காலத்தில் அமெரிக் காவை உலுக்கியது. பரேட்(PARADE)என்ற வெகுசன சஞ்சிகைக்கு அளித்த செவ்வியில் அவர் இப்படி கூறினார்.

"நீலக் கண்களும் அடர்த்தியான பிரவுண் நிறத் தலைமுடியுள்ள ஒரு உயரமான இளைஞன் 1960ல் அமெரிக்க சனாதிபதியா வான். அமெரிக்காவின் மிக வயது குறைந்த ஜனாதிபதியாக அவன் இருப்பான். பதவியில் இருக்கும் போதே அவன் கொல்லப்படுவான" இது ஜோன் கெனடி சம்பந்தமான ஆரூடம் என்று சொல்லத் தேவையில்லை.

செப்ரம்பர் 11 நிகழ்சிக்குப் பின் பிரான்ஸில் பிறந்த 16ம் நூற்றான்டு மருத்துவர் நொஸ்திரதாமுஸ் எழுதி வைத்த ஆரூடங்களின் மீது உலகின் கவனம் செல்கிறது.மிச்சல் திநொஸ்திரதாமுஸ் (MICHELDE NOSTRAD AMUS)ஒரு யூதக் குடும்பத்தில் டிசெம்பர் 14,1503ல் பிறந்தவர்.ஆழமான பக்தி மார்க்கத்தில் ஈடுபட்ட றோமன் கத்தோலிக்க மதத்தினரான நொஸ்திரதாமுஸ் அதிகம் பேசாதவர்.நிறையச் சிந்திப்பவர். 'நூற்றாண்டு கள்' (CENTURIES) என்ற பெயரில் அவர் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட எதிர்வு கூறல்கள் அடங்கிய நூலை மே 04,1555ல் பிரசுரித்தார்.

இந்த நூலில் அடங்கிய ஆரூடங்கள் கி.பி3797 வரை செல்கின்றன. எதிர்வரும் உலக வரலாறாகவும் இந்த நூல் அமைகின்றது .இதில் சொல்லப்பட்டவை இதுவரை நடந்தேறி விட்டன. 1792ல் நடந்த பிரெஞ்சுப் புரட்சி பற்றிய செய்திகள் இதிலுள்ளன. நெப்போலியன் ஹிற்லர் போன்றோரின் எழுச்சியும் வீழ்ச்சியும் பற்றிய தகவலும் இதில் உண்டு. முதலாம் இரண்டாம் உலகப் போர் ஜப்பான் மீது அணுக்குண்டு தாக்குதல் போன்ற அண்மைக் கால நிகழ்ச்சிகளும் இதில் உண்டு. ஐ.நா. மற்றும் ஐரோப்பிய ஒன்றிய உருவாக்கம் பற்றியும் இந்த நூலில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நீர்மூழ்கிக் கப்பல்கள், விமானங்கள், தொலைபேசிகள், வானொலி தொலைக்காட்சி இத்தியாதி எதிர்வரும் கண்டுபிடிப்புக்கள் பற்றியும் இந்த நூல் அறியத்தருகிறது.

அரபு இனத்தவர் மத்தியில் ஒரு சர்வாதிகாரி தோன்றுவான். மூன்றாம் உலகப் போருக்கு அவன் காரணமாவான். என்ற செய்தியை இந்த நூலைப் படித்த ஜோர்ஜ் புஷ் அரசு மிரண்டு போயுள்ளது. சதாம் ஹுசையினை அந்த சர்வாதிகாரியாக நினைத்து ஈராக்கிற்கு எதிரான போரை அமெரிக்கா நடத்துவதாக சோதிடத்தில் நம்பிக்கை உள்ளோர் கூறுகின்றனர்.

அரபு இனத்தவர் மத்தியில் ஒரு சர்வாதிகாரி தோன்றுவான். மூன்றாம் உலகப் போருக்கு அவன் காரணமாவான். என்ற செய்தியை இந்த நூலைப் படித்த ஜோர்ஜ் புஷ் அரசு மிரண்டு போயுள்ளது. சதாம் ஹுசையினை அந்த சர்வாதிகாரியாக நினைத்து ஈராக்கிற்கு எதிரான போரை அமெரிக்கா நடத்துவதாக சோதிடத்தில் நம்பிக்கை உள்ளோர் கூறுகின்றனர்.

கவிதை வடிவிலான பழைய பிரெஞ்சு மொழி நூலான "நூற்றாண்டுகள்" சில இடங்களில் விளங்குவதற்கு கடினமான விதத்தில் செய்திகளை சொல்கின்றது.சில நிகழ்ச்சிகள் நடந்தேறிய பின்புதான் வெளிச் சமாகின்றன. ஆனால் இன்னும் வேறு செய்திகள் முதற் பார்வையில் விளங்கும் விதத்தில் எழுதப்பட்டுள்ளன. இதற்கு உதாரணமாக இந்திராகாந்தியின் படு கொலையை சுட்டிக்காட்டலாம். நூலின் 6ம் பகுதி 74ஆம் கவிதை "மூன்று பக்கத்தில் நீரால் சூழப்பட்ட நாட்டின் அதிசக்தி வாய்ந்த தலைவி மீண்டும் பதவியேறுவார். 67ஆம் வயது முடியுமுன் தனது வீட்டில் தனது பாதுகாப்புப் படையினரால் கொல் லப்படுவார். புதிய நூற்றாண்டு பிறப்பதற்கு 16வருடம் இருக் கும் போது இது நடக்கும்" இந்திரா காந்தி 1984ல் கொல்லப் பட்டார் என்பது வரலாறு.

6ஆம்பகுதி 75ஆம் கவிதையில் கிடைக்கும் செய்தி மிகவும் சுவையானது. "மரணக்கதிர்களைச் சிந்தும் பேரழிவு ஆயுதங்களை மொங்கல் இனத்தவர் பாவித்த பின் உலகப் போர் ஆரம்பிக்கும். உலகின் சக்தி வாய்ந்த இருநாடுகளுடனான நட்பு காரண மாக இந்தியாவின் எதிர்காலம் புதிய திருப்பம் அடையும். புதிய நூற்றாண்டின் 5ஆம் வருடத் தில் இப்போர் முடிவுக்கு வரும். 2006ல் அமைதி ஏற்படும். ஐரோப்பா தனது மதத்தை கைவிட்டு உலகின் மிகப் பழமையான மதத்தைத் தழுவும். மனித குலத்தின் 75வீதமானோர் இதில் மடிவார்கள். தென்னிந்திய ஆன்மிகத் தலைவரின் வழிகாட்டலில் உலகம் மீண்டும் இயங்கும்"

கோரிய தீப கற்பத்தில் வாழும் மக்கள் மொங்கல்(MOGOL) இனத்தவர்கள். இவர்கள் போர் வீரன் ஜென்கிஸ்கான் பரம்பரையினர், அணுஆயுத தயாரிப்பைக் கைவிடுமாறு வடகொரியாவை அமெரிக்கா நிர்ப்பந்திக்கிறது. இப் புத்தகம் படித்த தாக்கம் புலப்படுகின்றது.

மேற்கு நாடுகளின் பிரச்சாரப் போரில் சோதிடம் முக்கிய இடம் வகிக்கின்றது. நொஸ்திரதா முஸ்சின் பெயரால் பல பொய்த் தகவல்களைத் தாங்கிய நூல்களை ஹிட்லரின் சோதிட ஆலோசகர் கார்ள் ஏர்னெஸ்ற் கிராப்ற்(KARL ERNEST KRAFT) வெளியிட் டார். சோதிடத்தில் ஹிட்லருக்கு பெரும் நம்பிக்கை இருந்தது. எந்த நாட்டின் மீது எந்த இராணுவ அதிகாரியின் தலைமையில் எந்த நாள் நேரத்தில் தாக்குதல் நடத்த வேண்டும் என்பதை சோதிடர்கள் ஆலோசனைப்படி ஹிட்லர் தீர்மானித்தான்.

பிரிட்டிசாரின் பிரச்சார அதிகாரியான ஜேம்ஸ் பொன்ட் நாவலாசிரியர் இயன்பி ளெங்மிங் சோதிடத்தின் மூலம் பதிலடி கொடுத் தார். அவர் ஜேர்மனிக்கு மிகவும் இரகசியமாக அனுப்பிய உளவாளிச் சோதிடன் ஹிட்லரின் சோதிட வட்டத்திற்குள் நுழைந்து விட்டான். ஹிட்லருக்கு அடுத்த இடத்தில் இருந்த றுரடொல்ப் ஹெஸ் (RUDOLPH HESS) என்பவனின் நம்பிக்கைக்கு உரியவனாக அவன் உயர்ந்தான்.போலிசோதிடன் ஹெஸ் அதிகாரிக்கு இவ்வாறு அடித்துக் கூறினான். ஜேர்மனியை அழிவிலிருந்து காப்பாற்ற உன்னால் மாத்திரம் முடியும். விமானம் ஓட்டத்தெரிந்த நீ ஒருவருக்கும் தெரியாமல் இங்கிலாந்து சென்று அமைதிப் பேச்சு நடத்து" இதன்படி தன்னந்தனியாக ஹெஸ் போர் நடந்துகொண்டிருந்தபோது இங்கிலாந்து வந்தான். அவனுக்கு விசாரணையின் பின் ஆயுள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. மிக அண்மையில் அவன் சிறையில் உயிரிழந்தான். இரு பக்கமும் கூருள்ள கத்திக்குச் சோதிடம் ஒப்பிடப்படுகின்றது. ●

அன்பரசு

விதைத்தவை



பகுதி — 03

அடர்த்தியான இருள். கருமையான வானத்தில் எங்கோ தூரத்தூர மின்னும் நாலைந்து நட்சத்திரங்கள். உடம்பை ஊசியாய் குத்தும் குளிர்காற்று. பின் ஒழுங்கை வாய்க்கால் சரிவு வயல்கரை பள்ளம் மேடு என்று விழுந்தெழும்பி பூநகரி வீதியில் மிதந்தார்கள். இருட்டுக்குள் கூட்டம் கூட்டமாய் சனங்கள் நடந்து கொண்டிருந்தார்கள். பயம் நிறைந்த மனங்களோடு அவர்கள் பயணம் நடந்தது.

குஞ்சுப்பரந்தனில் விதானையாரின் வீட்டக்குத்தான் அவர்கள் போனார்கள். வழி வழியே தெரிந்தவர் அறிந்தவர் வீடுகளுக்கு பலர் பிரிந்து போய் விட அவர்களோடு சேர்ந்து நாற்பது பேர்வரை விதானையாரின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

சிதம்பரியின் பேரப்பிள்ளை ஓயாமல் அழுதுகொண்டேயிருந்தான். சிவலிங்கம் விதானை இல்லாத குறை தெரியாமல் அவரின் மனைவியும், மகள் குடும்பமும் சோர்ந்து களைத்து வந்தவர்களை வரவேற்று இருக்க வைத்தார்கள். வீட்டுக்கு பக்கத்து முற்றங்களிலும் பின் வளவுகளிலும் வாகனங்களை விட்டு விட்டு வீட்டு விறாந்தை, தாழ்வாரம் பக்கத்து கொட்டில், முற்றத்து மணல்பரப்பு என்று கிடைத்த இடங்களில் களைப் போடு அமர்ந்து கொண்டார்கள்.

பெரிய பானையில் பச்சரி சிக்கஞ்சி காய்ச்சி சாமம் பன்னிரண்டு மணிக்கு மேல் எல்லோரையும் எழுப்பிக் குடிக்க வைத்தார்கள். சிவம் மனவேதனையுடன் விறாந்தை தூணிலேயே சாய்ந்திருந்தார். வீடு வாசல் விட்டு இப்படி ஓடி வந்ததில் மனம் ஆடிப்போய் இருந்தது. வேலாயுதத்தின் நினைவு வந்தது. பரந்தன் சந்தியில் இத்தனை வெடிச்சத்தம் கேட்ட பிறகு அவர்கள் தங்கள் வீட்டில் இருந்திருக்கமுடியாது.

எங்கே போயிருப்பார்கள்.....

அந்த இருட்டுக்குள் தெருவில் அவர்கள் வந்திருந்தாலும் பார்த்திருக்க முடியாது.

அண்ணை வீட்டை விட்டு வெளிக்கிட ஏலாது என்று நினைத்தும் இருக்கக்கூடிய ஆள் என்ற கவலையும் கூடவே எழுந்தது. இந்தக் கூட்டத்துக்குள் விநாசியின் குடும்பம் வரவில்லை. ஆனாலும் தன் வீட்டாரைக் கூட்டிக்கொண்டு உருத்திரபுரம் போகப்போவதாய் மகேசன் சொன்னதில் கொஞ்சம் ஆறுதலாய் இருந்தது.

பொழுது விடிந்ததும் ஓவசியர் சந்தி வரை என்றாலும் போய்ப் பார்க்க வேண்டும் என்று நினைத்தார். பொழுது விடியும் வரை அப்படியே சரிந்து படுத்திருந்தார்.

காலையில் சத்தங்கள் நின்று விட்டன. சந்திக்கடையில் பாண் வாங்கி எல்லோரும் பகிர்ந்து தேனீரு டன் சாப்பிட்டார்கள். அன்று ஓவசியர் சந்திவரை தான் போக முடிந்தது. வேலாயுதம் ஆட்கள் பற்றி தகவல் தெரியவில்லை. மத்தியான நேரம் தாங்கள் பண்டாகமத்து வீட்டிற்கு போகப்போவதாய் வேலாயுதம் சொன்னதாய் கறுப்பையன் சொன்னான். மரியக்கண்டுவையும் காணவில்லை. எல்லோருமாய் பண்டாகமத்து வீட்டில் தான் இருக்கிறார்களோ தெரியவில்லை. அது கொஞ்சம் உள்ளே தான் இருக்கிறது. என்றாலும் இத்தனை வெடிச்சத்தங்களுக்கும் நடுவே பயமில்லாமல் எப்படி இருக்க முடியும்..... போய்ப் பார்க்க முடியவில்லை. ஓவசியர் சந்தி தாண்டி யாரும் போகவில்லை.

"பரந்தன் குமரபுரம் எல்லாம் ஆமிநிற்குதாம்" என்ற கதை பரவியது.

இரண்டு நாட்களுக்கு பிறகு ஒவ்வொருவராக திரும்பிப்போக தொடங்கினார்கள்.

"எல்லாச்சனத்தையும் தங்கட வீடுகளில வந்து இருக்கச் சொல்லுறாங்களாம்."

விதானையார் வீட்டில் சொல்லிக்கொண்டு அவர்களும் ஊருக்குத்திரும்பி வந்தார்கள். பூநகரி வீதியில் வரும்போது வேலாயுதத்தின் வீட்டைப்பார்த்தார். அமைதியாய் இருந்தது. யாருடைய நடமாட்டத்தையும் வெளியே காணவில்லை.

வீட்டுக்குப் போய் இவர்களை விட்டு விட்டு வந்து ஒருக்கா அண்ணையை விசாரிக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டே போனார். தங்கள் வீட்டுக்கு வந்தவர்கள் நெல்லறையைப் பார்த்து கதிகலங்கிப்போனார்கள். அகலமான கதவுகள் விரியத் திறந்துகிடந்தன. உள்ளே இருந்த நெல்லு மூட்டைகளுக்கு நெருப்பு வைக்கப்பட்டிருந்தது. கருங்குவியலாய் இப்போதும் புகைத்துக்கொண்டிருந்தது. மேல் கூரை மரங்கள் எரிந்து பாதி விழுந்திருந்தது. அவர் பதறிக்கொண்டே சுற்றிலும் பார்த்தார். கடவுளே.... நெல்லுக்குப்போய் நெருப்பு வைத்தார்களே.....

அவர் இடிந்து போய் நின்றார். நெருப்பு புகையும் நெல்லின் கருகல் வாசனை மூக்கை வந்து நெருடியதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அப்போது மரியக்கண்டு பதரியடித்துக்கொண்டு ஓடி வருவதைப்பார்த்தார். நெஞ்சின் சிதறி விட்டதோ.... நெஞ்சின் ஆழம் வரை வலித்தது.

நவஜீவனம் வந்து காரை நிறுத்திவிட்டு உள்ளே அவசரமாய் ஓடினார்கள். கட்டிலில் வேலாயுதம் கண்மூடிப்படுத்திருந்தார். குழாய் மூலம் குளுக்கோஸ் ஏறிக்கொண்டிருந்தது. அவர்கள் வருகையை உணர்ந்து மெதுவாய் கண்களைத திறந்தார். தலைமாட்டில் நின்ற கனகம் மச்சாள் சேலைத்தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டு அழுதாள்.

கட்டிலின் ஓரத்தில் சிவம் அமர்ந்து அவரின் கையைப் பிடித்துக் கொண்டு 'அண்ணை' என்றார். உலர்ந்து போன அவரது வாய் "சிவம்..... என்று ஒரு தடவை அசைந்தது.

அவரால் பேச முடிய வில்லை. கண்களிலிருந்து நீர் சிறு மணிகளாக உருண்டு வழிந்தது.

அண்ணை கண் கலங்குவதாவது.....

சிவத்துக்கு நெஞ்சு பதறியது.

வைத்தியரிடம் ஓடிப்போய் நிலமையை விசாரித்தார்.

"யாழ்ப்பாணம் கொண்டு போகலாம் என்றாலும் சரி. சுகமாகி விடவேணும்"

"இந்த நிலைமையில பிரயாணம் செய்யிறது ஆபத்தைத் தான் தரும். தவிரவும் அம்புலன்ஸைக் கூட ஆனையிறவில மறிச்சு வைக்கினமாம், எங்களால ஏலுமான அளவு பார்க்கிறம். அதிர்ச்சிதான் அவரைத்தாக்கியிருக்கு."



வேலாயுதம் மயக்கத்துக்கும் விழிப்புக் குமிடையே ஊசலாடிக் கொண்டிருந்தார். அவரின் எழுந்தது. பொங்கி வந்த கண்ணீரை அவரால் அடக்க முடியவில்லை. தன் உயர்வுக்கு இவர் காரணம். சோர்ந்து போனபோதெல்லாம் தோள் அணைத்து உற்சாகப்படுத்தியவர். உழைப்பின் மீதான ஆர்வத்தையும் வாழ்வின் மீதான நம்பிக்கையையும் வளர்த்தவர். இவர் மட்டும் இங்கே கூட்டி வந்திருக்காவிட்டால் தென்மராட்சி கிராமத்தில் தரவை வெளியில் இப்போதும் மாடுகள் மேய்த்து கொண்டிருந்திருப்போமோ என்னவோ....

வேலாயுதத்தை சுடலையில் எரித்தபோது தாங்கிக்கொள்ள முடியவில்லை. தன்னை மறந்து தன் வயதை மறந்து கதறி அழுதார். மரியக்கண்டு ஒரு ஓரத்தில் நின்று விம்மி வெடித்துக்கொண்டு அழுதான். அவர் மீது உயிரையே வைத்திருந்தவன். கண்டிப்பும் கனிவுமாக தனித்து வந்தவனை அரவணைத்து தன்னோடு வைத்துக்கொண்டவர் அவர். முதலாளி..... முதலாளி என்ற அவனது கலங்கிய குரல் தனியாகக் கேட்டுக்கொண்டிருந்தது.

வேலாயுதத்தின் மறைவு எல்லாமே வெறுமையாகிக்போனது போன்ற உணர்வைத் தந்தது. அந்த துயரத்தை மறந்து வயல்வேலைகளில் மும்முரமாய் இறங்கவேண்டியிருந்தது.

காலபோக நெல்லின் பெரும் பகுதி எரிந்து அழிந்து விட்டதில் கவலையும் கலக்கமும் மனதில் நிறைந்து போயிருந்தது. திகைத்துப்போய் இருக்க முடியாமல் மிகுதிக்காணிகளில் நெல்லை அறுவடைசெய்து சூடடித்து லொறிகளுக்கு கொடுத்தார். இம்முறை ஆதம்லெப்பைக் காக்கா வரவில்லை.

நடவடிக்கைகளினால் அதிர்ந்து கொண்டிருந்தது. தலைக்கு மேலாக இரைந்துகொண்டு குண்டு வீச்சு விமானங்கள் பறந்து திரிந்தன. நெல் ஏற்ற வடமராட்சியிலிருந்து லொறிகள் வரவில்லை. எரிந்த முகட்டு மரங்களை எடுத்து புதிதாய் மரங்கள் போட்டு ஒடு போட்டு நெல்லறையை திருத்திக் கட்டியிருந்தார். இப்போது சூடடித்த நெல்மூட்டைகளை நெல்லறைக்குள் கொண்டுவந்து அடுக்கினார். லொறிகளின் வரவு குறைந்தது கவலையைத் தந்தது. தொடர்ந்து நடந்த சண்டை பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியது.

அடுத்த சிறுபோக விதைப் புக்குரிய காலமும் வந்து விட்டது. எரிந்து போனவை போக இருக்கின்ற நெல்லை முழுவதுமாய் விற்றுக் கொள்ள முடியாத சூழலில் சிறுபோக விதைப்பு தொடங்கியது.

பச்சைப் பசேலென்று பயிராகியது.

வடபகுதி தமிழ் மக்களுக்கு உணவும் மருந்தும் கொடுக்கப்போவதாய் இந்தியா விட்ட அறிக்கை பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் வந்திருந்தது. மருந்தும் உணவும் வந்த படகுகளை இலங்கை கடற்படை திருப்பியனுப்பியது. அடுத்தடுத்த நாட்களில் இந்திய விமானங்கள் வட பகுதியில் உணவுப் பொட்டலங்களைப்போட்டது. எண்பத் தேழு யூலைமாதம் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

சூடடித்து சிறுபோக நெல்லை உழவியந்திரப்பெட்டியில் அடுக்கி வீட்டுக்குக்கொண்டு வந்த அந்த நாளில்தான் இந்திய ஆமி இலங்கைக்கு வந்துகொண்டிருக்கிறது என்ற செய்தியை அவர் கேள்விப்பட்டார்.

"இந்திய ஆமி வந்திட்டுதாம். சனம் மாலை போட்டு வரவேற்குதாம்"

"இலங்கை ஆமி எங்களுக்கு செய்த அநியாயத்துக்கு எங்களைக் காப்பாற்றத்தான் இவங்கள் வந்திருக்கிறாங்களாக்கும்."

"இந்திய ஆமி எண்டு இல்லையாம், இதுக்கு இந்திய அமைதிகாக்கும் படை எண்டு தான் பேராம்."

சனம் தெருவுக்குத் தெரு நின்று கதைத்துக்கொண்டது.

சூடிக்களத்திலிருந்து சிவம் திரும்பியபோது ஓவசியர் சந்தியில் மாறனையும் இன்னும் சிலரையும் பார்த்தார்.

"என்னப்பன், இந்திய ஆமி வந்திருக்கு"

"இதெல்லாம் அவ்வளவு நல்லதுக்கு இல்லை ஐயா."

அவனது கண்களில் கவலை இருந்தது.

"எங்களை இலங்கை ஆமியிட்டயிருந்து காப்பாற்றத்தான் வந்திருக்கிறாங்கள் எண்டு தானே சனம் கதைக்குது."

"அவங்களுக்கு சனத்தை விட தங்கட அரசியல்தான் முக்கியம். தங்கட அரசியல் நலனை வைச்சுத்தான் எங்கட தலைவிதியைத் தீர்மானிக்கிறாங்கள். எல்லாத்தையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேணும்"

மாறனின் வார்த்தைகள் அவருக்கு புரியவில்லை.

சில நாட்களில் இந்திய ராணுவத்தின் துப்பாக்கிகள் குண்டுகளை நிரப்பிக்கொண்டு தமிழ்மக்களுக்கு எதிராய் வெடித்தபோது ரத்த ஆறு மறுபடி ஓடத்தொடங்கியது. ராமசாமியின் மகன்..... ஏற்கனவே ஆனையிறவில் இலங்கை இராணுவத்தால் சித்திரவதை செய்யப்பட்டு குற்றுயிராய் கிடந்து எழுந்த இருபத்திநாலுவயதுப் பிள்ளை.... கரடிப்போக்கு சந்தி வயல் கரைப்பாலத்தடியில் இந்திய இராணுவத்தால் சுடப்பட்டு இறந்ததைப் பார்த்து ஊரே தலையில் கை வைத்து ஏங்கிப்போய் நின்றது.

அவர்களின் குண்டுகள் தொடர்ச்சியாக எங்கும் வெடித்தன.. மாறனின் வார்த்தைகள் இப்போது அவருக்கு சிறிது விளங்கியது போல் இருந்தது.

(தொடரும்)

தாமரைச்செல்வியின்

பிரசவவலி கதவு

அத்தியாயம்-03

ஓரத்தில் லேசான கலவரம் எட்டிப் பார்த்தது.

"பெரிய முதலாளிக்கு....." மேலே சொல்ல இயலாமல் மூச்சு வாங்க நின்றான்.

"ஏன்.... அண்ணைக்கு என்ன?.... அவசரமாகக் கேட்டார்.

"ஆமிக்காரன் பரந்தனுக்கு வரபோது ரோட்டுக்கரையில இருந்த பெரிய முதலாளியின்ர வீட்டையும், மில்லையும் குண்டுவைச்சு இடிச்சிட்டாங்க. வீடு இடிஞ்சு போயிட்டுது எண்ட உடன ஏங்கிப்போய் நெஞ்சைப்பிடிச்சுக்கொண்டு விழுந்திட்டாரு. இப்போ நவஜீவனம் ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கு. அம்மா அழுதிட்டே இருக்கு. உங்கள உடன கூட்டியர சொன்னாங்க" அவர் பதட்டத்துடன் காரில் மரியக்கண்டுவையும் பராசத்தியையும் ஏற்றிக்கொண்டு உடனும் புறப்பட்டார்.

பரந்தன் சந்தியில் நிறைய இராணுவம் நின்றிருந்தது. சந்தி கடந்து முரசுமோட்டை நோக்கி காரைச் செலுத்தினார். மனதினுள் பதட்டம் குறையவில்லை. ஸ்ரேறிங்கில் பதிந்திருந்த கைகள் நடுங்கின. கடவுளே..... அண்ணைக்கு ஒன்றும் வந்து விடக்கூடாது என்று மனம் பதறிக்கொண்டே இருந்தது.

அந்த வீடும், மில்லும் அண்ணையின் எத்தனை நாள் கனவு. ஒவ்வொரு கல்லாய் தானே நின்று சுமந்து கட்டிய கட்டடம். பூநகரி வீதி வீட்டுக்கு இருக்க வந்து விட்ட பிறகும் அந்த வீட்டை எத்தனை அருமையாய் பாதுகாத்தார். அது சிதறியதாய் அறிந்ததும் மனமும் முகத்தைப் பார்க்கவே பயமாக இருந்தது.

அன்று இரவு பத்தேகால் மணிக்கு வேலாயுதத்தின் சகல துடிப்புக்களும் அடங்கிவிட்டது. நம்ப முடியாத நிலையில் பிரமை பிடித்தவராய் சிவம் சில நிமிடங்கள் நின்று விட்டார். கனகம் மச்சாளும் பிள்ளைகளும் கதறி அழுகின்ற ஓலம் அவர் நெஞ்சை அறுத்தது.

கடைசி நிமிடம் அவர் வேலாயுதத்தின் முகத்தைப் பார்த்தார்.

விழிகள் மூடியிருந்த வட்ட முகம், வாய் சற்று திறந்திருக்க பொன்நிற பல் ஒன்று லேசாய்த் தெரிந்தது. இறுக்கமான உணர்வை வெளிப்படுத்தும் முகம். அந்த இறுக்கத்துக்குள் தம்பிக்காக உருகுகின்ற ஒரு இதயம் ஈரமாகவே இருந்திருக்கிறது.

தான் உயரும்போதே அவரையும் கைதூக்கிவிடும் அக்கறை இருந்திருக்கிறது. அறுபத்திநான்கு வயதுக்குள் தன் உழைப்பால் உன்னத நிலைக்கு வந்தவர் இவர். கிளிநொச்சியில் ஒரு செல்வாக்கு மிகுந்த பிரமுகராக உயர்ந்தவர். தனது பண்பாலும் நடவடிக்கைகளினாலும் தனித் தன்மையுள்ளவராக கணிக்கப்பட்டவர்.

ஒரு மழை நாளில் இவருடன் முதன் முதலில் இந்த மண்ணுக்கு வந்தது நினைவில் ஐம்பத்தைந்தாம் கட்டையிலிருந்து அரிவு வெட்டுக்கும் ஆட்களை ஏற்றி இறக்க வேண்டியதாயிற்று.

சூடு வைப்பதைப்பார்த்து விட்டு வீடு திரும்பிய மதியப் பொழுதில் பரந்தன் சந்தியில் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. மனம்துணுக்குற்றது. வீட்டுக்குள் நுழைந்த சில நிமிடங்களில் பரமு வேர்க்க விறுவிறுக்க வந்துசொன்னான்.

"சைக்கிளில மண்ணெண்ணை கானோட போன கார்த்திக்கை ஆமி சுட்டுப்போட்டுதாம். நிமால் தம்பி ஓடியிட்டானாம். பரந்தன் சந்தியைச் சுத்தித் தேடுறாங்களாம்."

'திக்'கென்றது.


"ஆமி நிற்கிறது தெரியாமல் போனவ்னே....."

"ஆமிக்காரங்கள் கடைக்குள்ள நிண்டவங்கள். இப்பவும் ரத்தம் வடிஞ்சுபோயிருக்க றோட்டுக்கரையில கிடக்கிறான். பார்க்க தாங்க ஏலாம கிடக்கு அண்ணை"

பரமு கண்கலங்க சொன்னான்.

பொழுது சரியும் நேரம் கார்த்திக்கின் உடலை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு ராணுவத்தினர் கிளிநொச்சிப் பக்கமாய் போனார்கள். இரண்டு நாளாய் சந்தியில் கெடுபிடிகள் இருந்தன.

அடுத்தடுத்த நாட்களில் வடமராட்சி ஒபரேஷன் லிபரேஷன்



சிறுகதை

வீடு

வீடு கிழக்கு நோக்கியதாய் இருந்தது. கீழ்வானில், சோம்பல் முறித்தபடி தூக்கக் கலக்கத்துடனெழும் காலைச் சூரியனின் முதற் கதிர்களை பரந்த முற்றம் வாங்கும். பின் வீடும் வாங்கிச் சேமிக்கும்.

அப்போது முற்றம் பளிச்சென்று இருக்கும். வெளிச்சம் படர முன்னரே திலகவதி அம்மாள் எழுந்து முற்றம் கூட்டி விடுவாள். முற்றம் கூட்டிய பின்னர்தான் பிறகாரியங்கள். அவள் முற்றம் கூட்டுவது, கலை நேர்த்திக்காகச் செய்யப்பட்ட ஒரு காரியம் போலிருக்கும். சூரிய வெயில் முற்றத்தில் பட்டுத் தெறிக்கும். தரைக்குள் புதைந்துபோன, முன்னோர்களின் ஓராயிரம் கனாக்கள் ஜொலிக்கும்.

பிறகு வீட்டினுள்ளும் ஒளி புகும். வீடெங்கும் மிதந்து திரியும் இருள் பின்வாசல் வழியே கரைந்தோடும்.

அகலத்திறக்கப்பட்ட இரட்டைக்கதவுகளினூடே, ஒரு சுட்டிக்குழந்தை போல ஒளி புகுந்து, வீடெங்கும் நிறையும்.

திறக்கப்பட்ட கதவின் பின் புறங்களிலும் உள் அறைகளின் சுவர்களிலும் இருள் பிசுக்கிருக்கும் அடுக்களைப் புகட்டிலும் கரி படிந்திருக்கும். ஆயினும் அது உறுத்தலான விடயம் இல்லை. எந்தக்காரியத்தையு[illegible]டை செய்ததுமில்லை.

அப்போது இரவில் மின் விளக்குகள் எரிந்தன. பின்நாளில் யாழ்ப்பாணத்துக்கான மின் வரத்து அற்றுப்போன பின்தான் விளக்குகள் எரிந்தன. அப்போது அனேக இடங்களில் இருளிருந்தது.

நாற்பத்தெட்டில் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது. மறு வருடம் இவ்வீடு கட்டப்பட்டது. வீடு கட்டிய அப்பாவை திலகவதி அம்மாள் அறியாள். வீடு கட்டப்பட்ட போது அவளுக்கு இரண்டு வயது. வீடு கட்டிய மறு வருடமே அப்பா செத்துப்போனார்.

காணி எல்லைத் தகராறொன்றில் ஆத்திரம் கொண்ட மாட்டுக்காரப் பொன்னு இரவொன்றில் மறைந்திருந்து அடிக்க அப்பா செத்துப்போனார். தலை பிளந்து போனதாம். மாட்டுக்கார பொன்னுவிற்கு 15 வருடம் ஜெயில் கிடைத்தது.

அப்பா சாகும்போது வர்ணம் பூசுவதைத் தவிர மிகுதி அனைத்து வேலைகளும் முடிந்திருந்தன.

அப்பா வெள்ளைக்காரனின் ராணுவத்தில் இருந்தாராம். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஆபிரிக்க நாடொன்றிலும் கடமையாற்றினாராம்.

யாரோ ஒரு வெள்ளைக் காரனிடம் பரிசொன்று வாங்கும் படம் வீட்டில் உள்ளது. வீட்டினுள் நுழையும் ஒருவர் படியேறி நிமிர்ந்து பார்ப்பாராயின் முதலில் காண்பது அந்தப் படத்தைத்தான்.

தனது அப்பாவைப் பற்றிய ஏராளம் கதைகளை அம்மாவிடம் இருந்து அம்மாள் கேட்டிருக்கிறாள். இதிகாசக்கதைகள் போலவே, அக்கதைகளும் இருக்கக் கண்டாள்.

அந்தக்காலத்தில் நாற்சார் வீடுகள்தான் கட்டப்பட்டனவாம். ஆயினும் அது நாற்சார் வீடல்ல. இரண்டு பக்கமும் அறைகள் கொண்ட சிறிதான முன் ஹோல்..... நீளமான விறாந்தை..... அதனெதிரே மூன்று அறைகள்.... அடுத்து குசினி. அதனெதிரே இரண்டு அறைகள்.

வீட்டில் ஒரு சுவாமியறை யிருந்தது. அது நிறையவும் சுவாமிப் படங்களும்..... திருநீறும் இருந்தன. ஒரு களஞ்சிய அறையுமிருந்தது அது நிறையப் பழைய சாமான்களும்.... எலிகளும் இருந்தன. மற்றைய அறைகள் பிள்ளைகளின் பாவனையில்



இருந்தன. கட்டிய மறு வருடமே வீடு சோபையிழந்து போயிற்று. அம்மாளின் அப்பா செத்தபோது அவளிற்கு வீட்டில் இருக்க பயம் பிடித்தது. பேய் உலவுமோ என அஞ்சினாள். இரவுகளில் இருளும் கனவுகளில் பேயும் வந்தன.

அந்தப்பயம் எப்படிக் கரைந்தது என்று, இன்று அவளுக்கு நினைவில்லை. நீண்டநாட்களாக பேய் அவளது தோள்களில் ஏறி உற்கார்ந்திருக் கலாம். பிறகெப்படியோ, இறங்கிக்கொண்டுவிட்டது.

அதன்பின் என்றுமே வீடு சோபை இழக்கவில்லை. அம்மாள் பெரிய பெண்ணான போதும்.... அவளின் திருமணத்தின்போதும் ஆட்கள் நிறைந்தனர், கொள்ளமுடியாமல் வீடு நெளிந்தது, அதிகம் வெட்கம் கொண்டபடி அவர்களின் முன்னால் வந்தபோது, அதிகம் வியர்த்தது. இப்போது அதைநினைத்துச் சிரித்துக்கொண்டாள். அவளது திருமணத்தின் போது வீட்டிற்கு வர்ணம் பூசப்பட்டது. சீனி அம்மான்தான் முதலில் அக்காரியத்தைப் பொறுப்பெடுத் தார். எப்போதும் போல இக்காரியத் தையும் பாதியிலேயே விட்டுப் போக மீதிப்பொறுப்பைச் சுமந்தவர் இளையம்மான்.

மெலிதான நீலவர்ணம் வீட்டினுள்ளே பூசப்பட்டிருந்தது. அதுவே ஒரு மோனநிலையை உண்டுபண்ணியது. மோன நிலை என்றால் அமைதிதானே அதில் துக்கமில்லைத்தானே!

அந்தவர்ணம் வெகு நாட்கள் மாற்றப்படாதிருந்தது. அந்தநாட்களில் வீட்டின் சகல நிகழ்வுகளுடனும் நீலம் பின்னியிருந்தது. அம்மாளும் கதிரித்தம்பி வாத்தியாரும் இல்லறபந்த மிணைந்து பிள்ளைகள் பெற்றெடுத்தனர். மூத்தவள் வாணி. உத்தர நட்சத்திரக்காரி. மூன்று வருடம் கழித்து மஞ்சு பிறந்தாள். அவள் சித்திரை நட்சத்திரம் அதன்பின் நான்கு வருடம் கழித்துப் பிறந்தான் இளையவன் உதயன். அவன் மூல நட்சத்திரம். குழந்தைகளினாலேயே வீடு நிறைவு கண்டது. எல்லா நாட்களிலும் வீட்டில் சிரிப்பொலிகேட்டது. அந்தச் சிரிப்புக்களில் எல்லோரும் மகிழ்ந்திருந்தனர். ஏதோஒரு நாளில், எதற்காகவோ அடம் பிடித்தபடி உதயன் அழ அவனைப் பார்த்தும் பழித்தும் மற்றவர்கள் சிரிக்க, அன்றும் சிரிப்பொலி கேட்டது.

மூத்தவள் படுசுட்டி. இளையவள் அடக்கம். மூத்த வளிற்கும் உதயனிற்கும் தான் சண்டை வரும். இளையவள் ஒதுக்கி விடுவாள். அதனாலேயே, அப்பாவின் அதிக பிரியத்திற்கும் பாத்தியமானவளாயிருந்தாள்.

வீட்டின் கலகலப்பில் தொய்வேற்பட்ட நாளென்றால், அது வாணி பெரிய பிள்ளையான அன்றுதான். வீடு திடீரென அடங்கிவிட்டது. அவள் ஒரேயடி யாக அறைக்குள் முடங்கி விட, உதயனுக்கு சீண்டுவார் அற்றுப்போயினர்.

இதுவும் ஒரு குதூகலம் தான். குதூகலத்தின் மீது ஒரு திரை போர்த்தப்பட்டிருந்தது. அவ்வளவுதான். பின்னாளில், சடங்கைப் பெரிதாகச் செய்த போது. அடங்கியிருந்த நாட் களிற்கும் சேர்த்து வீடு குதியாட் டம் போட்டது.

இப்போது வாணி பெரிய பெண். அவளது அடங்காத வாய் பாதியாகியிருந்தது. சைக்கிளும் மெதுவாக ஓடினாள். வீடு கடந்து, அவளுடன் படிக்கும் சுதன் அடிக் கடி சைக்கிள் ஓடித்திரிந்தான்.

அவள்தான் வீட்டை விட்டு முதலில்ப் பிரிந்தாள். அவள் பிரிய, வீடு இலேசாக நடுங்கியது. பஸ்சேறி... இரயிலேறி.. விமானமேறிப்போய், ஒருவனைக் கைபிடித்து ஜேர்மன் பிரஜையாகிவிட்டாள். போகும்போது வீட்டையும் புகைப்படமெடுத்துக் கொண்டாள்

அடிக்கடி ரெலிபோன் எடுப்பாள். அப்போது சுவர்கள் கூட காதைத் தீட்டிக்கொள்ளும். அவள் குரல் கேட்டு அவை புத்துணர்வு பெறும்.

அப்போதெல்லாம் முற்றத்திலிருந்த பூமரங்களில் தேன் குடிக்கக் குருவிகளும் வண்ணத்துப் பூச்சிகளும் வந்திருந்து போயின. தம் மொழியில் எதையோ பேசிக்கொண்டன. பூமரங்களினடியால் கள்ளம் ஒளிரும் விழிகளுடன் பூனை பதுங்கிப் போகும் பொழுதுகளில் அவலமாகச் சிதறின.

எலித் தொல்லை கருதி வளர்க்கப்பட்ட வெள்ளை நிறப் பெட்டைப்பூனையது. பின் வளவுகளிலும் வீட்டின் முன்னிருந்த தோட்ட வெளிகளிலும் இராப் பொழுதுகளில் அது ஒற்றையாக அலைந்தது. விரகம் மேலிட பெரிதாய்க் கத்தியது. இரவுகளின் அமைதியைக் கிழித்த அவ்வொலி கோரமானதாயிருந்தது. அனேக பொழுதுகளில் சிவப்புப் பாவாடையும் வெள்ளை மேற்சட்டையுமணிந்து திரிந்தாள், இரண்டாவது மகள் மஞ்சு. சித்திரை நட்சத்திரத்துக்காரி. ஒரு பொம்மையின் அழகும்...அமைதியும் வாய்க்கப்பெற்றவள். மூத்தவள் போன பின் வீட்டை அணி செய்பவள்.அவளின் காரணமாகவே வீடு ஒளி பெறுவதாக அப்பா சொல்லிக் கொண்டார். வீடும் அவளுக்காகவே காத்திருந்தது.

இருள் கவிந்த இடமெல் லாம் துலங்கச் செய்தாள். ஒரு நாள், பிழிந்த தேங்காய்ப் பூப் போட்டுத் தரையெல்லாம் தேய்த் தாள். மதியம் வீடு திரும்பிய அப்பா, வேட்டியைத் தூக்கிப் பிடித்தபடி, கால் பாவாமல் நடப்பவர் போல எட்டி எட்டி நடந்து உள்ளே போனார்.

டீவா. கர்ணன்

அவளைப் பெண் கேட்டு, உடுப்பிட்டியிலிருந்தும் சிலர் வந்தனர். பழைய உடையார் பரம் பரை ஆட்கள். பணத்துக்கோ வெனில் குறைவற்றவர்கள்.

அப்பா மறுத்தார்; அம் மாள் மறுத்தாள். உடையார் ஆட் கள் வீடு தேடிவந்த பெருமை, அவர்கள் கால்களிற்கும் தரைக்கும் இடையில் கண்ணுக்குப் புலப்படா வாயுப்பந்தாகி, அவர்களை உயர்த்தி... உருட்டித்திரிந்தது.

"உடையார் என்னடி உடையார்... அவள் ராசாக்கும் சுல்தானுக்காகவும் பிறந்தவள்" வெறி மிகுந்த நாளொன்றில் படுத்திருந்தவாறே அப்பா புலம் பினார்.

அவள் வாய் பொத்திச் சிரித்தாள். அந்த இரகசியச் சிரிப்பொன்றே போதும், வீடு சகல தும் பெற்றதுமாகியது. அம்மாள் குசினிக்குள்ளிருந்து இரசித்தாள். சின்னவன் - அவன் தான் உதயன் - முகம் கழுவிக் கொண்டு வந்தவன், பெரிதாய் விசில் அடித்தான்.

அவளுக்கு வெட்கம் மிகுந்தது. அறைக் கதவைச் சாத்திக் கொண்டாள். மதியப் பொழுதிலும் உடல் சிலிர்க்கக் கண்டாள். கண்ணாடியில் முகம் பார்த்தாள். அதீதமாகச் சிவந்திருந்தது.

இந்தச் சின்னவன் இருக்கிறானே, பிறந்த இருபத் தெட்டாம் நாளே அம்மாளிடம் அடி வாங்கியவன். ஓயாமல் பால் வேண்டியழ அம்மாள் களைத்துப் போய், அவன் பிஞ்சுத் தொடையில் மூன்று விரல்களால் பாதிச் செல்லமாகவும்... பாதிக் கோபமாகவும் அடித்தாள்.

அடி வாங்கிய பின் என்ன செய்தான் என்பது எவருக்கும் நினைவிலில்லை.

இப்போதவன் மகா குழப்படி.

அப்பாவிடம் மூன்று முறை அடி வாங்கியிருக்கிறான். அம்மாள் பலமுறை முதுகில் குத்தியுள்ளாள். அப்போது அவன் சொல்லுவான் -"தாத்தா இருந்தா எனக்கு ஆரும் அடிக்க விடார்...." தினமும் ஏதேனும் செய்து கொண்டேயிருப்பான். அப்பா அடிக்கடி பாடசாலை.. ரியூசன் எனச் செல்ல வேண்டியிருந்தது.

"சின்னக்காவைப் பாரண்டா... அவள் இல்லோ பிள்ளை... நீயொரு காவாலி"

அம்மாள் சொல்லி முடிக்கு முன்

"அம்மா... காவாலியெண்டால் ஆர்?..."

அம்மாளின் சிரிப்பை சுவர் எதிரொலிக்கும்.

காற்றையும் காயப்படுத்தாக் குரல் கொண்ட இளையவள், தம்பியின் வன்குரலில் அதிர்ந்து போன சம்பவங்கள் பலவுண்டு. ஒரு முரட்டுப் போர் வீரன் போல அவன் நடந்துகொண்ட பொழுதுகளில், காற்றிலேறி விரைந்தோடி விடுவாள்.

அம்மாளும் சொல்லிப் பார்த்தாள்.

"டேய் தம்பி... வீட்டுக்கு லச்சுமியாய் ஒரு பெட்டை இருக்கிறாள். அவளோட அடிபிடிப் படுறாய்... பொம்பிளைப் பிள்ளை தானேடா... விட்டுக்குடன்"

அவன் சீண்டல்களின் அடியில் இரகசியமாகப் பதுங்கியிருந்த பரிவை புரியாமல் இருந்தவர்கள், புரிந்து கொள்ளும் நாளொன்று பின்னால் வந்தது.

வீட்டில் சகலதுமாகி நின்றவள் பிரிந்தாள்.

இருள் கவியும் பொழுதொன்றில் பகலுடன் கரைந்து வீடு விட்டகன்றாள். அன்றொரு அமாவாசை நாள், அவள் சென்ற திசை குறித்த சந்தேகம் எவருக்கும் இருக்கவில்லை. அன்று வீட்டில் விளக்கேற்றப்படவில்லை. சுவாமி அறையும் இருளில் இருந்தது. கனத்த இருளழுத்த நசுங்கிய மிக மெல்லிய ஒளிதான் வீட்டில் படர்ந்திருந்தது. அவள் வீடு விட்டகன்றபின், வீடு கனத்த இருளில் அழுதது. வீட்டிலும்... முற்றத்திலும்... நினைவுகளிலும் அவள் விட்டுச் சென்ற தடங்களிருந்தன. அழுத்தமாகப் பதிந்த அத் தடங்களையே வெறித்தபடி அம்மாள் இருக்கலானாள். ஒரு

↪

குற்ற ஒப்புதல் செய்தவன், பாவமன்னிப்பை பாதி பெற்றவனாவான். – மேத்யூப்ரையர்

பொழுதில் அழுதாள்; மறு பொழுதில் எதையோ எண்ணி முணுமுணுக்கலானாள். அம்மாள் அழத் தொடங்கியதும்... வீட்டில் இருள் நிறைந்ததுமான நாட்கள் ஆரம்பமாயின.

பின் கொடியில் அவளது சிவப்புப் பாவாடையும்... வெள்ளைச் சட்டையும் தீண்டு வாரற்றுப் போய் காற்றில் அலைந்தபடி யிருந்தது. காணும் பொழுதெல்லாம் நினைவுகளைக் கிளறுவதாகக் கூறி, பையொன்றினுள் அவற்றை அடைத்து, களஞ்சிய அறைக்குள்ப் போட்டாள். தன் முதல்ப் பிரசவம் செய்த எலியொன்று, அவற்றை அரித்து அதனுள்ப் பிரசவித்தது.

அன்று வீட்டில மத்தியில் அசிங்கம் செய்தாகக் கூறி, பூனையை வீட்டிலிருந்தும், நினைவுகளிலிருந்தும் விரட்டி விட்டதாக அப்பா சொன்னார். அம்மாள் இரகசியமாக அழுதாள். பூனையை அப்பா விரட்டியதாகக் கூறினாரே தவிர, அவரால் அப்படிச் செய்ய முடியவில்லை. தனிமையில் அவரடைந்த துயர் அதற்குச் சாட்சியாயிருந்தது.

இவை நடந்தபின் வீடு பற்றிச் சொல்லிக்கொள்ள ஏதுமிருக்கவில்லை. பரம்பரை பரம்பரையாக பிறர் தர வாங்கிச் சேமித்த மரியாதையை இளையவள் எரித்து விட்டதாகவும் அப்பா முணுமுணுத்தார்.

முன் ஹோலிலிருந்த சாய்மனைக் கதிரையிலிருந்த படி, முகட்டையே முகாந்தரமின்றி வெறித்தபடியிருக்கலானார் அப்பா. கதவினருகே ஒருக்களித்த நிலையில் படுத்திருந்து தெருவையே வெறித்திருந்தாள் அம்மாள்.

வீட்டின் செல்வமென அவர்கள் கருதியது வீடு விட்ட கன்றபின், வீடு செத்ததாகியது. இராட்சத அரக்கன் போல, நடு வீட்டுக்குள் மௌனம் குந்தியிருந்தது.

மதியப் பொழுதுகளில் வீச்சுக் கொண்ட காற்று, ஆவேசமாக உள் நுழைந்து, ஊளையிட்டலைந்து வெளியேறியது.

சின்னவன் தான் தனித்துப் போனான்.

சின்னக்காவின் பிரிவு அவனை வெகுவாகப் பாதித்தது. ஒரு நாள் யாரும் அறியாமல் தன்னுள் தேங்கியிருந்த சோகங்களைக் கண்ணீராக்கி தலையனைக்குக் கொடுத்தான். தலையணை அவற்றை வாங்கிப் பத்திரப்படுத்திக் கொண்டது.

அவன் தனித்திருந்து வீட்டில் ஒளியேற்ற முடியவில்லை. எப்பொழுதாவது நண்பர்களுடன் வீட்டின் பின் புறத்தே கிரிக்கெட் விளையாடினான். அப்போது மட்டும் வீட்டிலிருந்து கூச்ச லெழுந்தது.

பெற்றவர்கள் மௌனமாகவே இருந்தனர்.

ஒரு நாள், பின் பக்க ஜன்னல்க் கண்ணாடியை பந்து உடைத்துவிட்டது. அம்மாள் எதுவும் சொல்லாமல் பந்தை எடுத்துக் கொடுத்தாள். பின், கண்ணாடித் துண்டுகளை எடுத்து வெளியே எறிந்தாள்.

இரவுகள் நீளமாக இழுபட்டன. அவை சகிக்க முடியாதவையாயிருந்தன.

சின்னவன் மேசை விளக்கை அளவாக விட்டு படித்துக் கொண்டிருப்பான். அகாலக் பொழுதுகளில் அப்பா வீடு மீள்வார். அம்மாள் காற்றின் நெடியில் முகம் சுளிப்பாள். அதிக வெறியான ஒரு நாளில், தான் அறுபது வருடங்கள் வாழ்ந்தும் பயனில்லையெனவும், மகள்கள் அருகிலில்லையெனவும், வாழ்க்கை வெறுத்துப் போனதாகவும், மகன் தான் சிறு நம்பிக்கையளிப்பதாகவும் சொன்னார்.

சின்னவன் அதைக் கேட்கவில்லை.

கேட்டிருந்தால் என்ன செய்திருப்பானோ?

அப்பா சொல்லி சரியாக ஆறாம் நாள், தன்னுடன் படிக்கும் கோணேஸ், தாசன், லோகராஜ் ஆகியோருடன் தன் வீடு மீளாமல்ப் போனான். ஊரின் ஒப்பாரியைக் காற்றுச் சுமந்தது.

வீட்டில் அப்பாவிற்கு அதிகமாக நெஞ்சுக்குள் வலித்தது. எதுவும் செய்யமுடியாமல்ப் படுத்து விட்டார். சுவாமிகளின் முன்னால்க் கிடந்து, தரையில் பலமாக தலையை மோதி அம்மாள் அழுதாள். பக்கத்து வீட்டுத் தேவிதான் அம்மாளைப் பிடித்தாள்.

இதன் பின் பதினொரு நாட்களாக வீடு பூட்டியிருந்தது. அம்மாளை ஏற்றியபடி சைக்கிளில் அப்பா பல இடங்கள் அலைந்தார். ஏற்கனவே வாடியிருந்தவர், உடைந்தேபோனார். கன்ன எலும்புகளிரண்டும் துருத்திக் கொண்டு தெரிந்தன. கண்கள் ஆழத்தில்ப் புதைந்தன.

பகலில் அலைந்து களைத்து இரவில் வீடு மீள்வர். கதவு அகலத் திறக்கப்படுவதில்லை. ஒற்றைக்கதவே திறக்கப்பட்டது. வீட்டில் இருள்தானிருந்தது. ஒருநாள் தேவியின் மகள் சுபா தான் விளக்கேற்றி வைத்தாள். அதிகம் தூண்டப்பட்டு எரிந்த அவ்விளக்கின் சுடரிலேயே இருளிருந்தது.

பின்னாளில் ஒரு தபால் வந்தது. உடைத்த அம்மாளின் முகம் நொடியில் பிரகாசித்தணைந்தது. கடிதத்தையும் புகைப்படத்தையும் தலையணைக்கடியில் வைத்தாள்.

அப்பா வீடுவந்து ஆறுதலாகப் படுத்திருக்க, "இஞ்ச...பெடியன் பிறந்திருக்குது. உங்கள மாதிரித்தான் பிள்ளையும்..."

"நிப்பாட்டு... அவளின்ர கதை கதையாதை. எனக்கு வார கோபத்தில.."

அப்பா முடிவாய்ச் சொன்னார். பின் -

"வீட்டை விப்பம்..." என ஒற்றைச் சொல் சொன்னார்.

"ஏன் உங்களுக்கு என்ன விசரே.....!

"பின்ன என்ன... பலியெடுக்கிற வீடு... இது வீடில்லை பலி பீடம். ஒரு கொட்டில் போட்டென்டாலும் நிம்மதியாயிருக்கலாம்..."

"....."

நீண்ட மௌனம், வைகாசிக்காற்று வெம்மை சுமந்தலைந்தது.

வீடு விற்பதென முடிவெடுத்துக் காரியமாற்றினார். நெல்லியடியிலிருந்து பருத்த மனிதரொருவர் வந்து வீடு பார்த்தார். அப்பாவின் காதோடு ஏதோ பேசினார்.

அம்மாள் அன்று சமைக்கவில்லை. அப்பாவும் சாய்மனைக்கதிரையில் படுத்தார். யாரும் அசையவில்லை. காலம் கரைந்தோடி இருள் கவிந்தது.

"அம்மா... அம்மா... அம்மா..." வெளியே சீரான இடைவெளியில் யாரோ கூப்பிடுவது கேட்டது. அப்பா காதைத் தீட்டிக் கொண்டார். பின் எழுந்து வெளியே வந்தார்.

'கேற்'றின் மேலால் இரண்டு தலைகள் தெரிந்தன.

"ஆர் தம்பி அது..." சற்று உரக்கவே கேட்டார்.

அது நாங்கள் ஐயா... கேற்றைத் திறவுங்கோ...'

அப்பா போய்க் கதவைத் திறந்தார். இரண்டு இளைஞர்கள் நின்றனர். ஒருவன் கறுப்பாக உயரமாக சில நாள்த் தாடியுடன் நின்றான். மற்றையவனும் கறுப்புத்தான். அளவான உயரம். சாரத்தை மடித்துக் கட்டியிருந்தான்.

அப்பாவுக்கு எல்லாம் புரிந்தது.

"உள்ள வாங்கோ தம்பிமார்..."

அவர்கள் 'போட்டிக்கோ' விலேயே உட்காரப் பார்த்தனர்.

"நாங்கள் இதிலயே இருக்கிறம்"

இல்லத் தம்பிமார்... உள்ள வாங்கோ... அம்மாள் படியிறங்கி அழைத்தாள். அவர்கள் தயங்கி உள்நுழைந்தனர்.

அம்மாள் லாந்தரைக் கொளுத்தி வெளியே வைத்தாள்.

"இருங்கோ தம்பிமார்.... புட்டவிக்கிறன்... சாப்பிட்டிட்டுப் போங்கோ" என்றபடி சமைய லறைக்குள் ஓடினாள். நீண்ட இடைவெளியின் பின் அடுப்பெரிந்தது.

தேவி விடுப்புப் பார்க்க வந்து போனாள்.

நீண்ட நாட்களின் பின் வீட்டில் இயல்பான பேச்சொலி கேட்டது.

பேச்சின் இடையே அப்பா சொன்னார்.

"என்ர மகனும் உங்களோடதான்..."

ஒருவன் அப்பாவை ஆழமாக உற்றுப் பார்த்தான். பின் வேறெங்கோ பார்த்தான். மௌனக் குழந்தை ஒன்று வந்து குந்தியது.

"தம்பியவை... வாங்கோ சாப்பிடுவம்" அம்மாள் வந்து அழைத்தாள். குசினிப் பலகையில் இருவரும் குந்தினர்.

அம்மாள் சாப்பாடு பரிமாறினாள். நீண்ட பசியினால் வாடிய இருவரும், ஆவலாகச் சாப்பிடலாயினர். சில கவளங்கள் விழுங்கிய பின்னரே நிமிர்ந்து பார்த்தனர். இருவரது விழிகளிலும் ஏங்கிய நீண்ட பாசம் ஜொலித்தது.

அம்மாளுக்கு ஏதோ மாதிரியிருந்தது. எதிரேயிருந்து சாப்பிடுவது இளையவளும் உதயனும் மாதிரிப்பட்டது அவளுக்கு.

"வடிவாச் சாப்பிடுங்கோ ராசாக்கள்... எப்பவும் நீங்கள் இஞ்சவரலாம்" சொல்லியபடி அப்பாவைப் பார்த்தாள். அப்பாவின் முகத்தில் நிறைவு படர்ந்திருந்தது. அம்மாளைக் கண்டு அவரும் ஆச்சரியப்பட்டுப் போனார்.

அம்மாளின் கண்கள் ஒளி உமிழ்ந்தன. கண்களினோரம் உட்கார்ந்திருந்த வெறுமை, காய்ந்து இற்றுப் போய் உதிர்ந்துவிழுந்தது.

இத்தனை நாள் இல்லாத ஆறுதலுடன் இருவரும் நீளமான பெருமூச்செறிந்தனர். ஏதோ நினைத்தவளாக அம்மாள் லாந்தரைச் சற்றித் தூண்டி விட்டுக் கொண்டாள். அம்மாளினதும் அப்பாவினதும் ஆறுதல் பெருமூச்சிலேறிய ஒளிக்கதிர்கள், வீட்டின் சகல மூலைகளையும் ஆக்கிரமித்துக் கொண்டன.

வீடெங்கும் ஒளி இறைந்து கிடந்தது ●

அது விடியும்...!

கு.ஆனந்தன்

எங்குமே இருள்.....
குப்பி விளக்குக்கு கூட
அனுமதி இல்லாத காலம்.....
வீதிகளின் மண்
இயமனின் இரும்புக்காலடிக்குள்....
மூச்சுக்குள் மட்டும்
முனு முணுக்கும்
எம்மவரின் ஏக்கக் குரல்கள்
காற்றோடு எப்படி
சேரும்?

கண் அசையும், கை அசையும்
இருந்தும்
அந்த கார் இருளுக்குள்
எப்படி சைகை
தெரியும்?
அந்த நடுராத்திரியில்
ஊரெல்லாம் இருள்
ஊழையிடும் பேய்களின்
இரைச்சல் மட்டுமே.

எங்கேயும்
எவரினதும் வேறு குரல்கள்
காற்றோடு
சேரவில்லை.....

இப்பொழுது
செவியை உறுத்துகிறது
கம்மிய தினறும் குரல்கள்

யாரோ.....
குரல் வளை
நசிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்....
மரண ஒலி.....
வேதனையின் விழிம்பில்
சிலருடைய அழுகை....
யாரோ இறந்துகொண்டிருக்கிறார்கள்.....
மரணம்.....
அவர்களின்
குரல்
மெல்ல மெல்ல
குறைகிறது.....
மூச்சு தினறுகிறது.....

குரல்வளைநசிக்கப்படுபவர்கள்மட்டும்
இறந்துகொண்டிருக்கவில்லை
அவலக்குரல் விழும்
செவிப்பறைகளின்
சொந்தக்காரர்களும் கூட்த்தான்

இனி விடிந்தாலே
விடை தெரியும்
சிலவேளை
விடியாமலும் விடுமோ.....?

இருந்தும்,
பொழுது தானே
அது விடியும்.....!

சீர்குலைக்கப்பட்ட வகைச்சாலைகள்

என் தேச மனிதர்களின்
தோள்களில் இன்னும்
பாவச்சிலுவைகள்
சாத்தான்களின்சாம்ராஜ்சியத்தில்
மனிதர்கள் வற்றிப் போன
பாலை வனத்தின் – இந்த
பாவிகளின் ஜீவ ஓட்டம்
மௌனரியின் முன்னுரையுடன்
ஈனப்பாடுகளின்ஸ்வரங்களுடன்
காவிதரிக்கப்பட்டவர்களினால்
ஆசீர்வதிக்கப்பட்டவர்களால்
சித்தாத்தனின் சீரிய
தத்துவங்கள்சீரழிக்கப்படுகின்றன
பண் சாலைகள்.



☞ உன்மேல் கூறப்படும் குறையில் உறுத்துவது, அதில் அடங்கியுள்ள உண்மை. – பெஞ்சமின் பிராங்க்ளின்

குழந்தைநாதம்

சிறுவர் கதை

புத்தியுள்ள சிறுவன்

இராமு ஏழை விவசாயியான கந்தனின் மகன். அவன் மிகவும் சுறுசுறுப்பானவன் படிப்பிலும் விளையாட்டிலும் மிகவும் கெட்டிக்காரனாக இருந்தான்.

அவன் அன்று பாடசாலை விடுமுறை நாளாக இருந்ததினால் வயலில் வேலை செய்யும் தன் தந்தைக்கு உணவினை எடுத்துச் சென்றான். சிறு பிள்ளையான அவனை வழியனுப்பிவைத்த அவன் தாய். "இராமு காட்டு வழியே போறது கவனம், பாதையை மாறுப்பட விட்டுவிடாதே" என எச்சரித்து வழியனுப்பி வைத்தாள்.

நீண்டதூரம் நடந்த ராமுவுக்கு இன்னமும் தந்தை வேலைசெய்யும் வயல் வராமையை நினைத்துக் கவலைப்பட்டான் சிறிது ஓய்வெடுக்க விரும்பியவனாக ஒரு மர நிழலின் கீழ் அமர்ந்தவன் அப்படியே நித்திரையாகிப் போனான். அவன் கண் விழித்துப் பார்த்தபோது தான் நடுக்காட்டில் இருப்ப தனையும் தன் முன் கொடிய அரக்கன் ஒருவன் நிற்பதனையும் கண்டான்.

அரக்கனோ அவனுக்கு மிக அருகே வந்து "சிறுவனே மரத்தடியில் நித்திரையாகி இருந்தபோது, அவ்வழியே உணவுக்காக வந்த நான் உன்னை இங்கு தூக்கிக் கொண்டு வந்தேன். உன்னை நான் விழுங்கப் போகிறேன்." என சொல்லிய வண்ணம் இராமுவுக்கு கிட்ட நெருங்கினான். இராமு நடுங்கினான். பயத்தால் என்ன செய்வது என சிந்தித்தான்.

திடீரென துணிவு வந்தவனாக.

"ஐயா....உங்களை பார்த்தால் மிகவும் கருணை உள்ளவர்போல் தெரிகின்றது. நான் இறப் பதற்கு முன்பு எனது ஆசை ஒன்றுள்ளது அதனை நிறைவேற்றினால் நான் சந்தோசமாக உங்களுக்கு உணவாவேன" என சொன்னான். அவனது சாதுரிய மான பேச்சில் மயங்கிய அரக்கன் ம்.. சீக்கிரம் சொல் பெடிப்பயலே எனக்கு மிகவும் பசிக்கிறது என்றான்.

இராமு உடனே தான் அணிந்திருந்த வெள்ளை நிற சட்டையைக் கழற்றி ஐயா இதனை ஓர் உயர்ந்த தடியின் உச்சியில் கட்டி அப்படியும் இப்படியுமாக அசைப்பதற்கு ஆசை, சிறுவனான என் னால் முடியவில்லை பலசா லியான உங்களால் தான் முடியும் என்றான். அரக்க னும் அவன் புகழ்ச்சியில் மயங்கி அவ்வாறே செய்தான்.

ஆஹா...என்ன பலம் அப்படித்தான் அசையுங்கள் என அரக்கனை மேலும் உசார்ப்படுத்தினான்.

தூரத்து வயல்களில் வேலை செய்த விவசாயிகள். நடுக்காட்டில் கொடி அசைவதனைக்கண்டு யாருக்கோ ஆபத்து என்பதை உணர்ந்து அனைவரும் ஒன்றாகச் சென்றார்கள். அங்கு சிறுவன் இராமுவையும் அரக்கனையும் கண்டார்கள், உடனே அரக்கனை அனைவரும் சேர்ந்து தாக்கினார்கள். சிறுவன் இராமுவையும் அவன் புத்திசாதுரியத்தையும் பாராட்டியபடி அழைத்துச் சென்றார்கள்.

T.நமேஸ்



வாரம் ஒரு குறள்

எல்லாவகை சங்தோஷங்களிலும் மிகப்பெரிய சந்தோஷம் பொருளுதவி அற்றவர்களுக்கு அதனை கொடுப்பதன் மூலம் அவர்கள் அடையும் சந் தோஷத்தை காண்பதுதான். செல்வச் செழிப்புடன் வாழ்ந்தால் மட்டுமே தான் இல்லாதவர்களுக்கு உதவிகள் செய்யமுடியும் என்றும் இல்லாமையில் வாழும் நாமே எப்படி அடுத்தவர்களுக்கு உதவுவது என்றும் நாம் நினைப்பதுண்டு.

உண்மையில் எள் என்றாலும் ஏழாகப் பகிர்ந்து உண் என்று கூறப்படுகிறது. கிடைப்பது அதிகமில்லை என்றாலும் கிடைத்ததில் கொடுத்து உதவுவது ஒருவகை சந்தோஷம் தான்.

நாமோ பொருளை கட்டிப் பாதுகாப்போமே தவிர. அடுத்தவர்க்கு உதவிடநினைப்பதில்லை இதனைத்தான்

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்."

என்று வள்ளுவப்பெருந்தகை அழகாகக் கூறியுள்ளார்.

சொற்சிலம்பம் - 11

செ	கெ	உ	வா	ல	ங	ல்
ன	கி	இ	பா	ய்	ந்	ர்
தி	ள	ய	த்	து	ப	ரை
நா	ரா	பூ	ம	ங்	ஞ	க
பீ	ளீ	ந	வி	னை	தே	லி
மா	ம்	மை	வே	டு	ப	னா
க	அ	வி	பா	ர	வி	கு

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

சொற்சிலம்பம் - 09 இன் விடைகள்

01. மெய்.
02. மூக்கு.
03. செவி.

01. வெள்ளை.
02. மஞ்சள்.

சொற்சிலம்பம் - 09 இன் பரிசுக்குரியவர்

பூ.சர்மிலன், தரம் - 06, விபுலானந்த கல்லூரி, வவுனியா.

சொற்சிலம்பம் - 09 இன் பாராட்டுக்குரியவர்கள்

01.பா.பாலகாசன், தரம்-05, மு/கலைமகள் வித்தியாலயம், முள்ளியவளை.

02.ச.கேமலோயினி, வாடியடி, பூநகரி.

03. ம.கிருத்திகா, கோணாவில், கிளிநொச்சி.

04. ப.வைஷ்ணவன், தரம் - 03, வவுனியா.

1.பேசும் பறவைகள் இரண்டு?

01) .....

02) .....

2.வீட்டு மிருகங்களில் மூன்று?

01) .....

02) .....

03) .....

சொற்சிலம்பம் -11
சுழநாதம்.
யாழ் சாலை,
கிளிநொச்சி.

பெயர் :- .....

முகவரி :- .....

.....

சொற்சிலம்பம் 09 இல் "ஐம்பொறிகள் மூன்று?" என்ற கேள்விக்குப்பதிலாக "ஐம்புலன்கள் மூன்று?" என்று தவறுதலாக வெளியாகியுள்ளது.தவறுக்கு வருந்துகின்றோம்.

பயணம் செய்வோம்

சக்குப் பக்கு புகைவண்டி
செல்ல நல்ல புகைவண்டி
தண்ட வாளந் தன்னிலே
தானே ஓடும் புகைவண்டி

பூ ம் என்று போகுது பார்
புதிய மோட்டார் வண்டியது
இருவர் பயணம் செய்திடலாம்
இந்த மோட்டார் வண்டியிலே.

டிங் டிங் வண்டி சைக்கிள் பார்
ஏழைகட்கும் உதவும் பார்
சின்ன விலையில் வாங்கிடலாம்
சிறுவர் கூட ஓட்டிடலாம்.

ம.மிருனிஷா, தரம் -01,
கிளி/புனித திரேசா
பெண்கள் கல்லூரி.

கல்வி

சின்னத்தம்பி நீ இங்கு
என்ன செய்யப் போகின்றாய்
சீக்கிரமாய் உடையணிந்து
வாடா செல்வோம் பள்ளிக்கு.

பெரியார் போற்றும் கல்வியை
பெரிதாய் கற்க நாம் செல்வோம்
தமிழோடு விஞ்ஞானம் சேர்ந்து படிப்போம்
சமூக வியல் கணித மேதையாவோம் நாம்.

தாய் பெற்ற தமிழ் நாட்டுக்கு
பெருமை தேட வேண்டுமெனில்
கல்வி வேண்டும் நிச்சயமே
புரிந்து கொள் தம்பி நீயும்

ஸ்.அலெக்ஸ்சாண்டர்
C.C.T.M.S.வவுனியா

நகைச்சுவை



அலுவலர்:- என்னங்க இதில ஊர் பெயர் எழுதவேண்டிய இடத்தில 666 என்று எழுதி இருக்கிறீங்க?

வேலன்:- ஊர் பெயர் மூணுஆறுங்க.

பூ.நிரஞ்சன்

பொன் மொழிகள்

கோபத்திலும் பொறுமை வேண்டும்.
செல்வத்திலும் நேர்மை வேண்டும்.
தோல்வியிலும் விடா முயற்சிவேண்டும்.
சரித்திரத்திலும் பரிகாரம் வேண்டும்.
இளமையிலும் அடக்கம் வேண்டும்.
பதவியிலும் பணிவு வேண்டும்.

கு.ரஜனிகாந்
கறுக்காய்த்தீவு அ.த.க
பாடசாலை.

விடுகதைகளும் விடைகளும்

01.வரும் போது வெண்சிரிப்பு வளரவளரத்தகதகப்பு, போகும் போதும் சிரிப்பு அது என்ன?
02. கல்வீட்டுத் தாத்தா மெதுவாக நடப்பார் அது என்ன?
03.வெயிலில் மலரும், காற்றில் உலரும் அது என்ன?
04.புத்தாண்டில் புகுந்த விருந்தாளி தங்குவதோ ஓராண்டு அவர் யார்?
05. தீக்குளித்தாலும் திடமாக இருப்பான் அவன் யார்?

விடைகள்

01. ஞ ா ய ி ற ு
02. ம ெ ள ் ள
03. ப ட ம ்
04. ப ு த ் த ா ண ்
05. ச ெ ங ் க ல ்

இ.கவாஸ்கர்
புலுமச்சிநாதகுளம், மாங்குளம்.

பண்டாரவன்னியன்

சிறுவர்களுக்கான சித்திரக்கதை :-09



ஆக்கம்,
ஓவியம்
எஸ்.கௌரிஹன்



உடல் நலமும், உற்சாகமும் ஒன்றையொன்று ஈன்றெடுக்கின்றன. – ஜோஸஃப் அடிஸன்



பாடசாலை

-ஆங்கிலத்தில் குவான்ஹூவா-



சாக்கில் எஞ்சியிருந்த பொத்தகங்களின் எடையைச் சமநிலைப்படுத்தி தனது தோளின் மீது போட்டுக் கொண்ட ஆசிரியர் சாய், அங்கிருந்து செல்லத் தொடங்கினார். தனது கூடையை முதுகின் மீது வைக்குக் கொண்டு தோளில் காவிச் செல்ல நேராமல் இருக்க வேண்டும் '' என்று அவனைக் கேலி செய்தார்.

காப்பரணுக்குச் செல்லும் அகழியை நோக்கிச் செல்ல முன்பதாக மலைப் பாதையின் நடுவில் சிறிது நேரம் ஓய்வெடுத்தனர். காப்பரண்மீது தன் பார்வையைச் செலுத்தியபடி நகர்ந்த இரும்பனின்

கால் சறுக்கி விட, வழுக்கி, உருண்டு கொண்டு போய் ஒரு பள்ளத்தில் விழுந்து, அதனடியில் குந்தியிருந்தபடி சிரிக்க ஆரம்பித் தான்.

இரும்பனை காப்பாற்ற விரைந்த ஆசிரியர் அவனுக்கு தீங்கு எதுவும் விளையவில்லை என்பதைக் கண்டு ஆறுதலடைந்தார். பொத்தகங்களையும் வைக்கோலையும் இரும்பன், அவரை நெருக்கமாகப் பின் தொடர்ந்து சென்றான்.

இடைக்கிடை தனது சேட்டுக்குள் கையை விட்டு, தனது பொத்தகம் அங்கே இருக்கிறது என்பதை இரும்பன் உறுதி செய்து கொண்டான். " இந்தப் பொத்தகத் தில் என்ன இருக்கிறது ஆசிரி யரே?" என்றோ அல்லது " இந்தச் சாக்கை சிறிது நேரம் நான் சுமந்து செல்ல விடமாட்டீர்களா? '' என்றோ கேட்டுக் கொண்டிருந்தான்.

இரும்பனின் தோளில் தட்டிக் கொடுத்த ஆசிரியர் சாய், " இப்படியே வா என் குட்டிப் பையா! கடைசியிலே, உன்னை என் மீளவும் கூடைக்குள் வைத்து விட்ட அவர் கண்டிப்பான முறையிலே, "நாங்கள் இங்கே உல்லாசப் பயணம் வர வில்லை. எதிரியிடம் மாட்டிக் கொண்டால் அவ் வளவு தான். நாங்கள் விரைவாக இங்கிருந்து சென்று விட வேண்டும்." என்று கூறினார்.

திடீரென கிரவல் பாதையில் காலடி ஓசைகள் எழத்தொடங்கின. " கெதியாய் வா " என்று விரைந்து கூறிய ஆசிரியர்,பள்ளத்திலிருந்து இரும்பனை இழுத்துக் கொண்டு மேலே ஏறினார்.

" வாருங்கள் இந்த இடத்தை விட்டு விரைவாகப் போவோம் " என்று இரும்பன் சொன்னான்.

அகழியிலிருந்து, கைக்கூலிப்படையினர் தங்களை நோக்கி வருவதை, அவர்களது தொப்பிகளின் தட்டையான மேற் பகுதி களையும், றைபிள்களின் நுனிகளையும் வைத்து ஆசிரி யர் சாய் கண்டு கொண்டார். "பொறு!" என்று சொன்ன அவர் "நாம் இப்போது ஓடினால் அது எங்களைக் காட்டிக் கொடுத்துவிடும். பதட்டப்படாதே. வழமை போல நடந்து கொண்டிரு.'' என்று கூறினார்.

இரும்பனை நோக்கி ஒரு முறை கண்களைச் சிமிட்டிய ஆசிரியர் சாய், அவன் கையைப் பிடித்து அவனை ஒரு பக்கவாட்டு மலை முகட்டின் பின்னால் அழைத்துச் சென்றார். அவர்கள் நல்ல தாழ்வாக குந்தியிருந்து கொண்டு பற்றைகளின் இடைவெளிகள் ஊடாக பார்க்கும் விதத்தில் தலையை அவதானமாக உயர்த்தினார்கள். ஏழு அல்லது எட்டு கைக்கூலிப் படையினர் இரும்பன் விழுந்த பள்ளத்தின் சரிவில் நின்றபடி சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தனர். ''நல்ல பகிடிதான். ஒரு மனிதனும் ஒரு பையனும் இதனுள் விழு வதைக் கண்டேன். ஆனால் இப்போது எவரையும் இங்கே காணவில்லை" என்று அவர் களில் ஒருவன் சொல்லிக் கொண்டிருந்தான்.

"விறகு வெட்ட வந்த விவசாயிகளாக இருக்கும்." என்று விளக்கம் சொன்ன இன்னொருவன்,, "நாங்கள் போவோம். காவல் பணியிலிருப்பவர்களை மாற்றி விட நேரமாகி விட்டது." என்றான்.

'' இல்லை'' என்ற முதல் வீரன்,'' நாங்கள் எல்லோரையும் சோதனை செய்ய வேண்டும் என்று கப்டன் சொன்னார். சாதாரண விவசாயிகளையும் சோதனை செய்ய வேண்டும் என அவர் கூறினார். அந்தப் பையன் எட்டாவது வழி இராணுவத்தின் வழி காட்டியாகவும் அந்த மனிதன் தொடர்பு படுத்தும் அதிகாரியாகவும் இருக்கலாம்" என்றான்.

''அவர்கள் அதிக தூரம் போயிருக்க முடியாது. வாருங்கள் அவர்களைத் தேடுவோம்" என்று சொன்ன மூன்றாவது வீரன், அங்குமிங்குமாகப் பார்க்கத் தொடங்கினான்.

ஆசிரியர் சாய்க்கும் இரும்பனுக்கும் இவை எல்லாம் நன்கு கேட்டன.ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்ட அவர்கள், மலைமுகட்டின் மறைப்பில் விரைவாக நகர்ந்து அங்கிருந்து அகன்று, கடகடவென இரண்டு குன்றுகளைக் கடந்து சென்று விட்டார்கள். களைத்துப்போய் மூச்சிறைத்துக் கொண்டிருந்த இரும்பன், புற்கள் அடர்ந்திருந்த இடத்தின் மீது விழுந்து படுத்துக் கொண்டு, ''இங்கே சிறிது நேரம் ஓய்வெடுப்போம். எதிரி எங்களை இங்கே கண்டு கொள்ள முடியாது'' என்று கெஞ்சினான்.

(தொடரும்...)

தமிழில்
வி.பி.யோசப்

(07பக்கத் தொடர்ச்சி)

எந்த நேரத்திலும் உயிர் ஆபத்துக்களை எதிர்கொள்ளவேண்டிய சந்தர்ப்பம் இருப்பதனை உணர்ந்த நிலையிலும் வாறது வரட்டும் என நெஞ்சை நிமிர்த்தி யோகண்ணன் ஒய்வின்றி உழைத்தார். வேட்டை அனுபவம் உள்ளவர் என்பதாலும், தனியாகக் காடுகளில் நடமாடி இயக்கப்பணிகளைச் செய்வதாலும் முன்னணிப் போராளியான குலத்தினால் சொட்கண் ஒன்றும், பத்துத் தோட்டாக்களும் யோகண்ணருக்கு வழங்கப்பட்டது.

யோகண்ணரின் பாதங்கள் ஊரில் உள் ஒழுங்கைகள், காட்டுக்குறுக்கு வழிப்பாதைகள், வண்டில் பாதைகள் எங்கும் பதிந்தே இருந்தன. அவரின் தோள்கள் சமைத்த உணவுப் பொதிகளையும், சமையலுக்குத் தேவையான உணவுப் பொருட்களையும், கைகள் தேனீர்ப் பானையையும் சுமந்த நாட்களே அதிகம், அதிகம்.

காலவோட்டத்தில் இந்தியப்படையினரின் வாயுச்சரிப்பில் யோகண்ணன் பெயர் ஒலிக்கத் தொடங்கியது.

மறுபுறம் போராளிகளின் வாயும் யோகண்ணன் பெயரையுச்சரித்தன. யோகண்ணன் அன்றாட வாழ்வுப் போராளிகளின் அனைத்துப் பணிகளிலும் கலந்தேயிருந்தன.

குடும்பத்தை விட்டு ஒரு சில நாட்கள் பிரிந்திருக்கும் சந்தர்ப்பங்களில் பற்றும் பாசமும் தான் பெரும் பாரமாய் இருப்பதை யோகண்ணன் உணர்ந்திருந்தார். இவ்வுணர்வுகள் சிறிது சிறிதாகக் கனதி கொள்ளத்தொடங்கும்.பிரிவின் இடைவெளி எதிர்பார்ப்பதை விட அதிகரிக்கத் தொடங்கிவிட்டால் இனந்தெரியாத கவலையில் மனம் ஆழ்ந்துவிடும்.

ஒருநாள் சோலைக்காட்டு முகாமை நோக்கி இந்தியப்படை வருவதைக்கண்ட யோகண்ணன் முகாமில் நின்ற ஒருசில போராளிகளைப் பாதுகாப்பாக அனுப்பிவிட்டு முகாம் நிலைமையை அடர்ந்த பெரிய நாவல் மரத்தின் மீது இருந்து அவதானித்தார். நேரம் செல்லச்செல்ல கைகள் வலித்து மரக்கொட்டு ஒன்றினுள் கால் குத்த விழுந்து விட்டார். ஐந்து மணித்தியாலங்களாக் கடுமையாகப் போராடி தன் கைக்கோடாரி உதவியுடன் வெளியேறி மறுவாழ்வு பெற்றார். இன்னொரு சந்தர்ப்பத்தில் இந்தியப்படையுடனான தாக்குதலில் B.B.C. வாசு வீரச்சாவு அடைந்செய்தி யோகண்ணனை துக்கத்தில் ஆழ்த்தியது.

இச்சம்பவத்தின் பின்னர் தளபதி சுரேந்திரனால் கொடுத்து அனுப்பப்பட்ட SLR ஆயுதத்தை குலம் யோகண்ணஹிடம் ஒப்படைத்தார். யோகண்ணன் புதுத் தென்புடன் மகிழ்ச்சியடைந்தார்.

காலவோட்டத்தில் புடைவைக்கட்டு வீதியில் உலாவரும் இந்தியப் படையினர் மீது கிளைமோர் தாக்குதல் வெற்றிகரமாக மதியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. ஐந்திற்கும் குறையாத படையினர் மாண்டு போயினர். இத் தாக்குதல் அணிப் போராளிகளான குலம், மாதவன், ரஞ்சன், தவநாதன் ஆகியோர் யோகண்ணன் வீட்டில் தம் பசியைத் தீர்த்தும், பிறதேவைகளைப்பூர்த்தி செய்த பின்பே தாக்குதலுக்கு நகர்ந்தார்கள். சில வாரங்களில் தளபதி சுரேந்திரன் வீரச்சாவு அடைந்த செய்தி அனைத்துப் போராளிகளினதும், யோகண்ணனினதும் மனதைக் கவலை கவ்விக்கொண்டது.

இது நடந்து சில வாரங்களின் பின்பு புல்மோட்டை வீதியில் உலாவரும் இராணுவத்தினரின் வேவுத் தகவல்களுடன் வந்த சுவையிரை - யோகண்ணன் சந்தித்துக் கதைத்த பின்னர் மதியை சுவையிர் சந்திக்க ஏற்பாடு செய்தார்.

மதி தலைமையில் புல்மோட்டை மலைச்சந்தி பிரதான வீதியில் இந்தியப் படை மீது கிளைமோர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு பிறன் LMG ஒன்று, S.L.R ஒன்று, S.M.G ஒன்று ஆகிய மூன்று ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. அக்காலத்தில் இத்தாக்குதல் போராளிகளின் போரிடும் ஆற்றலின் வீச்சை வெளிப்படுத்தியது. மாதவன், ரஞ்சன், குலம், ஜெயம், றோயல், கில்பேட், கண்ணன், சங்கர், நிசாம் ஆகிய போராளிகள் இதில் பங்குபற்றியிருந்தார்கள்.

யோகண்ணனால் இன்னொரு வேவு உறுதி செய்யப்பட்டது. கல்லம்பத்தைச் சந்திக்கு வந்து செல்லும் இந்தியப் படையினர் மீது கமல் தலைமையில் கிளைமோர்த் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டு இரு படையினர் கொல்லப்பட்டார் கள்.

இவ்வாறு யோகண்ணனின் உழைப்பின் விளைவுகள் ஒரு புறமிருக்க அவரின் உச்சாகமான, துணிச்சலான, கடினமான உழைப்பின் விளைவாக நாய்விழுந்த கல்லுமலை முகாமில் வைத்து மாவட்டத் தளபதி பதுமன் யோகண்ணனைச் சந்தித்து ஊக்கப்படுத்தினார். அன்று யோகண்ணன் தன் ஊர்கட்டித் தயிர்ப்பானையுடனேயே முகாமிற்கு வந்தார். முகாமில் உள்ள அனைத்துப் போராளிகளின் வயிறும் குளிர்மை பெற்றன. யோகண்ணை மனமும் குளிர்ந்தது.

இந்தியப்படை வெளியேறிப்போய் ஓய்வு ஏற்பட்டு 1990 நடுப்பகுதியில் மீண்டும் போர் மூண்டது. சண்டைகள் உச்சக்கட்டத்தை அடைந்து திருமலை மக்கள் ஆயிரக்கணக்கில் இடம்பெயர்ந்து திரியாய் வந்து அங்கிருந்து பட்டிக்குடாக் கடலால் படகுகளிலும், தென்னமரவடி நடைபாதையால் மயில்க்குஞ்சு உதவியுடன் நடந்தும் முல்லைத்தீவை நோக்கி நகர்ந்தார்கள்.

நகரும் வரை காத்திருக்கும் ஆயிரக்கணக்கான மக்களையும் வந்துகொண்டிருக்கும் மக்களையும் திரியாய் மக்கள், மண் சுமக்கக்கூடிய விடயமல்ல. ஆனால் தம்மாலான தெம்பை ஊட்டினார்கள். சேமிப்பில் இருந்த உணவுப் பொருட்கள் தீர்ந்தன. நிலத்தின் கீழ் இருந்த கிழங்கு வகைகள் தீர்ந்து போயின. தென்னஞ் சோலைகளிலிருந்த இளநீர், தேங்காய் அனைத்தும் வயிற்றுப்பசிக்கு ஒத்தடம் கொடுத்தன.

வந்த வெள்ளம் நின்ற தண்ணீரையும் இழுத்தடித்து சென்றது போல் ஊர் மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்தார்கள். சூறாவளிக்காற்றில் ஆடி ஓய்ந்து நிற்கும் மரம்போல ஊர் அப்போது இருந்தது. ஊரின் அவலக் கோலத்தைப்பார்த்த யோகண்ணனின் இதயத்தைப் பிழிந்தெடுத்தது. தன் ஊர் மண்ணைவிட்டு வன்னியில் தடுமாறும் தன் குடும்ப உணர்வு நெஞ்சில் அசைந்தாடுவது யோகண்ணன் முகத்தில் தெரியத்தான் செய்தன.

இவ்வரலாற்றுச் சோகமான இடம்பெயர்வின்போது புஸ்பன், செல்லா, மாணிக்கம் ஆகியோர் சிங்களப்படையால் கடலில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இத்துயர மனச்சுமையை தாங்கியபடியே யோகண்ணன் ஊரில் தங்கி, துயரங்களையெல்லாம் தன் நெஞ்சுக்குள்ளேயே மூட்டை கட்டி ஒரு மூலையில் வைத்து விட்டுத் தன் விடுதலைப் போருக்கான பணியைத் தொடர்ந்தார்.

முன்னணிப் போராளி குலத்தின் பணிகளுடன் யோகண்ணன் 90 இறுதிக்காலப் பகுதிவரை இணைந்து செயலாற்றினார். பட்டிக்குடா வரையான பாதை வழிகாட்டியாகவும், பிற உதவிகளையும் செய்து காட்டு வாழ்க்கை வாழ்ந்தார். ஊருக்குள் வந்து செல்லும் போது அந்த இனிய ஊர் வாழ்வு மீண்டும் வராதோ? என்கிற எண்ணம், அதிர்வு யோகண்ணனின் இதயத்துள் எழுந்து மடியும்.

இக் காலப்பகுதியில் சிங்களப்படை முகாமுக்கு மிக அண்மையிலுள்ள காட்டுக்குள் அணைக்கட்டில் வைத்து படையினர் மீது குலம் தலைமையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு ஏழு சிங்களப்படையினர் கொல்லப்பட்டு AKLMG உட்பட ஏழு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. ஜெயம், யூட், திலக் எனச் சில போராளிகள் இத்தாக்குதல் அணியில் இருந்தார்கள்.

அன்புக்கரம் நீட்டி அரவணைக்கும் மகத்தான பண்புகள் கொண்ட வன்னி மண்ணில் புது வாழ்வு வாழும் தன் குடும்பத்துடன் யோகண்ணன் சேர்ந்து கொண்டார். இடப்பெயர்வால் வந்த குடும்ப வலுமையைப் பெரும்பாரமாகக் கருதாத அளவுக்கு தன் இதயத்தினை இரும்பாக்கிக்கொண்டு தன் நாளாந்த உடல் உழைப்பில் ஈடுபட்டு தன் குடும்பத்தை கௌரவமாக வாழ வழி செய்தார். மனைவிக்கு கணவர், பிள்ளைகளுக்கு தந்தை என்ற கடமையுணர்விலிருந்து சிறிதும் வழுவிச் சென்றதில்லை யோகண்ணன்.

பல ஆண்டுகள் கடந்த நிலையில் போரரங்கில் அமைதிச்சூழல் உருவாகியது. நடந்து முடிந்த வரலாற்றுப் பதிவுகள் யோகண்ணன் மனத்திரையில் சில காட்சிகளாக எழுந்தன.

மாவீரன் மதியால் ஒப்படைத்த பணத்தினை யோகண்ணன் நீதனிடம் கன்னியமாக ஒப்படைத்தமை. கமல் தலைமையில் வெற்றிகரமான தாக்குதலை முடித்துக்கொண்டு வரும் சல்லிக் கடல் வழியில் வீரச்சாவு அடைந்த 22 மாவீரர்களில் தன் தம்பி கிருபன் உள்ளடங்கியமை.

தன் ஊர்ப் பாடசாலையில் சிங்களப் படை முகாம் அகற்றிய பின்னர் சில மாதம் போராளிகள் முகாம் அமைத்து தம் இராணுவப் பணிகளைச் செய்த பின் மீளவும் சிங்களப்படை முகாம்களாக மாறியமை.

சார்ஸ் அன்ரனிப் படைப்பிரிவு தன் ஊர்க் காடுகளில் முகாம் அமைத்து சில காலம் செயற்பட்டு சிங்களத்துக்கு தகுந்த பதிலடி கொடுத்தமை.

தன் ஊரின் மையத்தில் தளபதி சொர்ணம் தங்கியிருந்து வழிநடாத்தி குறுகிய காலத்தினுள் சில சிங்களப்படை முகாம்களை தாக்கியழித்து சிங்களப் படையினருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியமை. இதில் குணம், றெஜி, கலிஸ், சுதாகர், திலீப், அன்பு, பிரகாஸ், மனோச் ஆகிய முன்னணித் தளபதிகள் சொர்ணத்துக்கு பக்கபலமாக இருந்தமை.

நளன், கரன் ஆகிய தன் இரு பிள்ளைகளும் திருமலைப் போர்க்களத்தில் வீரச்சாவு எய்தியமை. இச் சந்தர்ப்பங்களில் மனைவி கண்களில் இருந்து நீர்சொரிய ஆரம்பிக்கும் போதெல்லாம் மனைவியைப் பார்த்துக் கலங்காதே, அழாதே என தான் அமைதிப்படுத்தியதும் இச் சமயங்களில் தாயின் வேதனையை விட இந்தத் தந்தையின் வேதனை குறைந்ததல்ல. ஆனால் நமது இனத்தின் வரும்கால நல் வாழ்வுக்காக எம் பிள்ளைகள் தியாகத்தைச் செய்தார்கள் எனக் கூறியமை.

மாண்டு கிடந்த தன் ஊர் மெல்ல மெல்லத்துளிர்விடும் சூழல் உருவாகிவருகின்றமை, பிரிந்திருந்த சொந்தபந்தங்களில் தப்பிப் பிழைத்திருந்தவர்களில் திரும்பியோரைக் கட்டிப் பிடித்து கண்ணீர் சொரியும் தன் ஊர் மக்கள் நிலை., தன் ஊர் மண்ணின் மைந்தன் ஜங்கரன், திருமலை மண்ணின் முதல் மாவீரனைத் தொடர்ந்து பல மாவீரர்களை ஈகம் செய்த தன் வீர மண்ணை எண்ணிப் பெருமிதம் கொண்டமை.

தமிழர் ஒன்றிணைந்து தாம் தமிழ் இனம் என்ற உணர்வுடன் அர்ப்பணித்து உழைக்கும் போது ஓர் உயர்ச்சி தோன்றும்.அது தான் பலமானது. அந்த வகையில் யோகண்ணனின் குடும்பத்தின் விடுதலைப்போருக்கான அர்ப்பணிப்பு காத்திரமானது. அவர்களது வாழ்க்கை ஒரு தியாக வரலாறு. ●

☞ கல்வி பெறும் வரை, மனிதப்பிறவி எதையும் மனிதப்பிறவி என்று கூறுவதில்லை. - ஹோரஸ்மன்

சிறிலங்காவின் சாபக்கேடு:

பண்டாரநாயக்காக்கள்



எந்த நாடுமே சுமக்க வேண் டிய ஒரு சிலுவை இருக்கும். சிறி லங்காவினுடைய சிலுவையாக பண் டாரநாயக்காக்கள் இருக்கிறார் கள். பிரித்தானியரின் கலாச்சார ரீதியான வாரிசுகளான அவர்கள் பிரித்தானி யரிடமிருந்து கற்றுக் கொண்டது போலவே உலகின் வேறெந்த குடும்பத்தையும் விட நெறி கெட்ட அதி காரப்பசி கொண்டவர் களாக இருக்கிறார்கள்.

சிறிலங்காவுக்கு சமஷ்டி அரசியலமைப்பை முதன் முதலில் கோரியது புலிகள் அல்ல. 1920ம் ஆண்டில் அதைச்செய்தவர் வேறு யாருமல்ல S.W.R.D. பண்டாரநாயக் காதான்.

அவரது தந்தையார் சொலமன், பிரித்தானியருக்கு தான் ஆற்றிய சேவைக்காக KCMG பட்டம் கிடைத்ததை கொண்டாட பொது மக்களிடம் நிதி சேகரித்தவர்.

புத்த ஜயந்தி வருடமான 1956 ஆம் ஆண்டில் 'சிங்களம் மட்டும்' கோஷத்தின் கீழ்தெரிவு செய் யப்பட்ட பண்டா தான் கடந்த கால் நூற்றாண்டாக சிறிலங்காவை மூழ் கடித்திருக்கும் துயரத்தின் விதையை விதைத்தவர். சுயாட்சி கோருவதைத விர வேறு தெரிவு களை தமிழ ருக்கு இல்லாமல் செய் தவர் அவர் தான். தமிழருக்கான சமஷ்டி மாநிலம் என்பது பிரபாகரனோ, ரணிலோ பெற்றெடுத்த குழந்தை யல்ல. ஹொர ஹொல்லை சிங்கத்தினுடைய குழந்தைதான்.

தனது மடமைத்தனத்தை உணர்ந்து கொண்ட பண்டா தன் நிலைப்பாட்டிலிருந்து பின் வாங்க முயன்றார். அப்போதுதான் அவரு டைய கட்சியின் தீவிர வலது சாரி களும் செல்வாக்குப்பெற்ற பௌத்த சங்கத்தினரும் அலரிமாளிகை வள வில் சத்தியாக்கிரகம் செய்து நியா யம் நிலைக்க முடியாமல் செய்தனர். நிலவிலிருந்து அரிசி கொண்டு வரு வேன் என்ற தன் மனைவியை ரூ.3.50 க்கு பாண் தருவேன் என்ற தன் மகளையும் போலவே பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு அளித் தார். ஒக்ஸ்போட்டில் பயின்ற பண்டா வுக்கு, இந்நாட்டு சுதேசிகள், தான் எறியும் எதையும் விழுங்கக்கூடிய இழி சனங்களாகத்தான் இருந்தார்கள்.

ஆட்சிக்கு வந்து மூன்று வரு டங்களில், தன் மகளைப் போலவே தவறான பொருண்மிய முகாமைத்து வத்தின் மூலம் சிறிலங்காவின் வெளிநாட்டு செலாவாணி இருப்பை 1.3பில்லியனிலிருந்து 540மில்லியன் களாக தேய்ப்பதில் வெற்றி பெற் றார்.தானொரு பொருண்மிய P.h.D. பட்டதாரி என்று அவர் சொல்லக்கூட இல்லை. 1960 அளவிலே நாடு 'வங்குரோத்து' நிலைக்கு போய் விட்டது. அவரைத் தொடர்ந்து பத விக்கு வந்தவரும் எல்லோராலும் விரைவிலேயே Mrs.B (திருமதி. பி) என அழைக்கப்பட்டவருமானவர் என்ன செய்தார்? கண்ணில் பட்ட எல்லாவற்றையும் தேசி யமயமாக்கினார். பாடசாலை கள், போக்குவரத்துக்கள், நிறுவனங்கள் எதுவும் தப்ப வில்லை. பண்டார நாயக்கா வின் 'சிங்களம் மட்டும்' சட்டம் ஒரு தலைமுறை இளைஞர் களை அன் னியப் படுத் தி விட்டு, சிறப்பான வேலை வாய்ப்புக்களை, ஆங்கிலம் பேசும் நடுத்தர வர்க்கத்தின ருக்கு உரியதாக ஆக்கி விட்டது. 1960 களின் நடுப் பகுதி அளவிலே பண்டார நாயக்காக்கள் தனியாகவும் கூட்டாகவும் சிறிலங் காவை சேற்றுக்குள் அமிழ்த்தி விட்டி ருந்தார்கள்.

சரியெனக்காட்டும் செயற்பாடுகள்.

1970களில் நிலவிய திருமதி.B.யின் ஆட்சியானது, அது மேற்கொண்ட மலினமான 'சரியெனக் காட்டும்' (VINDICTIVE) செயற்பாடுகளால் இன்னமும் பலரின் நினைவுகளில் படிந்திருக் கிறது. (புஹாரி ஹொட்டேல் மற்றும் அரசியல் எதிரிகளின் நிறுவனங்கள் , வீடுகளை தேசியமயமாக்கியதும் இவற்றுள் அடங்குகிறது.)





ஐந்து வருடங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட திருமதி.B, வலிந்து ஏழு வருடங்கள் ஆட்சி செய்தார். வாக்காளர் 'சிவப்பு அட்டை'யை காட்டிய பின்னரும் அசையமாட்டேன் என்று அலரிமாளி கையில் குந்திக் கொண்டிருந்து விட்டு பின்னர் வெளி யேற்றப்பட்டார்.

இப்போது மகளை நாம் சகித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. 9வருடங்களுக்கு முன், அதாவது 1994இல் தெரிவுசெய்யப்பட்ட சந்தி ரிகா குமாரதுங்க இப்போது பொய் பேசுபவர் என்றும், ஏமாற்றுப் பேர்வழி என்றும் எடுத்துக்காட்டப்பட்டிருக் கிறார். அதிருப்தியாளர் குமார் பொன் னம்பலத்தின் கொலை உட்பட பல கொலைகளின் குருதிச்சுவடுகள் அவரது உத்தியோகபூர்வ வாழ்விடம் வரை பதிந்திருக்கின்றன.

1994-2001 வரையான அவ ரது ஆட்சியானது, உலகிலேயே அதிக ஊழல் நிறைந்த அரசு எனப் பேரெடுத்திருக்கிறது. 1994-2001க்கு இடையே டொலருக்கு எதிராக ரூபா யின் பெறுமதி அரைவாசியாக வீழ்ச் சியடைந்திருந்தது. (கடந்த இரண்டு வருடங்களில் வரலாற்றில் முதல் தட வையாக அதன் பெறுமதி அதிகரித் திருக்கிறது.) கேள்விப்பத்திரச் சபைகளை தனது வதிவிடத்துக்கு அழைத்து எப்படி முடிவு செய்ய வேண்டும் என்று கூறுவதன் மூலம் கேள்விப்பத்திரத் தெரிவுகள் மேற் கொள்ளச் செய்யப்பட்டன.

சிறுபிள் ளைத் தனமான அவரது அரசியலமைப்பு சீர்திருத் தங் கள், எவை மாறினாலும் சனாதிபதி என்ற வகையிலே தனது அதிகா ரங்கள் தன் வசம் இருக்கச் செய் வதையே இலக்காகக் கொண்டி ருந்தன.

அடிமைகள் கூட்டம்

பண்டாரநாயக்காக்களைப் பொறுத்தவரை சிறிலங்கா மக்கள் ஒரு அடிமைகள் கூட்டம்தான். பண்ணை வாரிசுகளான அவர்கள் தான் ஆளப்பிறந்தவர்கள்- ஆகக் குறைந்தது அவர்களது திருகுப்பட்ட மனங்களிலே அப்படித்தான் இருந் தார்கள். அதனால் தான் அவர்கள் மக்களை வேலைக்காரர்கள் போல் நடத்தினார்கள். ஒரு பொய்யைத் தொடர்ந்து இன்னொரு பொய்யைக் கக்கும் சந்திரிகா, அதை அறிந்து கொள் ளும் திறன் எவருக்கும் இல்லையென்று நினைத்தார். கடந்த வாரம் அவரது செயற்பாடுகளும் இந்த இயல்புக்கு அமைவானவையாகத் தான் இருந்தன.

அவரது கட்சி 2001டிசம்பர் தேர்தலிலே முழுமையாகத் தோற் கடிக்கப்பட்டது. அவர் இழிவானதாகக் கருதும் அரசியலமைப்பு, 2005 ஆண்டு வரை நிறைவேற்று அதி காரம் கொண்ட சனாதிபதியாக இருக்க அனுமதிக்குமெனினும் அற முறையான அதிகாரம் எதுவும் அவ ருக்கு இல்லை. இந்த நிலையில் வேறு வழியில்லாமல் அதிகாரத்தைக் கைப்பற்ற புரட்சி சதியொன்றை நிகழ்த்தினார்.

சந்திரிகாவின் புரட்சிச் சதி யானது அவரால் மட்டுமே செய்யக் கூடியதான செப்பமற்ற ஒன்றாக இருந்தது. பயனற்ற அவசர காலச் சட்டம் ஒன்றை பிரகடனப்படுத்தி (அவருடைய ஆட்சிக்காலம் முழு வதும் அவசரகால நிலையின் கீழேயே நடந்தது- அவருக்கு வேறு எதுவும் தெரியாது.) முக்கிய அமைச் சுக்களைப் பறித்தெடுத்ததன் மூலம் தன்னைத் தானே முட்டாளாக்கிக் கொண்டார்.

அரச ஊடகங்கள், சரத் அமுனுக மவால் மட்டும் உருவாக்கப் படக் கூடிய "கோயபெல்ஸ் ரக" பிரச் சாரங்களுக்குட்படுத்தப்பட்டன. இர களுடனான எந்த அமைதி ஒப் பந்தத்தையும், நாட்டின் செழு மைக்கான எந்த வாய்ப்புக் களையும் நாசமாக்குவதில் சந்திரிகா உறுதியாக இருக் கிறார் என்பதில் எந்த ஐயமுமில்லை. இதற்கான பழியில் பெரும் பகுதி ரணிலையே சாரும். 1994-2001 வரையான சந்திரிகாவின் ஏழு வருட ஆட்சி, வயம்பா தேர்தல், கணக்கற்ற படைத்துறை நாசங்கள், பொருண்மிய சீர்குலைவு, பில்லியன் கணக்கான ரூபாய்கள் செலவில் ஆடம்பர வாழ்க்கை, இவற் றுக்குப்பின்னும், டிசம்பர்2001 தேர்த லில் அவர் பெற்ற உறுதியான வெற் றியின் பின்னும் சந்திரிகாவுக்கு முன் னால் நிலத்தை விறாண்டி அனுங்கிக் கொண்டிருப்பது ஏன்? அல்லது அவரும் ஹொர ஹொல்ல அடிமை களில் ஒருவரா?

அதிகாரத்துக்கான தாகம்

குமாரதுங்காவுக்கு செய லாக்கமளிக்கும் விடயமும், ஒரே விடயமுமாக அவரின் அதிகாரத் துக்கான தணிக்க முடியாத தாகம் இருக்கிறது. அது அவருக்கு பிறப் பால் வந்த உரிமை. ரணில் இதைப் புரிந்து கொள்ளவில்லை. சந்திரிகா, சரத்சில்வா ஆகியோர் மீதான அரசுப் பகைமைக் குற்றச்சாட்டு 2002 ஆண்டுக்கான ரணிலின் வேலைத் திட்டத்தில் முதலிடம் பெற்றிருக்க வேண்டும். அவர்கள் திருந்துவார்கள் என்று..... அவர்கள் புனர் ஜென்மம் எடுப்பார்கள் என்று அவர் எதிர் பார்த்தார். இப்போது அவர் கற்றுள்ள கசப்பான பாடங்கள், அவற்றுக்கான விலையைச் செலுத்தப்போகும் நாட் டுக்கு மக்களுக்கு ஆறுதல் தருவ தாக இல்லை. வரவு-செலவுத் திட்டம் சந்திரிகாவின் அற்ப ஆசைப்படி தடம் புரட்டப்பட்டதையடுத்து அடுத்து முழுப்பொருண்மியமுமே சுழல் காற் றுக்குள் அகப்பட்டு திணறுகிறது. ரணிலின் வெற்றிகர மீள்வருகை வரை பங்குச்சந்தை வீழ்ச்சியைச் சந்தித்தது. ரணிலைத் நாங்கள் தெரிவு செய்தது இதற்குத்தானா?

செருக்கு மிக்க அடாவடிக் காரருக்கு முன்னால் கூனிக்குறுகு வது தீர்வாக ஆகாது. பென்ஸ்சுகள் வீடுகள், மெய்ப் பாதுகாவலர்களை கொடுத்து லக்ஸ் மன் கதிர்காமருக்கு இசைவாக நடனமாடுவது தீர்வாகாது. நாடு ரணிலின் தலைமைத்துவத்தை எதிர் பார்க் கிறது சந் திரிகாவைக் கட்டுக்குள் வைத்திருப்பது ரணிலின் கடமைகளில் ஒன்றாகும். அண்மைய நெருக்கடியை ரணில் கையாண்ட விதம் நிபுணத்துவமானது.



தவறான கணிப்பு

அழுத்தங்களின் கீழ் அமை தியாக இருந்துகொண்டு, எல்லாவற் றையும் சரியாகச்செய்தார். கட்டுநா யக்கா வந்த பின் ஊடகவியலாள ருக்கு உரையாற்றும் பொழுது தப்பிக்கூட சந்திரிகாவின் பெயரை உச்சரிக்காமல் கவனமாக நடந்து கொண்டார்.

தனது பாராளுமன்ற பெரும் பான்மையை தெளிவாக எடுத்துக் காட்டியதும் அழுத்தத்தின் கீழ் ஒரு ஐ.தே.மு.உறுப்பினர் கூட கட்சி மாறா ததும் சந்திரிகாவை ஒரு முறை சிந்திக்க வைத்திருக்கும். ரணிலு டைய வெற்றிகரமான மீள் வருகை யின்போது மக்கள் தன்னியக்கமாக காட்டிய உணர்வலைகளும், அவை சந்திரிகா மக்களுக்கு ஆற்றவிருந்த உரையை 8மணி நேரம் தாமதிக்க வைத்தும், தான் எவ்வளவு மோசமான முறையில் தவறான கணிப்பீடுகளை மேற்கொண்டிருந்தார் என்பதை எடுத் துக்காட்டியிருக்கும்.

தானே வீசிய வாழைப் பழத்தோலில் தானே சறுக்கி விழுந்த சந்திரிகா எந்தப்பக்கம் திரும்புவது என்று தெரியாமல் முழிபிதுங்கு கிறார். எதிர்கட்சித் தலைவர் மஹிந் தராஜபக்ஷ போன்றோரின் முதிர்ச் சியான மதிப்பீடுகளை மதிக்காமல் தனது சகபாடிகளின் தாளத்துக்கு ஆட்டம் போட்டார். தன்னைத் தானே படுமுட்டாளாக்கிக் கொண்டார்.

ஆனால் துன்பத்திலிருக்கும் கதாநாயகியை மீட்கும் வீர நாயகன் போல், ரணில் தன் வெண்குதிரையில் வந்து சந்திரிகாவை மீட்டு விடுவாரோ என்று தான் மக்கள் பயப்படுகிறார்கள். அவருடைய பெருந்தன்மையை வைத்துப்பார்க்கும் பொழுது இது சாத் தியமற்றது என்று கூறமுடியாது. உதாரணமாக சபாநாயகர் பதவி யைத் தராவிட்டால் குடித்தே சாவேன் என்று அழுத அனுராவிற்கு அப்பத வியை வழங்கியதைக் குறிப்பிட லாம்.

மீண்டும் மீண்டும் எச்சரிக்கப் பட்டார்.

சந்திரிகாவை உரிய இடத் தில் வைக்கும் படி ரணிலின் கட்சி முக்கியஸ்தர்கள் திரும்பத் திரும்ப அவரை எச்சரித்திருந்தார்கள். சந்தி ரிகா ஒரு தேள் மாதிரி; அவர் கொட் டாமல் விடமாட்டார்; அது அவரது இயல்பு அதை வெல்ல அவரால் முடியாது என்றெல்லாம் கூறியிருந் தார்கள். ஆனால் கூட்டு ஆட்சி பற்றி கூறிக் கொண்டு தீமையுடன் உறவாட ரணில் முனைந்தார். அவர் காட்டிய அன் புக்கு பதில் அன்பு காட்டப்படவில்லை என்பதை ரணில் உணரவேண்டும். இந்த முறை அவரது கட்சி அவருக்கு திடமான முறையில் பக்கத் துணையாக நின் றது. இன்னொரு முறை அப்படி நிற் காமல் போகலாம். சந்திரிகா தன் னைத்தானே ஒரு மூலைக்குள் முடக் கிக் கொண்டு கூனிக்குறுகி வாலை சுருட்டிக்கொண்டு, குலை நடுங்க நின்றுகொண்டிருக்கிறார். அவரை, மக்கள் தீர்ப்புக்கு போகும்படி செய்ய வேண்டும். அல்லது ஜனநாயக ரீதி யான அனைத்து வழிகளிலும் அவரை வேட்டையாடவேண்டும்.

இந்த நாடு, இரண்டாவது தலை முறை பண்டாரநாயக்காக்களால் கடும்பாடுபட்டுவிட்டது. மூன்றாவது தலைமுறையினர் கைவரிசையைக் காட்ட தயாராகிக் கொண்டிருக்கிறார் கள் என்பது நிச்சயம்.

போதும்! போதும்!

சந்திரிகா இதைவிட மோச மான ஒரு சேதத்தை விளைவிக்கு முன், வெளியே போகும் வழியை அவருக்கு காட்டி, அவரது தீய செல் வாக்கில் இருந்து நாட்டைக்காக்க வேளை வந்துவிட்டது.

ஆங்கிலத்தில் :- உள்வீட்டுக்காரன் (த.சண்டே லீடர்)
தமிழில் : வின்சென்ற் புளோரன்ஸ்

மனிதனின் செயல்கள், அவர்கள் சிந்தனைகளுக்குச் சிறந்த விளக்கங்கள். – ஜான் லாக்

சமாதான முயற்சிகளின் பெயரால் காப்பாற்றப்படும் சிறிலங்கா

சிறிலங்காவின் நிறை வேற்று அதிகாரமுள்ள சனாதி பதிக்கும், நாடாளுமன்றத்துக்கும் இடையிலான முரண்பாடு ஒரு தீர்வை எட்டாமலும், இதற்குமேல் வளர முடியாமலும் இடைநடுவில் வந்து சிக்கிநிற்கிறது.

அரசியலமைப்பின் ஏற் பாடுகளால் தோன்றியுள்ள இந்த முரண்பாட்டுக்கு ஒரு தீர்வைக் காணமுடியாமல் நாடாளுமன்றப் பெரும்பான்மையுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நிலைகுலைந்துபோயிருக்க, தன்னுடைய அதிகாரத்தை இதற்கு மேல் பயன்படுத்த முடியாமல் சனாதிபதி சந்திரிகாவும் இடைநடு வில் மாட்டுப்பட்டுள்ளது போன்ற நிலையில் காணப்படு கிறார்.

2001ஆம் ஆண்டுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன் னணி அரசாங்கம் நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பெற்றது முதலே, எதிர்க்கட்சியைச் சேர்ந்த வரான சனாதிபதி சந்திரிகாவுக் கும், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கும் இடையிலான முரண்பாடு அவ்வப்போது வெளிப் பட்டுக்கொண்டே இருந்தது.

இன்னும் சொல்லப் போனால், நிறைவேற்று அதிகாரம் என்கின்ற ஒரு கூரிய ஆபத்தான கத்தி எப்போதுமே தலைக்குமேல் தொங்கிக்கொண்டிருந்த நிலையி லேயே, பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இவ்வளவு காலமும் தனது ஆட்சியை நடாத்தி வந்திருந்தது.

இந்தக் கத்தி எப்போதோ ஐக்கிய தேசிய முன்னணி அரசாங் கத்தைப் பதம்பார்த்திருக்க முடியு மாயினும், பிரதமர் தலைமையி லான அரசு மக்களிடம் பெற்றதா கச் சொல்லப்படுகின்ற சமாதானத் துக்கான ஆணை, அவர் மீதோ, அவருடைய அரசு மீதோ இந்தக் கத்தியைப் பலம் பார்க்கும் வாய்ப் பைத் தடுத்துவந்தது.

மக்கள் வழங்கிய இந்தச் சமாதானத்துக்கான ஆணையை ஏதோவொரு வகையில் தனது பிரதான அரசியல் செயற்பாடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு முன்னெடுத்து வந்தமையா லும், அந்த முயற்சிக்கு இருந்து வந்த மிக அதிகளவிலான சர்வ தேச ஆதரவு காரணமாகவும், நிறைவேற்று அதிகாரம் தனது வேலையைக் காட்டமுடியாத நிலை காணப்பட்டுவந்தது.

அதற்கேற்ற விதமான ஒரு உள்நாட்டு,சர்வதேச பாது காப்பு வலைப்பின்னலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்தியும் இருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க பின்னியிருப்பதாக அடிக் கடி சொல்லப்பட்டுவந்த இந்தச் சர்வ தேச வலைப்பின்னலென்பது, அவ ரையும், அவரது அரசாங்கத்தை யும் காப்பாற்றும் விதமாகவே கவனமாகப் பின்னப்பட்டிருந்தது.

ஆனாலும், பிரதமரின் இந்த வலைப்பின்னலின் பலத்தை குறைவாக மதிப்பிட்டோ, அல்லது வேறு ஏதோ மாற்றுத் திட்டங்களை நம்பியோ, பிரதமரது பாதுகாப்பு வலைப்பின்னலின் உருக்குக் கவசமான அமெரிக்காவில் அவர் தங்கியிருந்த சமயத்தில், நிறை வேற்று அதிகாரம் என்கின்ற கத்தியை ஐக்கிய தேசிய முன் னணி மீது இறக்கிப் பார்த்திருக் கிறார் சனாதிபதி சந்திரிகா.

ஐக்கிய தேசிய முன் னணி அரசாங்கத்தின் பிரதானமான மூன்று அமைச்சுக்களான படைத் துறை அமைச்சு, உள்துறை அமைச்சு, மக்கள் தொடர்பாடல் அமைச்சு ஆகியவற்றை அதற்குப் பொறுப்பாக இருந்த அமைச் சரிகளிடமிருந்து பறித்தெடுத்த சனாதிபதி சந்திரிகா, நாடாளு மன்றத்தையும் 19ஆம் திகதி வரையில் ஒத்திப்போட்டார்.

இது அவரது முதலாவது தாக்குதல்.இதற்கடுத்ததாகவும் பல தாக்குதல் திட்டங்கள் செயற்படுத் தப்படத் தயாராகக் காத்திருந்தன.

ஏறத்தாள, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை முழுவதுமாகக் கவிழ்த்து, நாடாளு மன்றப் பெரும்பான்மை யையும் பொதுசன ஐக்கிய முன்னணியே நிலைநாட்டக் கூடியதான ஒரு



நிலையை ஏற்படுத்துவது வரை யில் இந்தத் திட்டங்கள் கவனமாக வகுக்கப் பட்டிருந்தன.

ஆனால் பிரதமர் வகுத் திருந்த பாதுகாப்பு வியூகங்களை உடைத்துக்கொண்டு முன்னேறு மளவுக்கு சனாதிபதியின் திட்டங் கள் பலம்பொருந்திய வையாக இருக்கவில்லை.

படைத்துறை அமைச்சு, உள்துறை அமைச்சு என்கின்ற படைப்பலம் பொருந்திய இரண்டு அமைச்சுக்களை அவர் கையி லெடுத்துக்கொண்டிருந்த போதி லும், பிரதமரை அவற்றால் ஒன்றும் செய்துவிட முடிய வில்லை.

பிரதமரைப் பொறுத் தவரையில் இதையெல்லாம் அவர் எதிர்பார்க்காமல் இருந்தார் என்று சொல்வதற்கில்லை. சனாதிபதி யினால் இதையெல்லாம் செய்ய முடியும் என்பதை அவர் கணிக் காமல் இருந்துவிட்ட முட்டாளும் அல்ல.

இதைமட்டுமல்லாமல், ஒருவேளை சமாதான முயற்சிகள் முறிவடைந்து புலிகள் மீண்டும் போரை ஆரம்பித்தால் என்ன செய்வது என்பதையும் கூடக் கணக்கில் எடுத்தே அவர் தனது பாதுகாப்பு வலைப்பின்னலை அமைத்திருந்தார்.

அதனால்தான், அமெரிக் காவில் இருந்த சமயத்தில் அவரு டைய அரசாங்கத்துக்கு எதிராக சனாதிபதி சந்திரிகா நடவடிக் கைகளை எடுக்க ஆரம்பித்த போதிலும், அவர் அது தொடர்பாக வெல்லாம் பெரிதாக அலட்டிக் கொள்ளாமல், ஆறுதலாக திட்ட மிட்டபடி தன்னுடைய வேலை களையெல்லாம் முடித்துவிட்டு சாவகாசமாக நாடு திரும்பினார்.

''நான் நாடு திரும் புவதற்குள் இந்தப் பிரச்சினை களுக்கு ஒரு தீர்வு காணப்பட்டு விடும்'' என்று அவர் அவ்வளவு உறுதியாக அமெரிக்காவிலிருந்து அறிக்கைவிட்டதுகூட, தனது பாதுகாப்பு வலைப்பின்னலின் மீது கொண்டிருந்த உறுதியான நம்பிக் கையினாலேதான்.

பிரதமர் நாடு திரும்பு வதற்குள் இன்னும் பல விடயங் களைச் சாதித்துவிட எண்ணியி ருந்த சனாதிபதி சந்திரிகாவும் சும்மா இருந்துவிடவில்லை. அடுத்ததாக நிதியமைச்சையும் பறித்தெடுத்து, தன்னுடைய நடவ டிக்கைகளுக்கு ஏதும் எதிர்ப்புத் தோன்றினால் அதையும் சமாளிப்ப தற்கென்று அவசரகாலச் சட்டத்தை யும் பிரகடனப்படுத்த அவர் தயாராகி வந்தார்.

ஆனால், அதற்குள் பிரத மரின் பாதுகாப்பு வலைப்பின்னல் தனது வேலையைக் காட்டத் தொடங்கிவிட்டது.

சர்வதேச நாடுகள் பல வும் சனாதிபதியின் நடவடிக்கை குறித்து தமது ஆழ்ந்த அக் கறையை வெளிப்படுத்தியதுடன், சமாதான முயற்சிகள் இந்த நடவடிக்கைகளினால் பாதிக்கப் பட்டுவிடக் கூடாது என்றும் மெல்லிய தோறணையில் எச்சரித் திருந்தன.

அத்தோடு கூடவே, இதற்கு மேல் சனாதிபதி எந்த

றுசாங்கன்

வொரு நடவடிக்கையையும் எடுக்கக்கூடாது என்கின்ற அழுத் தத்தையும் அவை சனாதிபதி மீது பிரயோகித்திருந்தன.

அமெரிக்க அதிபரால் அனுப்பப்பட்ட விசேட தூதுவர் ஒருவரும், சிறிலங்காவுக்கான இந் தியத் தூதுவர் நிருபம் சென்னும் இந்த விடயத்தில் சனாதிபதி மீது அதிக அழுத்தங்களைக் கொடுத்த தாக நம்பப்படுகிறது.

இங்கே நாம் முக்கியமாக கவனிக்கவேண்டிய இரண்டு விடயங்கள் காணப்படுகின்றன.

முதலாவது, சனாதிபதி யின் இந்த நடவடிக்கை ஆரம் பித்தவுடனேயே, அதன் பின்னணி யில் இந்தியாவே இருந்து செயற் படுவதாகவும், இந்தியா தனக்கு உதவும் என்ற துணிவில்தான் சனாதிபதி இந்தளவு உறுதியாக நடவடிக்கைகளை எடுக்கத் தொடங் கியுள்ளார் என்றும் பலவிதமான அபிப்பிராயங்கள் தெரிவிக்கப் பட்டிருந்தன.

ஆனால், இந்த அபிப் பிராயங்களைத் தெரிவித்தவர்கள் பலரும், பிரதமரது சர்வதேச பாது காப்பு வலைப்பின்னலின் தன்மை யைச் சரியாக எடைபோடத் தவறி விட்டனர் என்றே எண்ணத் தோன்றுகிறது.

மிக அண்மையில் இந்தி யாவுக்கான விஜயம் ஒன்றை மேற் கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அவ்வளவு கால மும் அவரது அரசுமீது இந்தியா கொண்டிருந்த சந்தேகங் கள் பலவற்றையும் நீக்கும் வித மாக பல நடவடிக்கைகளை மேற் கொண்டுவிட்டே வந்திருந்தார்.

தனது சர்வதேச பாது காப்பு வலைப்பின்னலுக்குள் அமெரிக்காவைக்கூட இழுத்து வைத்திருந்த ரணில் விக்கிரம சிங்க, அருகிலிருக்கும் இந்தி யாவை அவ்வளவு இலகுவாக மறந்துவிடுவாரா என்ன?.

இந்த அவரது ஏற்பாடு கள் காரணமாக, சந்திரிகா எதிர் பார்த்தது போன்ற இந்திய ஆதரவு அவருக்கு துளியும் கிடைக்க முடியாமல் போனது. தனக்கு ஆதரவு திரட்டும் வகையில் இந்தி யப் பிரதமர் வாஜ்பாயைத் தொடர்புகொண்டு 20 நிமிடநேரம் தொலைபேசியில் பேசிப்பார்த்தும் சந்திரிகா எதிர்பார்த்த ஆதரவை இந்தியாவிடமிருந்து பெறமுடி யவில்லை.

இந்தியாவுக்கு பிடிக்காத ஒரு தரப்பு என்ற கணிப்பில் புலிகள் தொடர்பான பல முறைப்பாடுகளை யும் சொல்லி தனது நடவடிக்கை களுக்கு நியாயம் கற்பிக்க சனாதிபதி சந்திரிகா முயன்றிருந்த போதிலும், அவ்வளவையும் கவனமாகக் கேட்டபின்னரும், சமாதான முயற்சிகள் எவ்வித இடர்ப்பாடும் இன்றித் தொடர வேண்டும். அதனைப் பாதிப்புக் குள்ளாக்கி விடாதீர்கள் என்ற பதிலைத்தான் வாஜ்பாய் சந்திரி காவுக்கு வழங்கினார்.

இங்கேதான் நாம் கவனம் செலுத்தவேண்டிய இரண்டாவது விடயம் வருகிறது. இந்தியப் பிரதமர் வாஜ்பாயும்கூட சனாதிபதி சந்திரிகாவிடம் வலியுறுத்திய விடயம்,'சமாதான முயற்சிகளைச் சீர்குலைத்துவிடாதீர்கள்' என்பது தான்.

ஆக, இந்தச் சமாதான முயற்சிகள் சீர்குலைக்கப்பட்டு விடக்கூடாது என்ற அக்கறையை (முதன்மைப்படுத்தியே, சனாதிபதி சந்திரிகாவின் அனைத்துத் திட்டங் களுக்கும் சர்வதேச நாடுகள் பலவும் முட்டுக்கட்டை போட்டன.

இதுதான் பிரதமரின் வலைப்பின்னலின் பலம். அவர் இந்தச் சமாதான முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டே அனைத்தையும் திட்டமிட்டிருக் கிறார்.அதுவே உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அவரது அரசாங் கத்தைப் பாதுகாத்துவரும் உறுதி யான உருக்குக் கவசம்.

இதன் காரணமாக ரணி லைச் 'செக்மேற்' செய்வதற்கான சனாதிபதியின் 'ஒப்ரேன்' இடை நடுவில் சிக்கிக்கொண்டது.

அடுத்த கட்டமாக அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தி, முரண்டுபிடிக்கக்கூடிய ஐக்கிய தேசிய முன்னணி அமைச் சர்களை கைதுசெய்து, இன்னும் சிலரை விலைக்கு வாங்கி நாடாளு மன்றத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியின் பெரும்பான்மையை நிலைநாட்டுவதற்கு சந்திரிகா போட்டிருந்த திட்டங்கள் எல்லாம் ஆரம்பித்த வேகத்திலேயே தவிடு பொடியாகத் தொடங்கிவிட்டன.

அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பிரதமர் ரணில் விக் கிரமசிங்க, கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத் திலிருந்து ஊர்வலமாக மக்கள் ஆதரவுடன் கொழும்பு நோக்கி அழைத்துவரப்பட்டுக்கொண்டிருக்க, இங்கே அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி வர்த்தமானிப் பிரசுரத்துக்கென அனுப்பப்பட்டி ருந்த உத்தரவை சனாதிபதி திரும்பப் பெற்றுக்கொண்டார்.

ரணில் சுமார் ஒன்பது மணிநேர பயணமாக மக்கள் ஆதரவை வீதிவழியே நிலை நாட்டிக்கொண்டு அலரிமாளி கையை வந்தடைந்தபோது, அடுத்து அவரது அரசுக்கு நேர விருந்த ஆபத்துக்கள் பலவும் களையப்பட்டுவிட்டிருந்தன.

இப்போது தனது அடுத்த கட்ட நகர்வுகளில் இறங்கிவிட்டார் பிரதமர்.

சனாதிபதியின் இந்த நடவடிக்கைகளினால் சமாதான முயற்சிகள் பாதிப்படைந்துள்ளன என்று சொல்லி, சமாதான முயற்சி களை அவரே முன்னெடுக்கட்டும் என்று இப்போது 'சமாதான முயற்சிகள்' என்கின்ற பிரதானமான தனது பலம்பொருந்திய காயை நகர்த்தி சனாதிபதியை "செக் மேற்" செய்துள்ளார் ரணில். இப் போது சனாதிபதியின் நிலை தர்மசங்கடமாகியுள்ளது.

எதை அடிப்படையாக வைத்து தான் ஆட்சிக்கு வந்தாரோ, எதை அடிப்படையாக வைத்து தனது ஆட்சியைக் காப்பாற்றி வந்தாரோ, எது அவரது ஆட்சிக்கான சர்வதேச, உள்நாட்டுப் பாதுகாப்புக் கவசமாக இருந்ததோ, அந்த ஆயுதத்தைப் பயன்படுத்தியே சனாதிபதியின் முயற்சிகள் அனைத்தையும் தோற்கடிக்கவும், மீண்டும் தனது அரசை பலமான நிலைக்குக் கொண்டுவரவும் பிரதமர் தற்போது முயன்றுவருகிறார்.

தமிழர்களுடைய பிரச் சினைகளைத் தீர்ப்பதற்கான சமா தான முயற்சிகளின் பெயரால் மறுபடியும் ஒருதடவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அவரது அரசாங்கமும் காப்பாற்றப்படுகிறது. இந்த நன்றிக்காகவேணும் தமிழர் களுடைய பிரச்சினையைத் தீர்ப் பதில் உண்மையான அக்கறையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காட்டுவார் என்று நம்புவோம்.

அல்லாது போனால், தன்னை எல்லாவகையிலும் பாதுகாப்பதற்காக அவர் பயன் படுத்தும் இந்த ஆயுதம், 'பூமறாங்' போல திரும்பி வந்து அவரையும் பலிகொண்டுவிடும்.

மனிதனின் இலட்சியம், செயலாக்கம்; சிந்தனையல்ல;- அது எவ்வளவு சிறந்ததாயினும் சரி. - தாமஸ் கார்லைல்

கிளாயநாதம்

எல்லாம் விம்பங்கள்

என் விழிகளில் தெரிந்ததே - உன்
விழிகளில் தெரிந்தது - இது
எங்களிருவருக்குமிடையிலுள்ள
ஒற்றுமை
என நினைத்தேன் - ஆனால்
அவை வெறும் விம்பங்களென
இப்போது தான் தெரிகிறது.

வி.கனிஸ்கா.

சமாதானம்

பிள்ளை இன்னமும்
பிறக்கவில்லை...
அதற்குப்பெயர் கூட
வைத்துவிட்டார்களாம்.
.....
இதிலென்ன சிரிப்பு?
நமது சமாதானமும்
இது போலத்தானே??

சுபா.ஜெகநாதன்

மாற்றம்

பைந்தமிழால் பைங்கிளிகள் என்றெமை
பாவெடுத்து பாடியவர் - இப்போது
சிந்தை மாறி
விந்தை மிகு உலகின்
வீரப்பெண் புலிகள் என்று
வியந்து கவி பாடுகிறார்.

மா.தமிழவன்.

நம்பிக்கை

காலச்சுவரில்
மோதி மோதி
முழவே இதுவாய்
முழவாய் எண்ணி
வீழ்தழும் மனிதர்
துணிவேந்தி
நம்பிக்கையோடு
வானம் போகும்
சிட்டுக்குருவி

கு.தவசீலன்

நண்பா!

ஓ..... என்னினிய நண்பா
என்னைத் தெரிகிறதா?
இன்பங்களையும் துன்பங்களையும்
பரஸ்பரம் பரிமாறிக்கொண்ட
அந்த இனிய நாட்களை - நீ
மறந்து விட்டாயா?
நல்ல நண்பனாக இருந்த நீ
திடீரென பாதைமாறி - என்
நட்பை முறித்தாயோ?
நட்பின் மரணத்தை விட
நண்பனின் மரணத்தைச்
சகித்துக் கொள்ளலாம் என்பதை
நீ மறந்து விட்டாயா?
உன் நட்பின் இழப்பை என்னால்
தாங்க முடியாது என்பதையும்
நீ அறிவாயா நண்பா?

K.பிரகலாதன்.

சொல்லவேண்டிவந்த பொய்கள்

இந்திய இராணுவ ஆக்கி ரமிப்பிற்குள் எமது மண் அகப்பட்டு எமது போராளிகளும் மக்களும் பல இன்னல்களை சந்தித்துக்கொண்டிருந்த காலம் அது. இந்தியச் சிப்பாய்களுடன் சேர்ந்து தலையாட்டிகளாக ஆட்டியும், காட்டியும் கொடுத்து இனத்துரோகிகளும் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். இவ்வாறிருந்த காலப்பகுதியில் நான் சிறு பிள்ளையாக இருந்தேன். எனது மாமா எனது ஊரிலேயே போராளியாகச் செயற்பட்டுக்கொண்டிருந்தார். இதனால் அவரை கூடுதலாக எல்லோருக்கும் தெரிந்திருந்தது. அவரை இராணுவமும் தேடித்திரிந்த வண்ணமிருந்தது. அவர் அடிக்கடி ஊருக்குள் வருவதை அறிந்திருந்த இராணுவமும் அடிக்கடி சுற்றி வளைப்புக்களை மேற்கொண்டுவந்தது.

ஒரு நாள் நள்ளிரவின் பின் எமது வீட்டிற்கு வந்த மாமா இரவு தங்கினார். அன்று அதிகாலையிலேயே இராணுவம் ஊரைச் சுற்றிவளைத்துவிட்டது. ஒருவரும் வெளியேற முடியாத நிலை. என்ன செய்வதென தெரியாது தவித்த எனது அம்மா திடீரென மாமாவை கூட்டிச் சென்று படுக்க வைத்து விட்டு உடல் முழுவதையும் போர்த்து விட்டு வேப்பிலையை பிடுங்கி வந்து வீட்டு வாசலிலும் தலை மாட்டிலும் வைத்துவிட்டு பக்கத்தில் இருந்து விட்டார். இராணுவம் எமது வீட்டிற்கு வந்து சோதனையிட முற்பட்டபோது மாமாவிற்கு அம்மை நோய் என்று சொன்னபோது உடனே இராணுவத்தினர் வெளியேறி விட்டனர்.

இராணுவம் போன பின்பு அம்மாவின் முகத்தைப் பார்த்தேன். அதற்கு அம்மா இந்திய இராணுவத்தினருக்கு அம்மை நோய் என்றால் பயம் அப்படி செய்து மாமாவை காப்பாற்றியதாக அம்மா சொன்னார்.

அவ்வாறு அம்மா சொன்ன பொய்யால் மாமாவின் உயிர் காப்பாற்றப்பட்டது.

K.கீதா

ஊக்கமாத்திரை

விரக்தியை விரட்டுங்கள்

வாழ்வை வளமாக்கும் தூய உணர்ச்சிகளை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும் அப்படி வளர்த்துக் கொண்டால், நாமும் வளமாக வாழலாம்!

வாழ்வை அழித்துவிடுகின்றதும், அழித்துவிட முயல்கின்றதுமான தீய உணர்ச்சிகளை நாம் வளர விடக்கூடாது! நம்மையும் மீறி அவை நம் மனத்துள் எழும்போது, அவற்றை மனத்திலே பதியவிடாமல் கட்டுப் பாட்டுடன் இருந்து விரட்டி விட வேண்டும்! தீயஉணர்ச்சிகளை மனத்திலே பதியவிட்டுவிட்டால், அவை மனதிலே ஆழமாக வேரூன்றி விடும்! பிற உணர்ச்சி களைக் அகற்றித் தான் மட்டுமே வெறி கொண்டு எழுந்து தீயபழக்கங் களை மேற்கொள்ள நம்மை தூண்டி விட்டுக்கொண்டிருக்கும்!

இவ்வாறு, மனித வாழ்விலே, சில சமயங்களில் தோன்றி மனிதனை வாழவிடாமல் அழிக்கமுயல்வது தான் 'விரக்தி' எனும் உணர்ச்சி யாகும்.

'விரக்தி' என்றால் 'வெறுப்பு' என்று தான் பொருள். வெறுப்படைய வைக்கும் உணர்ச்சித்தூண்டுதல் தான் 'விரக்தி' ஆகும்.

வெறுப்பு எப்போது ஏற்படு கின்றது! விரும்பம் சிதையும் போது, வெறுப்பு நம் மனத்துள் கவிந்து விடுகிறது. விளக்கு அணையும் போது நம்மைச்சுற்றி இருட்டு கவிந்து கொள்வதைப் போல என்று இதை நாம் கூறலாம்!

இருட்டை நாம் விரட்ட வேண்டு மானால் என்ன செய்கின்றோம்? அங்கே ஒரு துளிவிளக்கை உடனே ஏற்றிவைக்கின்றோம். விளக்கு ஒளி பரப்பத் தொடங்கியதும், இருட்டுத் தானே விலகிப் போய்விடுகின்றது. அதை விரட்டு வதற்கென்று வேறு தனியான பகீரத முயற்சிகளிலே நாம் இறங் குகின்றோம்? அல்லவா!

வெறுப்பு எனும் விரக்தியை மனத்தில் இருந்து விரட்டுவதற்கு எளிமையானதும் பயனளிப்பதுமான ஒரே வழி, மனத்திலே விருப்பத்தை விளக்குப்போல ஏற்றி வைப்பது தான்! விரும்பம் படரப்படர வெறுப்பும் தானே விலகிப்போய் விடும்! விளக்குத்தானே ஏற்றிக் கொள்வதில்லை, நாம்தாம் அதை ஏற்றி வைக்க வேண்டும். அல்லது நாம் விரைவாக எழுந்து செல்ல முடியாத அசக்தி களாக இருந்தால் நாம் இருட்டிலே தவிப்பதைக்கண்டு, நம்மீது அன்பு டைய எவரேனும் நமக்கு உதவி செய்யும் வகையில் அதை ஏற்றிவைப்பர்.

அது போலவே நியாயமான முறையிலான விருப்பத்தையும் நாமா கவே உள்ளத்திலே ஏற்றிவளர்த் துக்கொள்ளவேண்டும். அல்லது, நம் உள்ளத்திலே நல் விருப்பம் வலு வாக எழுந்து படருமாறு, நமக்கு நெருங்கியவர் ஒருவர் நம் முன் தூண்டுதலை ஏற்படுத்த வேண்டும். இருட்டு வந்து கவிந்து விடும் என்று எதிர்பார்த்து நாம் சூரிய ஒளி மங்கலாகிவரும் மாலைப் பொழு திலேயே விளக்குகளை ஏற்றி வைத்துக்கொள்வதில்லையா?

•இப்படி ஏற்றிவைத்துவிட்டால் இருட்டு நம்வீட்டிலே வந்து கவியா மலே விலகிப்போய் விடும் என்று தானே நாம் முன்னேற்பாடாக இப்ப டிச்செய்து கொள்கிறோம்! அது போலவே,வெறுப்பாகியவிரக்தி வந்து நெஞ்சில் கவிந்துவிடும் என்று நமக்குத் தோன்றும் போது நாம் கவனமாக இருந்து, நம் நெஞ்சை அதுபற்றி விடாதவகையில் ஒரு தீவிரமான நியாயமான விருப்பத்தை நம் மனத்தில் ஏற்றிவைத்து, விரக்தியை அண்டவிடாதிருக்க வழிகாணலாமே!


விருப்பிலே மயங்காமலும், வெறுப் பிலே இருந்து போகாமலும் மனத்தை நிதானப்படுத்திக்கொள்வது விரக் தியை விரட்டும் இன்னொரு வழி.

இருட்டைப்பற்றிக்கவலைப்படாமல் வெளியே சென்று தம்வேலைகளை கவனித்து வருகிறார்கள் பலர். இருட்டைக்கண்டு இவர்கள் அஞ்சுவ தில்லை. இருட்டில் தடுமாறிவிழாமல் இருக்க இவர்களது கண்பார்வையும் இவர்களுக்கு துணை நிற்கிறது.

இப்படியே, அறிவுப்பார்வை தெளி வாக அமைந்து நமக்கு வழிகாட்டு மானால், உள்ளத்திலே அஞ்சாமை எனும் சக்தி இருக்குமானால், விரக்தியை நாம் பொருட்படுத்தாமல் அதை ஒதுக்கிவிட்டு நம் வாழ்வை இனிதே நடத்தலாம்.

நன்றி: விரக்தியை விரட்டுங்கள்

குறுக்கெழுத்துப்போட்டி - 46



இடமிருந்து வலம்

01. பூமி.
06. உடலில் உள்ள ஓர் உறுப்பு.
10. திருமணம்.
17. காட்டு மிருகம்.
20. தந்தை.
26. நிலம்.
38. மகன் என்பதற்கு எதிப்பால் குழம்பி உள்ளது.
43. கலண்டரில் இதனை பார்க்கலாம்.
47. நலம் தலைகீழாக உள்ளது.

மேலிருந்து கீழ்

01. நெருப்பு.
02. சூரியன், சந்திரன் மறைதல்.
04. மாலையில் மலரும் பூ.
17. அறிவுரை.
20. நோய்.
26. காடு.
35. வீசம்.
36. தொடக்கம்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.44 இன் விடைகள்

இடமிருந்து வலம்

01. அரங்கேற்றம்.
08. இந்திரன்.
13. இமை.
15. தட்சனை.
22. தாரகை.
41. காலை.
48. வீதி

மேலிருந்து கீழ்

01. அந்தரங்கம்.
06. இறப்பு.
07. மைதானம்.
23. தாலாட்டு.
24. கைக்கூலி.
26. உள்ளம்.
32. கோயில்.

இளையவர்களே!
மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.

குறுக்கெழுத்துப்போட்டி,இல.46
வேள்விநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

குறுக்கெழுத்துப்போட்டி இல.44 இன் பரிசுக்குரியவர்

அகல்யா அல்போன்சஸ்,
இல-04, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

குறுக்கெழுத்துப்போட்டி இல.44 இன், பாராட்டுக்குரியவர்கள்.

பொ.கீர்த்திதாசன்,
ஆரோபணம் இளைஞர்
இல்லம்,
கிளிநொச்சி.

பே.பிரியங்கா,
மு/விக்னேஸ்
வரா வித்தியாலயம்,
கோம்பாவில்.

க.அ.மலர்,
24,4ம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

கி.சிந்துஜன்.
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.

செ.குமுதினி,
ஆனைமுகன் வீதி,
ஆனந்தபுரம்.

த. தனுஷான்,
இணுவில் தெற்கு,
இணுவில்.

☞ தயங்கும் மனம், மிகத் தரங்கெட்ட உடமையாகும். – யூரிப்பிடீஸ்

துட்டகைமுனு காலை நீட்டி நிமிர்ந்தே படுத்தான்...?

பெருமாள் கணேசன்

1975ம் ஆண்டு 12 அம்சத் திட்டத்தை முன்வைத்த தமிழ், சிங்கள எழுத்தாளர் மாநாடு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டது. தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. குறிப்பாக, இனங்களுக் கிடையிலான முரண்பாடுகளை சிநேகபூர்வ முரண்பாடுகளாகக் கருதி உறவுத்தளத்தில் விட்டுக்கொடுப்பு முயற்சியில் அவற்றைக் களைதல் என்ற கருதுகோள் முன்வைக் கப்பட்டது.

மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய வேதாளமாகியது. முரண்பாட்டு குரோதங்கள் 1980 களில் தமிழ், தமிழர் புறக்கணிப்பு உத் வேகம் கொள்ளத்தொடங்கியது. இதன்பின் தொட்ர்ந்த விரோதம் இனத்துக்கு எதிரான வன்முறையாக தமிழர் வீட்டுக்குள் புகுந்து வெறியாட்டம் ஆடிய 1983ல்.

இந்த உச்சமான வெறியாட்டம் இரண்டு தேசங்கள், இரண்டு கலாச்சாரத் தளங்கள் இச்சிறு தீவில் அவசியம் என்ற நிலையை குறிப்பாக, வட - கிழக்குத் தமிழர்கள் மத்தியில் தோற்றுவித்தது.

இந் நிலையிலும் 1983களில் இனக்கலவரம் அதிகமாக கொடூரமாக அழிவு கள், அவமானங்கள் செய்யப்பட்ட மலையகத் தமிழர்கள் தமக்கென ஒரு எதிர்காலத் திட்டத்தினை முன்வைக்க, அதன் மீது தமது எதிர்கால அரசியல் இருப்பைக் கட்டி எழுப்ப, இ.தொ.கா. போன்ற அரசியல் தலைமைகள் மக்களை ஆற்றுப்படுத்தவில்லை என்பது கசப்பான சம்பவமாகும்.

சரி, 1975 எழுத்தாளர் மாநாட்டில் இரு மொழிசார் எழுத்தாளர்களும் எடுத்த தீர்மானம் ஒரு அரசியல் பரிமாணத்துக்கு முதிர்ச்சியடையாமை, குறிப்பாக அதற்கு எதிராக தமது தீர்மானத்துக்கு மரியாதை கிடைக்காதபோது சமாளித்து வாளாவிருந்த தமிழ், சிங்கள எழுத்தாளர்களை என்னவென்று கூறுவது.

ஏனெனின் இதன் பின்னர் கடந்த 29-10-2003 அன்று வடக்கு, கிழக்கு, மலையகம் மத்தியிலிருந்து தமிழ், சிங்கள படைப்பாளிகள் "ஹிரு" பத்திரிகையின் முன்னெடுப்பில் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் ஒன்று கூடி இலக்கிய, கலை முயற்சிகள் இன சௌஜன்யத்துக்கு ஆற்றவேண்டிய பணி பற்றிய ஒரு எழுதப்படாத உடன்பாட்டுக்கு வரும் இரண்டு நாள் உணர்வுப் பரிமாற்றங் களைச் செய்தது.

இது பல்வேறு பூட்கைகளின் வெளிப் பாடாக அமைந்த சிங்கள இனத்தவர்கள் தமிழர் களோடு கூடி வாழ்தல் மேலானது என்கின்ற விருப்பத்தை தெட்டத்தெளிவாக கோடிகாட்டி யுள்ளமை வெளிப்படை.

வடக்கு, கிழக்கிலிருந்து சென்ற தமிழ், முஸ்லிம் படைப்பாளிகளை தமது சகோ தரர்களாகக் கண்டு கொண்டமை எதிர்காலத்தில் ஒரு புதிய மாற்றமுறும் சமுதாயத்தை இந்த அழகான தீவு கொண்டிருக்கக்கூடும்.

29-10-2003 அன்று தமிழ், சிங்கள எழுத்தாளர் கலைக்கூடலில் சிஹல உறுமய வன்முறையில் ஈடுபட்டு இரத்தக்களரியை ஏற்படுத்தியது ஒரு புறம் நோக்கற்பாலது.

சகல சிங்களப் பத்திரிகைகளும் இதனை பொங்கு தமிழ் என்றும் புலிகள் நடாத்தும் ஒன்று கூடல் என்றும் விசமத்தனமாக பிரச்சாரப்படுத்தியமை தமிழர் தரப்புக்கு மிகவும் வேதனையையும் தமது அரசியல் எதிர்காலம் பற்றிய மீண்டும் ஒரு கேள்வியைத்தான் உருவாக்கியது. ஊடே பலமான பதிலையும் தந்திருக்கிறது.

சிங்கள கலை உலகின் மாபெரும் படைப்பாளிகளாகியவர்களும், இன சிநேகத் துக்கு ஆதரவும் ஊக்கமும் தரும் அரசியல் வாதிகளின் பிரசன்னமும் தமிழர்களுக்கு ஒரு புதுத்தெம்பை மேலும் ஊட்டி இருக்கிறது எனலாம்.

குறிப்பாக, நீண்ட காலமாக தமிழரின் அரசியல் எதிர்காலத்துக்காக குரல் கொடுத்து வரும் பேராசிரியர் சுசரித்த கம்லத், பாராளு மன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, அரசாங்க தரப்பின் ஜயலத் ஜயவர்த்தன போன்றவர்களின் வருகை அந்த மாநாட்டுக்கு சிறப்பம்சங்களாக குறிப்பிடலாம்.

"ஹிரு" இளைஞர்கள் முன்னெடுத்த இந்த சந்திப்பு எதிர்காலத்தில் ஒன்றுபட்ட இலங்கை இரண்டாகப் பிளவு பட்டுவிடக்கூடாது என அவர்கள் கருதியமையின் வெளிப்பாடு தான் இது எனவும் குறிப்பிடலாம்.

பல்வேறு இலக்கிய ஆதாரங்களின இடிப்படையில் இலங்கைவாழ் சிங்கள, தமிழ் மக்களுக்குள் நீண்ட பல ஆண்டுகளாக இறுக்கமான பண்பாட்டு உறவு இருந்திருக்கிறது என்பது வெளிப்பட்டது.

இந்துத் தத்துவங்களுக்கு பௌத்த தர்மம் அடிப்படையாய் அமைந்தும் உள்ளது.

'இது ஒரு பௌத்த சிங்கள நாடு' என அடிக்கடி இனவாதிகள் கூக்குரல் எழுப்பு வது இயல்பு....



உண்மையில் இவர்கள் புரிந்து கொள்ள வேண்டியது.....

பௌத்தம் சிங்களவர்களுக்கு மட்டும் சொந்தமான ஒரு நெறி அல்ல, அது குறிப்பாக தமிழ் நாட்டில் வாழ்ந்த தமிழர்களின் நெறியாக வும் இருக்கிறது.

ஐம்பெரும் காப்பியங்களுள் சில பௌத்த நெறியை அடிப்படையாகக் கொண் டதே. 'சிங்களம்' என்பதைப் பொறுத்தவரை யிலும் அது தமிழ் மொழியை அடியொற்றிய, அதன் இலக்கண, இலக்கிய வரண் முறை களைப் பேணுவதாக அமைந்தது. எழுத்தின் வடிவங்களும் ஒத்ததன்மைகளை உடையதே.

எனவே பௌத்த தர்மம் தமிழர் களுக்கு புதியதே அல்ல.

1948 சுதந்திரத்துக்குப்பின் ஆட்சிக் கதிரைகளை கைப்பற்றியவர்கள் மனங்களில் தூய்மையற்றவர்களாக நடந்துகொண்டதன் காரணமாக ஒருவரின் தனித்துவத்தை மற்றவர் வேறுபாடுகளாகப் புரிந்து கொண்டமையின் வளர்ச்சி தான் இன்று இந்தப் பிரிவினைப் போராட்டத்துக்கு வித்திட்டது.

சாதாரண மக்களின் மனங்களில் பரஸ்பர நட்பும், கொடுக்கல் வாங்கல் தரும் இதமாகவே இருந்து வந்துள்ளது.

இவ்வாறான வெளிப்பாடுகளின் மத்தியில் பேராசிரியர் சுசரித்த கம்லத், 1952ல் முதன் முதலாக நெஜிமென்டிஸ், தமிழர் களுக்காக இடது சாரி மேடை ஒன்றில் குரல் கொடுத்து முதன் முதல் இரத்தம் சிந்தினார். அவரது ஒற்றைக்கையையே இழந்தார்.

கடந்த 55 வருடங்களாக இலங்கை அரசியல் வரலாற்றில் இடதுசாரிக் கோட் பாடுகளுடைய எந்தக் கட்சியும் ஆட்சிப்பீடம் ஏறாமை தமிழர்களின் இனப்பிரச்சினை முதிர்ச்சியடையக் காரணமாக இருந்தது.

சிங்கள எழுத்தாளர்கள் இரு சமூகங் களினதும் ஒற்றுமைக்காக குரல்கொடுக்காமல் இருந்துவந்துள்ளார்கள். சிங்கள ஊடகங்கள் தேசம் பிளவுபடக்கூடாது என கவனமாக இருப் பதாகக் காட்டிக்கொண்டன. ஆனால் தேசத்தின் பிளவுக்கான செயற்பாடுகளை எதிர்மறை விளக்கத்தில் தமதாய் வரித்துக்கொண்டன.

ஹிருவின் முன்னெடுப்பைப்போல சிங்கள இளைய சமுதாயம், இன்னும் பல செயற்பாடுகள், ஒன்றுகூடல்கள் என்பனவற்றை நிகழ்த்தும் அவசியம் எழுந்துள்ளது.

இன்று நடப்பிலுள்ள அரசியல் செயற்பாடுகள், சிங்களச் சமுதாயத்தின் பிளவுண்ட, பன்முகத்தோற்றத்தையும் தமிழ்ச் சமூகத்தின் ஒருமுகமான செயற்பாடுகளையும் தெட்டத் தெளிவாக உலகுக்கு காட்டி நிற்கிறது.

ஹிரு போன்ற முற்போக்குச் சிந்தனை சிங்கள மக்களிடையே ஸ்தாபன ரீதியாக பல தளங்களிலும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். அவ்வாறு செல்லப்படும் பட்சத்தில் இலங்கையின் சௌஜன்யத்தில் மூலவேர்களை அவர்கள் காண்பார்கள்.

திரிபீடகத்துக்கு பொருள் எழுதப்பட் டது தமிழ் நாட்டில். உபாசக ஜனக்கவிய இந்திய மண்ணில் அதன் கலாச்சார பின் புலத்தோடு எழுதப்பட்ட பௌத்த இலக்கியம். சிங்கள, தமிழ் பழ மொழிகளில் காணப் படும் கருத்து ஒரு மைப்பாடு, சொகரி, கோலம் போன்ற தென்னிந்திய ஆடல் முறைமைகளோடு சிங்களக் கண்டிய நடனத்துக்கு உள்ள ஒற்றுமை என்பன "வரலாறு எமக்கு வழிகாட்டி" என சிங்கள மக்கள் மீள் பரிசீலனை செய்து தமிழ் சமூகத்தை அண்மிப்பதற்கான முயற்சிகளில் நவீன அரசியல் வடிவங்களைக்கொண்டு முன் னெடுக்க வேண்டியுள்ளது.

பேராசிரியர் சிவத்தம்பி அவர்களது மிகவும் இறுக்கமான தெளிவான உரை பண்டுதொட்டு நமக்குள் இருந்த பண்பாட்டுத் தொடர்பினை துலக்கியதாக அமைந்தது.இவர் இலக்கிய கலைகளில் தமிழ், சிங்கள கலாச் சாரங்கள் எவ்வாறு ஒன்றியிருந்தன என்பதற்கு பல ஆதாரங்களைக்குறிப்பிட்டார். சலலிஹினிப் பறவை முதன் முதலில் சிங்கள, தமிழ் பேச்சொலியைக் கேட்டதாக ஒரு இலக்கியத்தில் வருவதாகக் குறிப்பிட்டார்.

15ஆம் நூற்றாண்டு அடியார்க்கு நல்லார் என்னும் நூலிலிருந்தே கண்டிய நடனத்தில் இயல்புகள் பிறக்கின்றன என்றார். வீரசோழியமே சிதக்சங்கரா என்ற சிங்கள இலக் கியத்துக்கு அடிப்படையானது எனவும் சௌதாந்திரிக பௌத்தம் பற்றி சிவஞானசித்தியார் குறிப் பிட் டுள் ள தாகவும் கூறினார். மேலும் சிலப்பதி காரத்தின் பல் வேறு வாழ்வு மு றை க ளு ம் சிங்கள மக்களிடம் இன்றும் காணப் படுவதாகக் குறிப் பிட்டார்.

இவ் வா றான உறவு ஏன் அகன்றது, எம்மை யாளவந்த காலனித் துவ வாதிகள் சிங்கள, தமிழ் உறவில் விரிசலை ஏற்படுத்தினர், நாட்டை ஆண்டனர்.

பெருமாள் கணேசன்

எமது வரலாறு சிங்கள, தமிழ் அரசர்கள் இந்நாட்டை ஆண்டார்கள் எனக் குறிப்பிடுகின்றது. கண்டி கடைசி மன்னன் ஒரு தமிழன் என்பது வெள்ளிடைமலை.எல்லாளன் சிங்களவர்களது வாயில் அடிக்கடி உச்சரிக்கும் மன்னன். பின்னர் ஏன் தமிழர்களை 'சிஹல உறுமய' தரக்குறைவாக எண்ண வேண்டும்.

J.R.கண்டி யாத்திரை போக வேண் டும், பண்டார நாயக்கா ஓரே மொழி என்று சூளுரைக்க வேண்டும். செல்வாவுடனான ஒப்பந்தத்தை கிழிக்க வேண்டும், சிறிமா அம்மையார் மலையகத் தமிழர்களை அழ அழ நாடுகடத்த வேண்டும்- D.S.சேனநாயக்கா கந்தளாயில் நில அபகரிப்பை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் வாழும் இனங் களுடைய அரசியல் உரிமைப் பிரச்சினையை 'சமஷ்டி' எண்ணக்கருவின் மூலம் தீர்க்க வேண்டுமென முன்மொழிந்த S.W.R.D.பண்டார நாயக்கா 1926இன் பின்னர் அதனை நடைமுறைப்படுத்தினாரா?

செல்வநாயகத்துடன் செய்துகொள் ளப்பட்ட ஒப்பந்தத்தை ஈவிரக்கமின்றிக் கிழிந்தெறிந்தார். விடுதலைப்புலிகளுடன் சமாதான ஒப்பந்தம் அல்லது பேசுதல் என்று முன்மொழிந்த சந்திரிகா அதனை நடைமுறைக் குக் கொண்டுவர முயன்றாரா?

உள்நாட்டு இன முரண்பாடுகளுக்கு அரசியல் தீர்வு இறுதியானது எனத் தெரிந்திருந்தும் J.R.ஜெயவர்த்தனா ஒரு அந்நிய அதிசக்தியான இந்தியாவை உள்ளுக்குக் கொண்டுவர 29-07-1987 அன்று ராஜீவ் காந்தியுடன் செய்த ஒப்பந்தமே முதன் முதல் அந்நியத் தலையீட்டை வலிந்து வேண்டிக் கொண்ட கறைபடிந்த சம்பவமாகும்.

தமிழர்களின் அல்லது முஸ்லிம்களின் எதிர்கால அரசியல் உரிமைக்கு குழிதோண்டு வதாகவே அவரால் உருவாக்கப்பட்ட 1978ல் அவர் ஆக்கிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையிலமைந்த இரண்டாவது குடியரசு அரசியல் அமைப்பு.

இதன் செயல்ப்பரப்பு இற்றைவரை நீண்டு செல்வதும் புதிய சிந்தனைகளை அதிகாரப்பகிர்வு விடயங்களில் முன்னெடுக்க தடையாக நிற்பதும் அதுவேயாகும். எனவே, சகலருக்குமான உரிமை தோற்றுவிக்கப்படு வதாலும் மத்திய அரசின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தும் சட்டவாக்கத் தொகுப்பை இனிவரும் காலத்தில் முன்வைக்க, அடிமட்ட மக் களி டமி ருந் து உருவாகும் இளம் சமூகத் தின் திரட்சி அவசியம் ஆகியுள்ளது.

துட்டகைமுனு ஒழுங்காக காலை நீட்டித்தான் துயில் கொண்டான் என்பது தான் உண்மை. 1975ல் பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சிங்கள, தமிழ் எழுத்தாளர் ஒன்று கூடலாக இந்த ஒன்று கூடல் அமையாது அதன் பட்டறிவு இதனை பயனுறுதியுடையதாக்கும் என நம்பலாம்.

சிங்கள இளைஞர்களின் தமிழர்களுக் கான ரத்தம் சிந்தல் பயனுடையதாக அமையும்.

குணதாச அமரசேகா தனது அனைத்து எழுத்துகளையும் தமிழர் போராட்டம், தமிழரின் உரிமைக்கு எதிராகவே தீட்டினார் என பேராசிரியர் சுசரித்த கம்லத் வேதனைப் பட்டதுடன் தமிழர்களை நேசிக்கும் விதமாக எந்த இலக்கிய வாதிகளும் சிங்களத்தில் எழுத வில்லை..... என்றும் குறிப்பிட்டார். சிங்களவர் கள் மட்டுமல்லாது தமிழர்களும் தம் படைப்பு களூடாக இரண்டு இனங்களுக்குமிடையிலான புரிதலை ஏற்படுத்த உழைக்க வேண்டும். அதற்கு 'ஹிரு' அகரத்தைத் தொடக்கியிருக் கிறது. ஹிருவுக்குப் பின்னாலுள்ள பல்கலைக் கழக மாணவர்கள்,தொழில்சங்கவாதிகள், மனித உரிமை நிறுவனங்களோடு தொடர்புடையவர்கள் சிங்களவர்களின் கோட்டையான கொழும்பில் தமிழர்களுக்காக உயிரையும் கொடுப்பதற்கு தயாராக முன்வந்து காயங்களையும் வாங்கிக் கொண்டார்கள். நாமும், கரங்களை இறுகப் பற்றிக் கொள்வது, பலப்படுத்துவதன் மூலம் எமது விடிவுக்கு வலுவூட்டுவதாக அமையும். ●



☞ குடிப்பது என்பது என்ன? சிந்தனையை நிறுத்திய சிறிய ஓய்வு. – பைரன் பிரபு

எங்கள் மண்ணின் படைப்புக்கள்

கலாநிதி நா.சுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிட்டது போல எங்கள் இலக்கிய செயற்பாடு காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் புதிய படைப்பாளிகள் தான்.

புதிய படைப்பாளிகள் பன்முகப் பார்வை கொண்டவர்களாக எல்லாப் படைப்பாளிகளின் படைப்புக்களையும் படித்து சுவைக்காமல் விமர்சகர்கள் குறிப்பிடும் படைப்பாளிகளை/படைப்புக்களை மட்டும் படித்துக் களைத்தார்கள்.

முற்போக்காளர்கள், அவர் தம் விமர்சகர்கள் குறிப்பிடும் முற்போக்கு படைப்பாளிகளையும், கலைக்கோட் பாட்டாளர்கள் குறிப்பிடும் கலைத்துவப் படைப் பாளிகளையும் தனித்தனியே படித்தார்கள்.

உண்மையில் 1960க்கு பின்னர் சொந்த அடையாளங்களை முன்னுரிமைப் படுத்திய இலங்கை முற்போக்காளர்களின் செயற்பாடுகள் காரணமாக முற்போக்குச் சாயல் கொண்ட படைப்புக்களே இங்கு அதிகமாக படைக்கப்பட்டன.

கலைத்துவப் படைப்புக்கள் தொடர்பில் தமிழக படைப்பாளிகளே முன்னு தாரணங்களாக கொள்ளப்பட்டார்கள். கவனித்துப்பார்த்தால் எங்கள் கல்விப்பாரம் பரியம் போலவே படைப்புப் பாரம்பரியமும் அமைய முனைந்தது.

அது எவ்வாறு எனில் எங்கள் சாதாரண/உயர்தரப் பரீட்சைகள், பரீட்சைக்காகப் படிக்கும் மாணவர்களையே உருவாக்கியது.

ரீயூட்டரிகள் கேள்விக்கு விடை எழுதும் மந்திர தந்திரங்களையே மாணவர்களுக்குப் புகட்டியது. அதன் அடிப்படையில் சித்திபெற்றுப் பல்கலைக் கழகத்திற் கோ ஏனைய புலங்களுக் கோ செல்லும் மாணவர்களின் நிலை எப்படி இருக்கும்?

அவ்வாறான நிலையே எமது புதிய படைப்பாளிகளுக்கும் திகழ்ந்தது. விமர்சகர்களாக விதந்துரைக்கப்படும் படைப்பாளிகளையே இவர்கள் உருப்போட்டார்கள்.

இது கவிஞர்களையே அதிகம் பிடித்தாட்டியது. தமிழகத்து பிரபல கவிஞர்களை கொப்பியடித்தவர்கள் பலர். இப்போது அது மொழிபெயர்ப்பு கவிதைகள் பக்கம் சார்ந்து விட்டது வேறு விடயம்.

ஈழத்து கு.ப.ரா, ஈழத்து ஜானகிராமன், ஈழத்து மௌனி மாதிரியாக பாவனை பண்ண முனைந்தவர்கள் பலர். ஈழத்து சௌந்தர்ராஜன், ஈழத்து சிவாஜி, ஈழத்து சதன் என்ற மாதிரியான சுயபலம் இல்லாத நடவடிக்கைகளின் தொடர்ச்சிதான் இது.

எங்கள் ஆரம்பகால முன்னோடியான சி.வைத்திலிங்கம் அவர்களை ஈழத்து கு.ப.ரா. என்று தான் போற்றினார்கள்.

இதன் தொடர்ச்சிதான் புதியவர்கள் கலைத்துவ மோகம் கொண்டு தாம் தொடர்ச் சியாக படித்தவர்களை நகல் எடுத் தார் கள். நகலெடுத்து நகலெடுத்து



இலக்கியப்பகிர்வு

தாம் சார்ந்த விமர்சகர்களை திருப்திப்படுத் தினார்கள்.

"அவ்வளவு நெஞ்சுத் துணிவு! கிணற்றுக்கு கிட்ட வந்து செம்புச் சலத்திலும தொட்டு விட்டாயே அனுஷ்டான ஜலத்தில் தொட்ட உனக்கு அவ்வளவு தைரியம் வந்து விட்டது." (1939)

"..... இராமுழுவதும் 'குசுகுசு' வென்று கூடிக்கதைத்துத் தூக்கத்தைக் கெடுப்பதும் பகல் முழுவதும் ஆபிசிலிருந்து களைத்து வருகின்றவனை ஒரு நிமிட ஓயவிடாமல்....." (1944)

"காப்பியை அருந்திவிட்டு நடிகன் மேடையில் ஒத்திகை செய்து பார்ப்பதுபோல் ஏதோ எல்லாம் முகத்தைக் கோணலாக வைத்துக்கொண்டு - "

"சாயங்காலப் பத்திரிகையை சாரத்தின் வழியாகப் போட்டு விட்டுப் பத்திரிகைப் பையன் போய்விட்டான்." (1945)

"சரோஜாவின் தகப்பனார் எத்தனையோ வரனகளுடைய ஜாதகத்தைக் கொண்டுவந்து பார்த்துவிட்டார்." (1947)

இப்படி இந்திய சாயல் படிந்திருந்ததைத் தான் முற்போக்காளர்கள் சொந்த மண்ணை, அந்த மக்கள் பயன்படுத்தும் சொற்களை பேச்சுமொழியை படைப்பாக்க வழிசெய்தார்கள்.

எனினும் அது முற்போக்காளர்கள் தமது உள்ளடக்கத்தில் விட்ட தவறுகளால் எழுந்த எதிர்ப்புக்களாலும் அவர்கள் இலங்கைத் தேசியம் என்ற சிங்கள மாயையினுள் சிக்கியதாலும் பின் தள்ளப்பட்டுப்போனது.

இந்தப் பின்னணியிலேயே தமிழக, கலைத்துவ பிரபல்லியங்களின் பாணியை நேரடியாக சுவைக்காமல் புகையடித்தால் போல கலந்து படைப்புக்கள் புதியவர்களால் படைக்கப்படலாயிற்று.

எல்லாப் படைப்புக்களிலும் இவ்வாறான தன்மை இருந்தது என்று சொல்ல முடியாது. எனினும் பிரபலமாக விமர்சகர்களால் போற்றப்பட்ட பலரின் படைப்புக்களில் பிரித்தறிய முடியாத இவ்வாறான தமிழகத்து வாசம் பரவியிருந்தது.

உண்மையில் எங்கள் விடுதலைப் போராட்டம் உச்சம் பெற்று எங்கள் மண், எங்கள் வாழ்வு, எங்கள் பொருண்மியம் என்ற உணர்வு வெளிப்படையாக தெரிய வர ஆரம்பித்த பின்னரே எங்கள் மண்வாச னையை எங்கள் மொழியில் சொல்லும் பெருமளவு படைப்புக்கள் வெளிவரலா யிற்று.

அதன் ஆரம்ப கட்டம் தான் ரஞ்சகுமார் எழுதிய 'கோசலை', 'காலம் உனக்கொரு பாட்டு' எழுதும் கதைகளைக் குறிப்பிடலாம்.

எங்கள் மண்ணின் மாந்தர் எங்கள் உணர்வுகளை 'கோசலை', 'காலம் உனக்கொரு பாட்டு எழுதும்' போன்ற படைப்புகளில் வெளிப்படுத்தப்பட்டன.

சிதம்பரன்



அறிவுரை

எம். பி. பதவிக்காக தேர்தலில் போட்டியிட்டவர் உணர்ச்சி வசப்பட்டு ஆக்ரோசத்துடன் கத்தினார். இளைஞர்களே பதவிக்கு ஆசைப்படாதீர்.

- இந்திரஜித்

இலட்சியம்

இரண்டு கற்கள்

ஒருகல் பூந்தோட்டத்தில் ஏனோ தானோவென்று உலகம் பற்றிய கவலையின்றி சும்மா கிடந்தது. மறுகல் ஒரு வீட்டின் படிக்கல்லாகி, மனிதர்களை வீட்டுக்குள்ளே இட்டுச் செல்வது என்ற இலட்சிய வாழ்வில் ஈடுபட்டது.

என்ன அநியாயம்

பூந்தோட்டக் கல்லுக்கு ஒரு தொல்லையுமில்லை. படிக்கல்லோ தினமும் ஏறி இறங்குவோரின் உதைக்கு உள்ளாகிக் கொண்டிருந்தது. இருகல்லினதும் கதை தெரிந்த வீட்டுப்பூனை கூறியது இலட்சிய வாதி கதை எந்தநாளும் உதை.

- காசிஆனந்தன்

சுய சரிதைகள்...

"நான்" என்று பல இடங்களில் எழுத வேண்டி வரும் என்பதால் சுய சரிதை எழுத என்னால் முடியவில்லை.

-கலாயோகி ஆனந்தகுமாரசாமி

சுயசரிதை எழுதுவோர் இறந்த காலத்தை எழுதி நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் சூனியமாக்குவதால் அதனை நான் எழுத விரும்பவில்லை.

- ராஜாஜி

கண்ணதாசன் தனது சுயசரிதையான வனவாசம், மனவாசம் ஆகியவற்றில் தன்னை அவன் என்று குறிப்பிட்டே எழுதியுள்ளார்.

பாரதி வார்த்தை

தனக்குத்தானே நாயகனாக இருக்கும் உரிமை எல்லா மனித உரிமைகளிலும் பெரிது. ஆனால் இந்த உரிமை நால் வகை கிரியைகளாலும் இந்திய நாட்டில் மறுக்கபட்டுள்ளது. இந்த தேசத்தில் மனிதனுடைய புத்தி வழி தவறிப் போகாமல் இருக்க கிரியைகளாலும், சாஸ்திரங்களா லும் கையையும், காலையும் கட்டிப் போட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தேசம் அடிமைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஆகிறது

- மகாகவி பாரதி

ஒரு கடிதம்

அவசர சிகிச்சைப் பிரிவு,
போதனா வைத்திய சாலை.

என்றும் என்னால் மறக்கமுடியாத என் பரம விரோதி பரம்சோதி அறிவது, நான் வியத்தில் சிக்கி இறக்கும் நிலையில் இருக்கிறேன். அதுபோல நீயும் இருக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,
உனது விரோதி, வீரசிங்கம்

'நாயக நகை'

ஒருமுறை அமெரிக்க தூதுவர் ஒருவர் தமிழரசு தந்தை செல்வநாயகம் அவர்களை அவரது வீட்டில் சந்திக்க விரும்பினார். அதற்கு திருமதி செல்வநாயகம் அவர்கள் எமது வீடு அழகாக இல்லை, சந்திப்பை எனது அண்ணா வீட்டில் வைத்துக் கொள்ளலாம் என்றார். அதற்கு தந்தை கூறினார், தூதுவர் செல்வநாயகத்தைத் தான் பார்க்க விரும்புகிறார் ... அவரது வீட்டையல்ல.

வேதனைச் சீரிப்பு


கோழி:
ஏன் கவலையா இருக்கிறீங்க?

சேவல்:
இன்றுதான் உன்னை கடைசியாகப் பார்க்கிறேன்...!

கோழி:
ஏன் அப்படிச் சொல்றீங்க..?

சேவல்:
எங்கள் வீட்டு எஜமானியின் மகன் கொழும்பில் இருந்து வந்திருக்கிறார்....!

பொறுக்கி



ஈழத்து நூல் கண்காட்சி

காற்றுவெளி சஞ்சிகை ஆதரவில் லண்டனில்:
TRINITY HALL
East AVENUE,Eastham
London. E12

என்னும் இடத்தில் 22 நவம்பர் 2003 பிற்பகல் 3.00 மணிமுதல் 8.00 மணிவரை நடைபெறவுள்ளது.
இந்த கண்காட்சியில் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் மற்றும் படைப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதனைக் கவிஞர் முல்லை அமுதன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

31ம் நாள் நினைவலைகள்

பிறப்பு
03-05-1985

இறப்பு
22-10-2003

புவனேந்திரன் பாலமுரளி
(முரளி)



பதினெண் வருடங்கள்
வேய்ங்குழலாய் ஒலித்து
முகாரியில் எம்மை
மூழ்கடித்து போனதென்ன.

முகவரி: 07ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(சி-8716)

தகவல்:
குடும்பத்தினர்.

பக்தியை நான் மதிக்கிறேன்; ஆனால் ஐயப்பாடே கல்வியை உனக்குப் புகட்டுவது. விஸ்சன்மிஸ்னர்



அனுமார் பதில்கள்

● **அனுமாரே! 27 ஆண்டுகளாக அரசியலில் இருந்தும் எவ்வித பலனும் அனுராவுக்குக் கிடைக்கவில்லை எனப் புலம்புகிறாரே?**

கே.தாஸ்,
யாழ்ப்பாணம்.

ஏனோ தெரியவில்லை. பண்டாவின் சாணக்கியம் அவரிடம் இருக்கவில்லைத்தான்.

● **தமிழர்களின் விழாக்களில் மிகச் சிறந்த விழா எதுவென்று கூற முடியுமா?**

மு.ரவி,
வேணாவில்.

நாம் தமிழீழம் காணுகின்ற அந்த பெரு விழாதான்.

● **அனுமாரே! ஏன் பெண்களுக்கு மட்டும் எங்கு சென்றாலும் முதலிடம், ஏன் பாகுபாடு?**

சிறிகரன்,
ஜெயந்திநகர்.

ஏன் நீர்மட்டுமே அதைச் செய்து நல்லபிள்ளையாக பார்க்கிறீரா, பொறாமையை விட்டுவிடும் சிறி.

● **சமாதானம் என்பது தமிழ் மக்களுக்கு; அணில் ஏறவிட்ட நாய்மாதிரி இருக்குமா? அல்லது வெற்றி கிடைக்குமா?**

கானப்பிரியா,
மல்லாவி.

கானப்பிரியா எப்போதும் விழிப்புடன் இருங்கள்.

● **ஒரு நாட்டின் விடுதலைக்காக சாவடைந்த ஒரு வீரனின் உருவப்படத்தை பத்திரிகையின் பின் பக்கத்திலும், ஒரு சினிமா நடிகரின் படத்தை முன் பக்கத்திலும் பிரசுரிக்கும் பத்திரிகை நிறுவனங்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்?**

க.ஜெகதீபன்,
அல்வாய் வடக்கு.

அவர்களும் என்னைப் போல ஒருவரை வைத்திருப்பார்கள் தானே. அவர்களிடமே கேட்டுவிட்டு பதிலை எழுதவும்.

● **அறுபதிலும் ஆசைவரும் என்கிறார்களே, ஆசை என்பது எப்படிவந்தது? எப்போது இல்லாமல் போகும்.**

இரா.மாலா,
றெட்பானா.

முதலில் உங்களுக்கு இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டுமென்று ஆசை எப்படி வந்தது? எப்போது இல்லாமற்போகும்.

● **எனக்கு ஆதிகாரம் உள்ள அக்கா ஒருவரை தேர்ந்தெடுக்க ஆசைப்படுகின்றேன். அவரை எப்படித் தேர்ந்தெடுக்கலாம்.**

மாலா,
இளங்கோபுரம்.

அனுராவை பார்த்தபின்பும் உமக்கு அந்த ஆசை விடவில்லையா?

● **அன்புடன் அனுமாரே! உயிரைப்பணயம் வைத்தாவது கொழும்பில "பொங்குதமிழ்" நடத்தினால் போராடப்போவதாக திலக் கருணாரட்ண கூறியுள்ளாரே?**

கே.கஜி,
யாழ்ப்பாணம்.

அந்தப் பணயத்தை குரங்குப் பாஞ்சானில் வைத்திருக்கலாமே திலக் கருணாரட்ன வீர புருஷனாகச் செத்திருக்கலாம்.

● **அனுமாரே! நீர் எமது நாட்டில் சண்டை நடக்கும் போது எங்கே ஒழித் திருந்தீர்?**

வ.கீதா,
அக்கராயன்குளம்.

அந்தநேரத்தில் நான் எங்கேயும் ஒழித்திருக்கவில்லை: நீங்கள் தொடர்புகொண்டிருக் கலாம் தானே என்று நான்சொல்ல உங்கள் முகவரி தெரியாதே என்று நீங்கள் கூற அதைத்தான் நான் தொலைத்து விட்டிருந்தேன் இவ்வளவுநாளும்.

● **நான் யாரையும் காதலிக்க வில்லை. ஆனால் எனது நண்பர்கள் எனது உடை, நடை,பாவனையை பார்த்து விட்டு நீ யாரையோ காதலிக் கிறாய் என்று நக்கலடிக்கிறார்கள். என்ன பதில் சொல்லலாம்?**

தி. சுரேஸ்கோபி,
உடையார்கட்டு.

நடையை மாற்றுங்கள், பாவனையை மாற்றுங்கள், முடியாவிட்டால் நண்பர்களையே மாற்றி விடுங்களேன்.

● **ஈராக் வான்பரப்பில் அமெரிக்க வானூர்திகள் அடிக்கடி விபத்துக்குள்ளாகின்றனவே?**

செ.கருணா,
கணேசபுரம்.

புஷ் ஏனையவர்களை சிறுமையாகப் பார்த்ததன் விபத்து இன்று ஈராக்கில் அமெரிக்கர்களின் விதியை எழுதும்படியாக்கிவிட்டது. விதிதான் புஷ்சிற்கு விபத்தாகப்படுகிறதோ!

● **இந்த ஆண்டின் சிறந்த நகைச்சுவையாளர்விருதை யாருக்குக் கொடுக்கலாம்?**

ச.றாகவன்,
சாவகச்சேரி.

சுப்பிரமணிய சுவாமிக்குத் தான். இலங்கைமீதான இந்தியாவின் அக்கறைக்கு திடீரென எழுந்து பாராட்டுத் தெரிவித்திருந்தாரே.

● **அனுமாரே வணக்கம்! ஏதாவது ஒரு சம்பவத்தைக்கூறி "எனக்குத் தலை,கால் புரியவில்லை" என்கிறார்களே அவர்களைப் பற்றி உம்மால் எதுவும் கூறமுடியுமா?**

க.ரதீஸ்,
மன்னார்.

நன்றாகவே. முதலில் நின்று நிதானித்தால் கால் புரியும், அப்புறம் தலை புரியும் தானே.

● **அனுமாரே! இக்காலத்தில் வயது வந்தவர்கள்கூட குழந்தைகள் போல நடித்துத் திரிகின்றார்கள் இவர்கள் பற்றி.**

சி.மதுவிழி,
பரந்தன்.


எந்த "வயது வந்தவர்களை" குறிப்பிடுகிறீர்கள். ஒரு சாராருக்கு வயதுவர குழந்தைத் தனம் தானகவே வரும். மறுசாராருக்கு ஏன்வருகிறது? கவனமாய் இருங்கள்!

● **அனுமாரே! போகிறபோக்கில் சமாதானப் புறா எங்கடபக்கமே வராதுபோலஇருக்கே?**

க.ரமேஸ்,
வவுனியா.

அதைத்தானே பங்குபோடுவதற்காக கடும் ஏற்பாடுகள் தெற்கிலே நடக்கிறதே. ●

படத்திற்கு மெருகூட்டுங்கள் –44



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள் –44

.....

.....

.....

.....

பெயர் : .....

முகவரி : .....

.....

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

படத்திற்கு மெருகூட்டுங்கள் –43



ந.பிரியா,
51, கட்சன் வீதி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

பரிசுக்குரிய வரிகள்

எத்தனை மனிதர்களின் உணர்வுகளை – தினம்
பத்திரப்படுத்திய அஞ்சலியே
அத்தனை பேர் கண்பட்ட பின்னும் – உன்
உடைந்த கோலம் அப்படியே .

பாராட்டுக்குரிய வரிகள்

உறவுகளை ஒன்றுசேர்க்கும் காகித தாங்கியே
உனது உன்னத பணி எங்கே?
பற்றைகள் உனைச்சூழ உருக்குலைந்து நிற்கின்றாய்
மீண்டும் இம் மண்ணில் நீ உருப்பெறமாட்டாயோ?

பா.தர்சினி,
செல்வபுரம்.

சிவந்த மேனியுடன் சிரித்து நின்றாய்
வாய் திறந்து தந்ததை வாங்கினாய்
வான் பரப்பில் வந்தது வல்லூறாய்
போட்ட குண்டில் பொலிவிழந்து போனாய்.

செள.சர்மிலா,
புதுக்குடியிருப்பு.

இது யுத்தத்தின் எச்சம்,
தமிழர் துயரத்தின் சின்னம்,
இதன் மேனியிலே கன்னம்
வைத்ததந்த செல்லின் சன்னம்.

இ.பிரகலாதன்,
கீரிமலை.

இடுப்பின் கீழ் இயங்காத அண்ணாவுடன்,
பொட்டில்லாத அம்மாவுடன்
கண்ணிவெடி நிலத்தில்
ஆக்கிரமிப்பின் சாட்சியாக நீயும்.

கா.ஓவியன்,
கிளிநொச்சி.

ஆலயத்தில் அபயம் இருந்தோரை
அழித்த கதை ஆறாத துயரம்
பரந்த வெளியில் இருந்த
பரம தேவனின் கூடு சிதைந்தது மாறாத வடு.

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை அருச்சுனா புகைப்படக் கலையகம் வழங்குகின்றது.

புதுக்குடியிருப்பு , கிளிநொச்சி.

"வடமாகாணத்தின் மாபெரும் கணனிக் காட்சியறை"

நோதேன் ரெக்னோலஜி பிறைவேட் லிமிட்டட்

NORTHERN TECHNOLOGY(PVT)LTD

NORTHERN TECHNOLOGY

- சகலவகையான கணனிகளையும் நீங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
- இலங்கையில் எப்பிரதேசத்திலும் இல்லாதவாறு இரண்டு வருட உத்தரவாதம்
- இலகு தவணைக்கட்டண முறை

யாழ்ப்பாணத்தில்:-
இல:20,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021-222 5653

வவுனியாவில்:-
இல:-52,2ம் குறுக்குத்தெரு,
வவுனியா.
T.P:-024-2221649

மன்னாரில்:-
இல:-31A,ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.

(சி-8539)

"கணனி உலகின் காட்சிப்பெட்டகம்"



இளநிலை முதுநிலை அதிகாரிகளாக பயிற்சி பெற்று வெளியேறும் போராளிகளுக்கு சான்றிதழ் வழங்கிக்கௌரவிக்கும்
தளபதிகளான புலனாய்வுத்துறைப்பொறுப்பாளர் ச.பொட்டு, கேணல் தீபன், கேணல் ஆதவன் ஆகியோரையும் மேல் உள்ள படங்களிலும்...

மண்ணோற்றில்

இளநிலை.முதுநிலை அதிகாரிகளுக்கான பயிற்சி நிறைவும் லெப்.கேணல் அன்பு அவர்களின் 10ம் ஆண்டு நினைவும்



பயிற்சிக்கல்லூரியை திறம்பட நடத்த ஒத்துழைத்த தளபதி கேணல் சொர்ணத்திற்கும் பயிற்சிக்கல்லூரி ஆசிரியராக செயற்பட்ட க.வே.பாலகுமாரன் அவர்களுக்கும் தளபதி கேணல் பால்ராஜ் அவர்கள் பரிசில் வழங்கிக்கௌரவிப்பதையும், பயிற்சிக்கல்லூரியை திறம்பட வழிநடத்தியமைக்கு கேணல் பால்ராஜ் அவர்களுக்கு கேணல் பாணு அவர்கள் பரிசில் வழங்குவதையும் காணலாம்.



ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
திரு.சுப்பையா சாந்தலிங்கம்

(சரவணை மேற்கு, வேலணை, யாழ்.)

மண்ணுலகில்
1940–12–18

திதி:
2003-11-23

விண்ணுலகில்
2002–12–03

வையகம் தன்னில் வாழ்வாங்கு வாழ்ந்து
வழிகாட்டிய எமது அன்புத்தெய்வமே!
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டானாலும்
என்றென்றும் உமது நினைவுகள்
மாறாது மறையாது!
உங்கள் ஆத்மா சாந்திக்காக எல்லாம்
வல்ல இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

. உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

அமரர்
திரு.சுப்பையா சாந்தலிங்கம்
(ஸ்ரீ பத்மா றேடர்ஸ்,
அருள்மணி பல்பொருள் வாணிப உரிமையாளர்)

ஸ்ரீ பத்மா றேடர்ஸ்,
அருள்மணி பல்பொருள் வாணிபம்.
யாழ்சாலை,கிளிநொச்சி.

கணேசபுரம்,
கிளிநொச்சி.

(பி:8807)

EXPOAIR
your friend in the skies
எக்ஸ்போ எயார்
யாழ்-கொழும்பு பயணத்தின் போது
ரோல்ஸ் ரோய்ஸ் இயந்திரத்தின்
சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் -
021-2223891,021-2226297, 074 512666,
011-2360291, 0712-348888,0712-349999,
011-2360290.
e-mail- jaffna@expoavi.com
இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை
C-8540

இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.